நம பரப்ரஹ்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-5.	சென்னை: பிரமோதூதஸு ஐப்பசிமீ 1உ	இதழ்-55.
Vol. 5.	1930-ம்ஸு அக்டோபர்மீ 16உ	No. 55.

ஆநந்த தரிசனம்

"சாதன சதுஷ்டயங்கள்." இவை நான்கு வகைப்படும். (1) நித்திய வஸ்து, அநித்திய வஸ்து என்று அறிகிற விவேகம்: அதாவது, சத்தாகிய பிரமம் ஒன்றே சத்தியவஸ்து வென்றும், அதுவே நித்தியவஸ்து வென்றும், மாயா கல்பிதமாகிய உலகம் பொய்யென்றும், அநித்தியவஸ்துவென்றும் செவ்வையாய் அறிவது. (2) இஹமுத்திரார் பலபோக விராகம்: அதாவது, பூலோக ஸ்வர்க்கலோக போகங்களை வெறுத்திருப்பது. (3) சமாதி ஷட்க சம்பத்தி; அதாவது, சமம்—தமம்—திதிக்ஷை—உபரதி—சிரத்தை-சமாதி என்பனவாம். இதில் சமம் என்பதன் பொருளாவது:—உட்கரணங்களான மனம், புத்தி, சித்தம், அஹங்காரம் என்னும் இவற்றை உலக விஷயங்களில் செலுத்தவொட்டாமல் தடுத்தலாம். தமம் என்பதன் கருத்தாவது:—பர கரணங்களான செவி, த்வக்கு, சக்ஷுர்ஜி வர்க்கம் ஆக்கிருண—இவை சப்தாதி விஷயங்களில் செல்லவொட்டாமல் மறுத்தலாம். திதிக்ஷை என்பதன் விவரமாவது:—சீதோஷ்ண, சுகதுக்கங்களானவைகளில் சம சித்தத்தை யுடைத்தாயிருப்பதாம். உபரதி என்பதன் அருத்தமாவது:—மெதுவாய் சர்வ கர்ம பரித்தியாகம் பண்ணுதலாம். சிரத்தை என்பதன் தாத்பரியமாவது:—குரு—சாஸ்திர—தெய்வங்களிடத்தில் விசுவாசம் உண்டாயிருத்தலாம். சமாதானம்: (சமாதி) குரு உபதேசத்திலும் சாத்திரத்திலும் சந்தேக மில்லாம

மற்றவன் தன் வித்தியாசமான குணத்தைக் கண்டு, அது மனதுக்குப் பிடிக்காமல் விலகிக்கொள்ளுகிறபோது, அந்தக் குணமுள்ளவர்களும் அந்த ஜாடை தெரிந்து மெதுவாய் ஒதுங்கும்படியாக சேர்ந்துவிடுகிறது.

விருப்பதாம். (4) மோக்ஷத்தின் மீது அபேக்ஷை. பந்தத்தினின்றும் விடு பட்டு முக்தியைப் பெறுவதற்காக ஆசாரியரின் கருணையை எதிர்பார்த்துக் கொண்டிருத்தலாம்.

ஃ

"ஒன்பதுவகைப் பக்தி." அவையாவன:—(1) சிரவணம், (2) கீர்த் தனம், (3) ஸ்மரணை, (4) சேவை, (5) அர்ச்சனை, (6) தாசியம், (7) வந்தனம், (8) சகியம், (9) ஆத்ம நிவேதனை ஆக ஒன்பது வகை. (1) சிரவணம்—பகவா னுடைய மகிமைப் பிரபாவங்களைச் சிரத்தையுடன் கேட்பது; பக்தர்களின் சரித்திரங்களைப் பாராயணம் செய்வது. (2) கீர்த்தனம்—தெய்வ நாமங்களைப் பரிசுத்த மனதுடன் பாடித் தொழுதல். (3) ஸ்மரணை—பகவந் நாமங்களை மந்திரங்களோடு ஏகாந்தமாய் மனதில் உச்சரித்தல். மகான்களையும் இவ்வா றாகவே தியானித்து வழிபடல். (4) சேவை—பகவானை சேவித்தல், பெரி யோர்களை வணங்குதல். (5) அர்ச்சனை—மனத்தாலும், கரங்களாலும் புஷ்பங் கள் கொண்டு கடவுளைப் பூசித்தல். (6) தாசியம்—கடவுளைக் காண்பதற் கில்லாவிடினும், அவரது அடியார்களை அந்த நிலையில் கருதி அன்னோருக்கு வணங்கித் தாழ்ந்து ஊழியம் புரிதல். (7) வந்தனம்—பகவானையும் அடியார் களையும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தல். (8) சகியம்—"ஸர்வ தர்மங்களையும் விட்டு என்னை ஒருவனையே சரணமாக அடைவாயாக; நான் சமஸ்த பாவங்களி லிருந்தும் விடுவிக்கின்றேன்; துக்கிக்க வேண்டாம்" என்று பகவத்கீதையின் 18-வது அத்தியாயத்தில் பகவான் அருளியதைச் சிந்தித்து, சர்வ பற்றுக்களை யும் விட்டு அவருக்கே தன்னை அர்ப்பணம் செய்து அவரையே கதி யெனப் பற்றுதலாம். இவ்விதமே ஆசாரியரிடத்தும் பக்தி கொள்வதாம். (9) ஆத்ம நிவேதனை—தன்னைப் பகவானுக்கு மேற்கண்டவாறாக அர்ப்பணம் செய்து எவ்வித உலக விசாரமு மின்றி ஆநந்தத்தோ டிருத்தலாம்.

ஃ

"முதலில் போகி, பிறகு தியாகி." முன்னால் காமி. பின்னால்தான் மோக்ஷ காமி. இதுதான் சாத்தியமும் நடக்கக் கூடியதுமாகும். அப்படிக் கின்றி உலக முழுதும் ஒரே கணக்காய்த் திடீரென்று ஸந்நியாஸம் வாங்கிக் கொண்டால், இன்று கிடைக்கக்கூடிய களாக்காயும் போய்விடுகிறது; நாளைய பலாக்காயும் வந்தபாடில்லை. பிறகு "உள்ளதும் போச்சடா நொள்ளைக் கண்ணா" என்ற கதையாக வல்லவோ முடியும்? பௌத்த ராஜ்ய காலத்தில், ஒவ்வொரு மடத்திலும் லக்ஷக் கணக்கான ஸந்நியாஸிகள் கூடி யிருந்தன ரென்றால், நாடு முழுதும் நாச மடைய நமன் வாயில் விழுந்துவிட்ட தென்பதற்கு வேறென்ன வேண்டும்? "மோக்ஷத்தை விடச் சிறந்தது வேறொன்றுங் கிடை யாது; ஆகையால், ஒருவர் தப்பாமல் எல்லாரும் அடைய வாருங்கள்" என்று பௌத்தர் சொல்லினர். ஆமாம், அது சாத்தியமானதா? "நீ கிருகஸ்தன், உனக்கு அந்த சங்கதிகளில் ஜோலி ஒன்றும் வேண்டாம்; உன் ஸ்வதர்மத்தை நீ அநுஷ்டி" என்று வேத சாஸ்திரங்கள் உபதேசிக்கின்றன. வாஸ்தவந்

அடுத்த நிமிஷத்தில் சிறைக்குப்போக இருந்தும் தெய்வச்செயலாய் காராக்கிருகவாஸம் தப்பியவர்கள் அதற்கடுத்த சில மாதங்களில் தங்களின் முக்கியஸ்தர்களில் ஒருவரை மரணதேவதை யழைத்துக்கொள்வதைக் கண் ணால் காண்கிறார்கள். மரிக்கப்போவோரின் அருகில் இருப்பதற்கே அவர்க ளின் சிறைவாசம் கடவுளின் அருளால் தப்பியதோ என்னவோ!

தானே அது. உன் குடும்பத்தையே போஷிக்க உன்னால் முடியவில்லை. பத்து பேருடன் கலந்து ஒரு ஸாமான்யமான உபகாரம் செய்ய உனக்கு சக்தி காணோம்; இந்த நிலையில் நீயா மோக்ஷம் வேண்டுமென்று பறக்கிறாய்? வேத சாஸ்திரங்கள் சொல்வதைக் கேள். "தர்மத்தைவிட மோக்ஷம் எவ்வளவோ சிறந்ததென்பதற்குச் சந்தேகமே கிடையாது. ஆனால், முதலில் தர்மத்தைச் செய்யவேண்டும்." பௌத்தர்கள் இந்த இடத்தில்தான் ஏமாறிப் போய்விட்டனர். கடமையைச் சரிவரச் செய்தலாகிய வழியில் தர்மத்தைப் பின்பற்றி நடந்து, அதே தருணத்தில் அதில் பற்றில்லாதவனாய் நின்று மோக்ஷத்தை அடைய நாடுவதே விவேகமாம். ஃ

"இல்லற மல்லது நல்லற மன்று." என்ற வாக்கியம் ஆழ்ந்த கருத்துகளமைந்தது. முதலில் உன் ஸ்வதர்மத்தைச் செய்யப்பா துரையே. அநியாயம் செய்யவேண்டாம்; அக்கிரமம் செய்யவேண்டாம். உன்னால் சாத்தியமான வரைக்கும் பரோபகாரம் செய். ஆனால், ஒருவன் செய்யும் அநியாயத்தைத் தடுக்காமல் பொறுமையாய் ஸஹித்திருப்பது கிருஹஸ்தனுக்குப் பெரும் பாதகமாம். அவன் உடனுக்குடன் எதிர்த்துத் தன் வீரியத்தைக் காட்டவேண்டும். அதிக உத்ஸாகத்துடன் பொருள் ஸம்பாதித்துத் தன் குடும்பத்தையும், தன்னைச் சேர்ந்த பந்து ஜனங்களையும் ஸம்ரக்ஷித்துத் தன்னாலான நன்மையைப் பத்து பேருக்குச் செய்யவேண்டும். அவ்வளவு மாத்திரம் செய்யாவிட்டால், நீ ஒரு மனுஷ்யனா? கிருஹஸ்தாசிரமத்துக்குக்கூட உனக்கு யோக்கியதை யில்லையே,—மோக்ஷம் எங்கே உனக்கு வரப்போகிறது? தர்மத்துக்கு மூலம் கர்மம். ஸதா கருமத்தில் கண்ணா யிருப்பதே தார்மிகனது லக்ஷணம்.

ஃ

"சரணாகதஸ்ய ஸர்வப் பிராப்தி" அதாவது சரண மடைந்தவனுக்கு ஸகலமும் கை கூடும் என்பதாம். இந்த வாக்கியம் பரம சத்தியமே. ஆனால், நமக்குள் எத்தனையோ லக்ஷம் பேர் ஜீவகாலம் முழுவதும் பகவத் தியானத்திலேயே கழிப்பவராய், "ஸ்வாமி! உன்னையே நம்பினோம்; உன் திருவுள்ளப்படியே எல்லாம் நடக்கட்டும்; எங்களாலாவது ஒன்றுமில்லை" என்று கதறுகிறார்களே; அவர்களுக்கு ஏதாவது கிடைத்ததா? ஒன்றுமில்லையே! இதனால் நாம் அறிந்து வைக்கத் தகுந்தது யாதெனில், (1) யார் உள்ளபடி தியானம் செய்தல் கூடும்?—(2) யார் உண்மையாக சரணாகதி யடையக்கூடும்?—(3) எவர் செய்யும் பகவந் நாம ஸ்மரணையானது வஜ்ராயுதம்போல அமோக சக்தியுடன் கூடியிருக்கும்?—என்பதை ஆராய வேண்டும். எவர் கர்மம் செய்து சித்த சுத்தி யடைந்திருக்கின்றனரோ; அதாவது, எவர் தார்மிகரோ, அவர்களே மேற் சொல்லியவற்றை யெல்லாம் செய்து முடிக்கக் கூடும். கர்மம் (கடமை) செய்யாமலும், தார்மிகரா யில்லாமலும் "பகவானே! உன்னையே நம்பி யிருக்கிறோம்" என்று கூறும் வெற்றுச் சொல்லில் எவ்வித பயனு மில்லை.

ஃ

காசை உடனுக்குடன் நீட்டுகிறவனிடத்தில் வைத்தியர், "என் வீட்டுக்கு வரவில்லை?—மருந்து தயாராயிருக்கிறதே" என்று நடுவழியிற் கண்டதும் அழைப்பார். காசற்ற ஏழையினிடமோ இன்னும் மருந்து தயாராகவில்லை யென்பார். வைத்தியர் பலர் மரணங்களையும் பாடுகளையும் கண்டு தேர்ந்த கல்நெஞ்சினர் ஆவார்.

"பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாபமுமே." என்றபடி ஒவ்வொரு ஜீவனையும் முன் செய்த பாப புண்ய கர்மங்கள் ஒட்டி நிற்கின்றன. ஒவ்வொரு ஜீவனும் ஒவ்வொரு சக்தியை வெளிப்படுத்துவதற்கேற்ற நடு ஸ்தானமா யிருக்கிறான். அந்த சக்தியானது பூர்வ ஜென்மங்களில் செய்த கர்மங்களின் பலன்களெல்லாம் சேர்ந்து ஒரு ரூபமாய்த் திரண்டிருக்கிறது. அந்தத் திரண்ட (மிச்சப்பட்ட) பூர்வ கர்மத்துடன் நாம் ஜன்மம் எடுக்கிறோம். அந்தக் கர்ம பலன்களுடன் கூடியதான சக்தி காரியரூபமாய் நம்மிடத்தி லிருந்து வெளிப்பட்டு (நமது கர்மங்கள் யாவும்) செலவாகிப் போகா திருக்கும் வரையில், நாம் செயலற்று ஸஞ்சல மில்லாமல் இருப்பதற்கும் உலகத்தைத் துறப்பதற்கும் முடியாது. அந்தக் கர்மங்கள் முடிவாகிற வரையிலும், அந்தக் கர் மங்களைச் செய்யும் வழியில் ஒவ்வொருவனும் போகத்தை அனுபவித்தே தீர வேண்டும். சுக போகங்களையும் கர்மத்தையும் விட்டிருக்க முடியாத வரையி லும், கெட்ட கர்மத்தைச் செய்வதைவிட நல்ல கர்மத்தைச் செய்வது மேலான தல்லவா? துக்க மனுபவித்துக்கொண்டிருப்பதைவிட சுகமனுபவிப்பது நன் றல்லவா? நன்மை தீமை என்கிற இரண்டினுள் நன்மையைச் செய்வதே நன்று.

ஃ

"இனி நன்மையாவது யாது?" முக்தியைக் கோருபவனுடைய நன்மை வேறு; தர்மத்தைக் கோருபவனுடைய நன்மை வேறு. இந்த மேலான உண் மையின் ஆதாரத்தின்மேல்தான் ஹிந்துக்களின் வர்ணாசிரம தர்மங்கள் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன. ஸர்வ பூதங்களினிடத்தும் பகையற் றிருத்தல், நட்பு அருள்—முதலிய பகவத் வாக்கியங்கள் மோக்ஷத்தைக் கோருபவனின் பொருட்டு எழுந்தவை. இனி, "அர்ஜுனா! பேடித் தன்மைக் குள்ளாகாதே" —"ஆகையால் நீ எழுந்திரு; புகழடைவாய்" முதலிய வாக்கியங்களால் தர்மத் தைக் கோருபவனுடைய செய்கைக்கு வேண்டிய உபாயத்தை—வழியைப் பகவான் காட்டுகிறார்.

ஃ

"தீமை கலவாத நன்மை யில்லை." கர்மம் (தன் கடமை) செய்கிற தென்றால் அதில் நன்மையும் இருக்கும், தீமையும் இருக்கும். ஆகவே, கர்மம் செய்கிறவன் சுருக்கமாயாவது பெருக்கமாயாவது பாவம் செய்யவேண்டி யிருக்கிறது. ஒன்றும் செய்யாதிருத்தலைவிட ஏதோ கொஞ்சம் செய்வது சிறந்த தல்லவா? யாதொன்றும் செய்யாமல் சோம்பலாயும் கல்லைப்போல் ஜட மாயும் இருத்தலைவிட, ஏதோ ஒரு கர்மத்தை,—அதில் நன்மை தீமை கலந் திருப்பினும்,—செய்வது நன்றல்லவா? பசுவானது ஒருகாலும் பொய் சொல்வ தில்லை; கல்லானது ஒருகாலும் திருடுவதில்லை. ஆனால், அவை எப்பொழுதும் பசுவும் கல்லுமாகவேதான் இருக்கின்றன. மனிதனே பொய் சொல்லுகிறான், திருடுகிறான்; மறுபடியும் அந்த மனிதன் தேவஸ்வரூப மாகிறான். முக் குணங்களுக்குத் தக்கபடி நிலைமை ஏற்படுகிறது. தமோகுணம் மேலிட் டிருந் தால் எந்தக் கர்மமும் செய்யாமல் சோம்பிக் கிடக்கின்றான். ரஜோ குணம்

சவுகரியமான தருணத்தில் கூறுவதென சில விஷயங்களை மறைத்து வைக்கிறோம். அதில் ஒரு பெரிய நன்மையும் இருக்கலாம். ஒருசமயம் இவ் விதம் மறைக்காமல் அவ்வப்பொழுதே அந்தந்த விஷயங்களைச் சொல்லிவிடு வதில் அதிக நன்மை ஏற்படுவதாகவும் இருக்கக்கூடும். விதிவழி மதி.

மேலிட் டிருக்கும்பொழுது, மனிதன் நல்வினையும் தீவினையும் கலந்து செய்கிறான். ஸத்வகுணம் மேலிட்டிருக்கும் நிலையில் மனிதன் செயலொழிந்து பரம தியான நிலையை யடைந்து சாந்த மூர்த்தியா யிருக்கிறான். அவனுக்கு எவ்வுயிரி னிடத்தும் பகையின்மையும் அன்பும் அருளும் உண்மையா யிருக்கின்றன. இத்தகைய ஸத்வகுண நிலையை எளிதிற் பெறுதல் கூடுமோ? படிப்படியாய்த் தொடர்ந்து பற்றிச் சென்று சாந்த நிலையுற்று முடிவில் முக்தியைப் பெறுதற்குப் பாத்திரர்க ளாகவேண்டும். இந்த இடத்தில் நமது தற்கால பக்குவநிலை எவ்வளவி லிருக்கின்றதென்று நம்மையே நாம் கேட்டுத் தெரிந்துகொள்ளக் கடவோம். பக்குவ நிலையின்றிக் கதறினால் அது பகவானுக்கு எப்படி எட்டும்? முட்டாள்கள் கத்துவதை மனிதனே கேளா னென்றால், பகவான் கேட்பாரோ? ஆதலால் நீ எழுந்திரு. அறிந்தவன் துணியலாம்.

அதிகம் நெருங்கிக் கொள்ளாதே.

முன்பே ஒரு கலகமாகி, இப்பொழுது அதை மறந்து உறவாகி யிருப்பதில், அதிக ஜாக்கிரதை வை. பட்டும் படாத பான்மையில் தூர விலகி நின்று நேசமோ உறவோ கொள். இந்த எல்லை மீறி அதிக நேசமோ உறவோ ஆவதில், அது மறுபடியும் ஒரு கலகத்திற்கு ஏதுவாகி எதிர் வீட்டுக்காரி அண்டை வீட்டுக்காரியின் "மார்பை" அறுத்து விடுவதாகச் சொல்லி ஆரவாரிப்பாள். கலகம் வர அதிக காரணம் வேண்டாம். எதிர்வீட்டு உறவிலே அங்கு வாடிக்கையாகப் பலகாரமோ, பாலோ தொடர்ச்சியாய் வாங்கி வந்து, பிறகு அதை நிறுத்தி வேறிடத்தில் வாங்கத் தொடங்கினால், உறவும் நேசமும் தொலைந்து விரோதத்திற்குத் திரும்பிவிடும். அது அதிகம் நெருங்கியிருப்பதால் நேருகிற கேடு. இவ்விதமாக அதிக உறவின்றி, எப்போதோ ஒரு தினத்திற்குமட்டும் வாங்கி, அவ்வளவில் கொஞ்சம் உறவு காட்டிக்கொண்டு, வேண்டிய பால் பலகாரங்களை ஆரம்ப முதலே வேறிடத்திலேயே விலைக்கு வாங்கிக்கொள்வதா யிருந்தால் எந்தப்பகையும் வர இட மிராது. இன்று எதிர் வீட்டில் வாங்கி, மறுபடியும் வாரம்வரை வேறிடம்வாங்கி, இவ்விதம் பட்டும் படாமல் விலகி எட்டித் தூரநின்று, அதிகமாக நெருங்காதிருப்பின் எந்த விரோதமு மில்லை.

எவ்வளவு அரிய விஷயங்கள் இருப்பினும் தம் கொள்கைக்கும், தம் சொந்த மதத்திற்கும் விரோதமாயுள்ள பத்திரிகைகளையோ நூல்களையோ வாசிக்கப் பலருக்கு மனம் பிடிப்பதில்லை, அவற்றைக் குப்பையில் எறிகிறார்கள்.

அமிர்தகுணபோதினி

பிரமோதூதஸூ ஐப்பசிமீ 1உ

வஸந்தகாலத்து நண்பர்கள். மாரிகாலத்துத் தோழர்கள்.

ஆ! வஸந்த காலம் எத்துணை இனிமையானது! வஸந்தத்திலே குருவிகள் கூவிக் களித்துக் கூடுகட்டத் தொடங்கும். கனிவிருக்ஷங்கள் தளிர்த்துத் தழைத்து அரும்பிப் பூத்துப் புஷ்பங்களால் பிரகாசிக்கும். வஸந்த காலம் சுகவாழ்வுக்கும் மனோரம்மியத்திற்கும் உல்லாஸ பூரிதத்திற்கும் ஏற்றது. வஸந்த காலத்து நண்பர்களும் அந்த வேளையில்தான் நம்மருகே வந்து சேர்வார்கள். வஸந்த காலம் எவ்வளவு ஆநந்தமயமானதோ அதைப்போன்றே, இந்த வஸந்த காலத்து நண்பர்களின் கூட்டுறவும் பிரம்மானந்தமாக விளங்கும். அந்த வஸந்த நண்பர்கள் வந்துவிட்டதும் நமக்கு ஒரு புஜம் இருபுஜமாகப் பூரித்துவிடும். அவர்களுடன் எவ்வளவு நேரம் பேசினாலும் சிறிது நேரமே பேசியதுபோல் தோன்றும். நமது குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தரவோ, நம்மை யழைக்கும் மனைவியுடன் ஒரு வார்த்தை பேசி வரவோகூட நேரம் கிடைக்காது போய்விடும். அன்று நாம் செய்யவிருக்கும் பல அவசர வேலைகளைக்கூட மூலையிற் போட்டுவிட்டு அவர்களுடன் குலாவுவதையே இந்திரபோகமாக நினைக்க வைக்கும். வந்த நண்பன் இரவு பதினொரு மணிவரையும் பேசிக்கொண்டிருக்க, வீட்டுக்காரனோ, அந்த நண்பனின்மீதுள்ள அபிமானத்தில் நடு இராத்திரியாவதையும் கவனியாதிருக்க, வீட்டரசியான பெண்மணி அன்னியர் பேசி நிற்கையில் தான் அங்கு வருவதெவ்வாறென்று சமையற்கூடத்திலேயே வெறுந்தரையில் தானும் தன் மக்களுமாகக் கையையே தலையணையாகக் கொண்டு நித்திரை

மாமிசம் அதிக ருசி என்பவர்கள், பிராமணர்கள் புசிக்கும் போஜனத்தைச் சில நாட்களுக்கு ருசி பார்த்தால், மாமிசத்தில் அதிக சுவை யிருக்கிறதென்ற பேசுவதை விட்டுவிடுவர் என்கிறார் ஒருவர்.

புரிய—இவ்வளவுக்குமேல் அந்த வஸந்த நண்பன் தன் வெட்டிப் பேச்சுகளை முடித்துவிட்டுப் பன்னிரண்டு மணிக்குப் புறப்பட்டுச் செல்ல, அதற்குப் பிறகு தன் மனைவியை எழுப்பித் தானும் புசித்து, அவளும் உண்டபின் மக்களோடும் சயனத்திற்குப் போவதற்குள் மணி ஒன்று அடித்துவிடுகிறது! இந்தப் பாடுகளை வஸந்த நண்பன் உணராவிடினும், அவனிடத்து வைத்துள்ள உண்மையான அன்பானது அதற்காக அவனை வெறுக்காமல் முன்னினும் அதிகமான பிரீதிகொண்டு குலாவவே செய்விக்கின்றது.

ஃ

வஸந்தகால நண்டர்கள் நாம் ஆரோக்கியத்துடனும் ஸந்தோஷகரமாயும் செல்வாக்குடனும் இருக்கும்பொழுது வேண்டியவரையில் கணக்கற்று வந்து கூடுவார்கள். நமது அருமையான காலம் வெகுவாக அவர்களுக்கென்று விநியோகிக்கப்படும். ஒருவர் போக, மற்றொருவர் வந்து குந்த, அவர்களுடன் பேசிப்பேசி உள்ளபொழுதும் போய்விடுவதில், இரவிலே வெகுநேரம் விழித்து நமது முக்கிய அலுவல்களைக் கவனிக்க வேண்டியதாகவும் இருக்கும். சீட்டுக் கட்டுத் தமாஷ்களென்ன, வெற்றிலைப்பெட்டியை இழுத்து ஒரு தடவைக்குப் பல தடவைகள் போட்டு மென்றுத் துப்பும் சரசமென்ன, காபி—டீ—கோகோ—இவைகளைக் கூடஇருந்து அருந்தும் குதூகலங்களென்ன, எந்நேரமும் நம்மையே சுற்றிக்கொண்டு நிற்கும் பான்மையென்ன, நாம் எங்கு சென்றாலும் கூடவே தொடருவதும், நமக்குப் பெரிய துணைகளாய் அருகில் நிற்பதுமான பாந்தவ்யங்களென்ன, ஊரெங்கும் நமது நண்பர்களேயென்று சொல்லிக் கொள்ளக்கூடிய கௌரவங்களென்ன? இவற்றையெல்லாம் நாம் சிந்திக்கும்போது நம்மையே பரவசப்பட்டுப் போகும்படி செய்விக்கும். வஸந்தகால நண்பர்களின் வசனாமிர்தங்களும், புன்னகைகளும், கோலாகலங்களும், அவர்கள் நமக்குக் கொடுக்கும் தைரியமும் நம்மையே ஒரு புது உருவில் அமைத்துத் தலைநிமிர்ந்து நிற்கச்செய்யும். நமது பெயரும் புகழும் இந்த வஸந்த நண்பர்களால் எவ்வளவோ தூரத்திற்கு வியாபகமாகும். அடிக்கடி நாம் தெருவிற் செல்லும்போதுங்கூட வஸந்தகால நண்பர்கள் எதிர்ப்பட்டு நம்மை மிகவும் வணங்கி மரியாதையாக ஓர்புறம் நிற்பதானது அந்தச் சமயத்தில் நம்மை மஹா பிரபுவாகவும் நினைக்கும்படி செய்து விடுகிறது.

ஃ

நமது இல்லத்தில் ஒரு சுபவிசேஷமானல் அன்று வஸந்தகாலத்து நண்பர்கள் வந்திருந்து கூடநின்று எவ்வளவோ சிறப்பிப்

ஒருவனை ஊரெல்லாம் புகழ்ந்து கொண்டாடுகிறது. ஆனல் அவன், வீடோ அவனை ஒரு சாமான்யமாய் எண்ணுகிறது. அவனைச் சேர்ந்தோர் இகழ்வதும் வேறே. இவன் என்ன பலே பிரமாத மனுஷன் என்பதுங்கூட!

பார்கள். பிரதிதினமும் வஸந்தகாலத்து நண்பர்களின் விஜயம் புதுவிதமாகவே ருசிக்கும்; வெகு கௌரவார்ஹமாகத் தோன்றும். "பேஷ்! வந்துவிட்டீர்களா! உங்களுக்காகவே எதிர்பார்த்திருந்தேன். வாருங்கள்! வாருங்கள்! இப்படி உட்காருங்கள்! அப்படி அந்த நாற்காலியில் சாய்ந்து கொள்ளுங்கள்! இந்த சோபாவில் வீற்றிருங்கள்! நேற்று மாலையில் நடந்த "சினிமா"வும், இரவு போய்ப் பார்த்த நாடகமும் எப்படி யிருந்தது? உங்களுக்காகவே முதல் வகுப்பை முந்தியே "ரிஸெர்வ்" செய்துவைத்தேன். அந்த நீலாம்பாள் "இராஜாம்பா"ளாக வந்தபோது எத்தனை அழகாக மின்னினுள்! ஆஹா ஹா ஹா ஹா!!—"என்று அத்யந்த உத்ஸாகத்துடன் பேசவும் வைக்கும். வஸந்தகால நண்பர்களும் இந்தப் பேச்சுகளுக்குத் தகுந்தபடி தாளம் கொட்டுவார்கள். எதற்கும் மறுத்துப் பேசார்கள். "ஆம்! ஆம்!—சரிதான்! சரிதான்"—"அப்படியா?"—"இருக்கலாம், இருக்கலாம்!"—என்று அநுஸரித்தே பேசி வெகு வெகு அன்பை வாரிக் கொட்டுவார்கள். நம்மை ஆகாயத்தில் உயர்த்திப் புகழ்வார்கள். அவர்கள் நமக்கு அதிக வேலை செய்துவிட்டதாக நாம் நினைக்கிற சமயம், அந்தக் குறிப்பை அவர்கள் சட்டெனத் தெரிந்துகொண்டு, இதுதான் நாம் அதிகமான விசுவாசத்துடன் இருக்கும் சமயம் என்பதை அறிந்தவர்களாய், நம்மிடத்தில் பணமோ, நோட்டுகளோ, கடைச்சாமான்களோ, விலை தரினும் பெற இயலாத அரிய நூல்களோ—முக்கியமானவற்றைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு, 'இன்று அடித்த கொள்ளை இவ்வளவு போதும்' என்று நழுவி விடுவார்கள். இவ்விதமே நம்மை நெடுக மயக்கிப் பல செலவுகள் செய்யவைத்தும், நமது அரிய பொருள்களை அவர்களுக்குத் தாரை வார்க்க வைத்தும் ஏமாற்றி, எவ்வளவு வரையில் பறிக்க முடியுமோ அவ்வளவுக்கும் பறித்துத் தங்கள் வீட்டுப் பெட்டிகளை நிரப்பிக் கொள்வார்கள். அவற்றிலொட்டிய ஒரு தூசுகூடப் பிறகு நமக்குக் காட்டமாட்டார்கள். தாங்கள் பறிப்பதைப் பறிப்பதாக நாம் உணராதவாறு பக்குவமாய் நடந்துகொள்வார்கள். உள்ளுக்குள் இவ்விதம் செய்துவிட்டு, வெளிக்கு வெகு விஸ்வாசப் பூனைகளாக நம்மைக் காண்பதற்கே பிரதிதினமும் வந்துபோவதாகக் காண்பித்துக் கொள்வார்கள். போகும்போது மட்டும் வெறுங்கையுடன் செல்வதில்லை. குந்தியிருந்தவரையில் தங்களுக்கு நம்மால் ஆகவேண்டிய வேலைகளையெல்லாம் சாதாரணப் பேச்சின் வழியாகவே இடையிடையே புகுத்தி நிறைவேற்றிக்கொள்வார்கள். பணம் கொடுத்துப் பெற்று வாசிக்கும் தொந்திரவில்லாமலே எந்த நூலும் பத்

நம்மீது உள்ளுக்கு எவ்வளவோ பொறாமைகொண்டிருந்தும் வெளியில் மட்டும் வெகுபிரியமாய் க்ஷேமம் விசாரித்து நமது பக்கத்திலும் வெகு அன்பாக உட்காருகிறார்கள். காரணம் நம்மை விரோதிக்க முடியாமையே.

திரிகையும் இலவசத்தில் பெற்றுப் படித்துச் சமயப்பட்டால் அவற்றைவிழுங்கி ஏப்பமும் விட்டுவிடுவார்கள். இவர்கள் நமக்குப்போடும் சாம்பிராணிப்புகையோ வெகு பரிமளமுடையதாயிருக்கும். இந்த வேஷதாரிகளின் குணங்கள் நமக்கு நன்றாகத் தெரிந்திருந்தும்கூட, அவர்களுடன் பழகிவிட்ட தோஷத்தினால் அவர்களை மறக்கச் சுலபத்தில் முடிகிறதில்லை. இவ்விதம் நாம்தான் அன்பு பெருகி மூடத்தனமாய் அவர்கட்காக அலைகிறோமே தவிர, அவர்கள் நம்மை நினைப்பதுகூட இல்லை.

ஃ

"எவனாவது ஒருவன் தன் மனைவியை எமனிடம் கொடுத்துத் தவிப்பவனாயிருந்தால், அந்தச் சமயம் ஒண்டிக்கட்டையான அவனிடமிருந்து எதையும் பறித்துக்கொள்ள நல்ல சமயம்" என்று ஒரு வஸந்தகால நண்பர் கூறுகிறார். ஏனெனில், அப்பொழுது அவன் உலக வெறுப்பு மிகுந்தவனாய், "அவளே போய்விட்டாள்; இனி இவைகளெல்லாம் இருந்தெதற்கு?" என்று அலக்ஷியமாக எதையும் தூக்கிக் கொடுத்துவிடுவானாம்! "ஒரு பாரி குடும்பம் கெட்டுப்போய் வாரண்டும், வீட்டு ஜப்தியுமாயிருக்கும்போது இன்னும் நேர்த்தியான கொள்ளை போடலாம்" என்கிறார் மற்றொரு வஸந்தகால நண்பர். "எவன் திடீரென்று பெரிய மனிதனாக, உத்தியோகஸ்தனாக ஆகிறானோ அவனை யண்டிவிட்டால் கூடக் குலாவவும், வேண்டியது பறிக்கவும் சௌகரியப்படும்" என்கிறார் இன்னொரு வஸந்தகால நண்பர். ஆ! இவர்கள் தங்களை நம்பின நண்பர்களிடத்தில் எத்தகைய அன்பை வைக்கிறார்கள் பாருங்கள். அது அன்பா?—சண்டாளத்தனமா?

ஃ

வஸந்தகாலத்து நண்பர்கள் வீண் தோனப்பர்கள். இவர்களைப் பிராணமித்திரர்களாய் நம்பி ஏமாறிப் போனவர்கள் கோடானுகோடி. ஜாமீன் கையெடுத்து, குடி, விபசாரம், பொருள் அழிவு, நூல் அழிவு—இன்னும் எத்தனையோ சண்டாளத்தனமான நாசங்களும் இந்த வசந்தகாலத்து நண்பர்களால் நேரிட்டிருக்கின்றன. இவர்கள் முழுவதும் சுயநல உருவங்கள். ஓயாது முகஸ்துதி செய்து தட்டிப் பறிக்கும் குள்ளநரிகள். நேசத்திற்காகவே நேசம் செய்வதுபோலவும், அன்புக்காகவே அன்புவைத்து அலைந்து திரிவது போலவும் நடிக்கும் சூரர்கள். இவர்கள் தங்களை நம்பி மனப்பூர்வமாக நேசித்தவர்களுக்குக் கனத்த வியாதி நேர்ந்துவிட்டால் அந்த இடத்தை எட்டியே பாரார்கள். அவனால் இனி காரியமில்லை என்று விலகிவிடுவார்கள். இறந்தபிறகாவது வந்து அவன் முகம் பார்ப்பார்களா? அதுவுமில்லை. தூர இருந்துகொண்டே அனுதாப

எல்லோருக்கும் நல்லவனாய் நடக்க நினைக்கிறவன் பெரிய கபட மனிதனாய் எதிலும் பட்டுக்கொள்ளாத வஞ்சக நரியாய் இருப்பான். ஆளுக்குத் தகுந்தபடி பல்லை இளிப்பான்! இவனை நம்பி அந்தோ! ஏமாறுகிறார்கள் பலர்.

வார்த்தை பேசிவிட்டுத் தொலைவார்கள். சிலர் அதுதான் என் என்று மௌனமாகி, இறந்த விஷயமே தாங்கள் அறியாததுபோல் காட்டிக் கொள்வார்கள். இவ்விதமே, ஒருவன் வியாபாரத்தில் நஷ்ட மடைந்தாலும், உத்தியோகம் இழந்தாலும், வேறெந்தத் துன்பங்களுக்கேனும் உட்பட்டாலும், இனி அவனிடம் ஒன்றும் சுரண்ட முடியாதென்றும், உபயோகமற்ற கட்டையென்றும் ஒதுங்கிப் போய்விடுவார்கள். இவர்களை "அறிமுகஸ்தர்கள்" என்றுகூடச் சொல்வதற்கில்லை. இத்தகைய வஸந்தகாலத்து நண்பர்களை நம்பி உலகினர் மோசம் போவது என்ன பரிதாபம்!! இவர்களால் அழிந்த குடும்பங்கள் அனந்தம்.

II

இனி, மாரிகாலத்துத் தோழர்களிடம் சென்று வருவோம். மாரிகாலத்தில் மரங்களில் புஷ்பங்கள் இரா; குருவிகளும், அவைகளைப்போலவே மிருகங்களும் ஈரத்தினாலேயும், இரை அகப்படாமையினாலேயும் சங்கடப்படும். மனிதர்களோ சூரியன் முகம் காணாது பல காலும் வாடுவர். எங்கும் பெருமழையால் தெருக்களெல்லாம் வெள்ளமாகியோடும். பிணிகள் பல சூழும். மாரிகாலத்துத்தோழர்கள் தங்களின் நட்பையும், அன்னியோன்னியத்தையும் இந்தக் காலத்தில்தான் வலியவந்து காட்டுவர். அவர்கள் நம்முடைய கஷ்டங்களில் பங்கு பெற்று உழைக்கும் உழைப்பாளிகள். சுவர் இடிந்த இடத்தில் மாரிகாலத்துத் தோழர்கள் புதுச்சுவர் எடுப்பர்; வீட்டிற்குப் புதுக்கூரையும் போடுவர்; மழையில் நனைந்தபடியே நம்மோடு துணைநின்று அவ்வேலைகளை இனிது முடிப்பர்; எவருடனேனும் துணைபோக நேரின், அவரோடு இந்த மாரிகாலத்துத் தோழனும் மழையில் நனைந்துகொண்டு செல்வான்; ஆற்றைக் கடக்க நேருகையில் குள்ளமாய் இருக்கும் தன் நண்பன் கரையோரத்திலுள்ள பள்ளத்தில் முழுகிவிடக் கூடுமென்று அவனைத் தூக்கிக்கொண்டு அப்பள்ளத்தைக் கடந்து எதிர்கரை சேர்வான்; விதைவிதைக்க நண்பனுடன் வயலுக்கு ஓடுவான்; பிணியோ பாடோ எந்த நிமிஷத்திற்கும் அருகில் காத்துக் கிடப்பான்; தன்னிடமுள்ள மருந்துகள் யாவற்றையும் அங்கு கொண்டுவருவான்; நள்ளிருளிலும் வைத்தியர் வீட்டிற்கு ஓடுவான்; இரவெல்லாம் நண்பன் பக்கத்தில் விழித்திருந்து அவன் கைகால்களைப் பிசைந்தும், எவ்விதமேனும் அவனைத் தூங்கவைப்பான்; வீட்டில் செலவுக்குக் கஷ்டமாயின், தான் ஏழையாயினும் எங்கிருந்தாவது பெற்றுக்கொண்டுவந்து தருவான்; தன் நண்பன் வீட்டிற்குத் தானே எஜமானனாக இருந்துகொண்டு நித்திரை வந்தபோது எங்கேனும் தரையில் ஒரு மூலை

அவர்களும் கடிதம் எழுதவதில்லை. நாமும் கடிதம் அவர்களுக்கு எழுதுவதில்லை. அவர்களின் வீட்டுவாசலுக்கு அவர்கள் பெரியவர்களாயிருந்தால், நமது குடிசை வீட்டுவாசலுக்கு நாம் பெரியவர்களாக இருப்போம்.

யில் பாதிவிழித்த தூக்கமாய்ப் படுத்துத் தூங்குவான்; மறுநிமிஷம் விழித்துக்கொண்டு, மூடத்தனமாய்த் தூங்கிவிட்டோமேயென்று நண்பன் பக்கம் கவலையோடும் வந்து உட்காருவான்; சுருக்கிச்சொல்லின் எல்லாக் கஷ்டங்களிலும் பங்கு பெற்றுக்கொண்டு உயிரையும் கொடுப்பான்; நண்பனைத் தன் வீட்டிற்குத் தூக்கிக்கொண்டு போய் தன் செலவில் வைத்தியம் பார்த்துக் குணப்படுத்துவான்; நண்பன் வீட்டில் ஜப்தி வருமென்றால் அவன் வீட்டுச் சாமான்கள் யாவற்றையும் தன் வீட்டிற்குக் கொண்டுபோய் மறைத்துவிடுவான்; காப்பாற்றுவான்; அவற்றில் ஒரு தூசுகூடத் தான் தொடான்.

ஃ

மாரிகாலத்துத் தோழனுக்குப் பகட்டான மரியாதையேயில்லை. ஆனால், நண்பனின் வீட்டிற்கு அவனே சர்வாதிகாரி. எல்லா சங்கதிகளிலும் அவன் சம்பந்தப்பட்டுக்கொண்டு நிற்பான். தன் நண்பன் தவறி நடந்தகாலத்துக் கண்டித்துச் சண்டையிடுவான். அவனுக்கு அஞ்சி அடங்கும்படியே நேரும். யாவரும் சுகமாக இருக்குங்காலத்தில் மாரிகாலத்துத் தோழன் எட்டியே பாரான்; வெகு தூரத்தி லிருந்துகொள்வான். தன் நண்பன் நன்றாக வாழ்ந்திருக்கட்டும் என்று கடவுளைத் துதித்தபடி இருப்பான். யாதேனும் நண்பனின் குடும்பத்தில் சுபவிசேஷங்கள் நடப்பதாகில் பத்து தினங்கட்கு முன்பே மாரிகாலத்துத் தோழன் வந்து குந்திக்கொள்வான். எல்லா நிர்வகிப்புப் பாரத்தையும் தானே சுமந்துகொண்டு தன் நண்பனை வேறு விஷயங்களைக் கவனிக்க அனுப்பிவிடுவான். மாரிகாலத்து தோழன் மழையில் நனைவான், குளிர்பிடித்து நடுங்கினும் கூடவே இருப்பான். ஈரமான தரையே அவனுக்குக் கதி. அவனுடைய கஷ்டங்கள் இவ்வாறிருந்தாலும் அவ்வளவும் பட்டுக்கொண்டு நண்பனோடு ஒட்டி நிற்பான்; நிழல்போல் தொடர்வான்; பிரியான்.

ஃ

மாரிகாலத்துத் தோழன் தன் நண்பன் வியாதிப் படுக்கையிற் கிடக்கையில் அருகிலேயே காத்துக் கிடப்பா னென்றாலும். தெய்வ கதியாய் நண்பன் மரித்துவிடில் மசானம் வரையும் சென்று கண்ணிருடன் கதறுவான்; பிறகு அந்த நண்பனின் குடும்பத்திற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவற்றை யெல்லாம் கவனித்து, அவனுக்கு வரவேண்டிய பாக்கிகளை யெல்லாம் வசூலித்துத் தன் ஜீவகால முள்ளவரையில் தன் நண்பனின் குடும்பத்தைப் பாதுகாத்தபடியே இருப்பான்; தன் சக்தியானுசாரமான உதவிகள்

பணக்காரன் வேறாயும் பணம் வேறாயும் இருக்கின்றன. ஆனால், பலவான் வேறாயும் பலம் வேறாயுமில்லை. குணத்தையும் அக்குணத்தைக் கொண்டுள்ளவனையும் பிரிக்க முடியாது.

யாவற்றையும் புரிவான்; நண்பன் உயிருடன் இருந்த காலத்தில் பிரியாது நிழல்போலத் தொடர்ந்து திரிந்தும், உழைத்தும், பின்னர் அந்த நண்பன் மரித்துவிட்ட காலத்திற்குப் பிறகும் அவனை மறவாது நிற்றல் மாரிகாலத்து நண்பனது செய்கையாம். நண்பனுக்காக எவ்வளவு கஷ்டங்கள் பட்டாலும் மாரிகாலத்துத் தோழனுக்கு அது ஒரு சிரமமாகவே படாது. நண்பனை ஏமாற்றி எதையும் அபகரித்துக் கொள்ளும் அல்ப புத்தி அவனுக்கு இல்லை. தன் நண்பனின் கையை விட்டு எப்பொருளும், எந்த நூலும், எந்த சொத்தும் வெளியேறாதபடி மாரிகாலத்து நண்பன் காவல் காப்பான். தன் நண்பன் காப்பாற்ற மாட்டான் என்று தெரிகிறவற்றைத் தான் கொண்டு போய்ப் பத்திரப்படுத்தி வைத்திருந்து, தன் நண்பனுக்குத் தேவைப்பட்ட காலத்தில் கொண்டுவந்து கொடுத்து உதவி செய்து, "மற்றொருவனின் கைக்கு இது போயிருந்தால் இப்போது திரும்பக் கிடைக்குமா; இனியேனும், உன்னிடமுள்ளதை ஒரு காலத்திற்கு உதவுமென்று பத்திரப்படுத்து" என்று புத்தி சொல்வான். மாரிகாலத்துத் தோழன் காபிபலகாரத்தை எதிர்பாராமல், வீட்டில் இருப்பதை—பழய சாதமாயினும்—உண்டு சந்தோஷமாக இருப்பான். ஆ! மாரிகாலத்துத் தோழனைப் பெற்றவனே பாக்கியவான். அவனே தனக்குத் தக்க துணையைத் தேடிக்கொண்டோனாவான். ஹா! கடவுளே! எங்களை வஸந்த காலத்து நண்பர்களிடம் சிக்கவைக்காது காப்பாற்றுவீராக! மாரிகாலத்துத் தோழர்களை எங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பித்து ஆசிர்வதிப்பீராக. அவர்களுடன் நாங்கள் ஆநந்தமாய் வாழ்வோமாக. வஸந்த கால நண்பர்களை "அறிமுக"த்திலும் கேவலமாக மதித்துக் குப்பைத் தொட்டியில் எறியக் கடவோமாக.

ஃ

வஸந்த காலத்து நண்பர்கள் தங்களின் வஞ்சகமும் குள்ளநரித் தந்திரங்களும் வெளிப்பட்டுவிட்ட பின்னர், அதற்காகத் தாங்கள் வெகுவாய் வருந்துகிறவர்கள் போல் நடித்து நீலிக் கண்ணீர் விட்டு, தாங்கள் இனி மாரிகாலத்துத் தோழனாக நடந்து கொள்வதாய்ப் பசப்புவார்கள். அந்தச் சமயம் அவர்களின் குற்றமுள்ள உள்ளம் அவர்களை வாட்டி வதைப்பதால் மாரிகாலத்துத் தோழனாக நடந்து கொள்வதாகச் சொல்லும்படி செய்விக்கிறது. எனினும், நட்பின் அருமை தெரியாப் பாவிகளும்—தங்களை நம்பியவனை எட்டியே பாராத நீசர்களுமான—அவர்கள் மாரிகால நண்பனாவது என்றேனும் உண்டோ? மாரிகால நண்பனாவதாய்ச் சொல்லிச் சென்றவர்கள் மறுபடியும் திரும்பி வந்து தங்கள் நண்பனைப் பார்ப்பதற்கே பல வாரங்களோ — மாதங்களோ — வருஷங்களோ கூட ஆகிவிடுமே!

பி. ஏ. படித்தும் தொழில் உத்தியோகம் அகப்படாமல் வக்கீல் ஆவதற்கு வாசிக்கச் செல்வோரும் இல்லாமலில்லை. எவ்வளவு வக்கீல்களப்பா!

வராமலே இருந்துவிட்ட வஸந்த காலத்து நண்பர்களு முண்டு. ஏன் அப்படி யெனில், அந்த நண்பன் நன்றாக விழித்துக்கொண்டு விட்டா னென்றும், தங்களின் சொந்த குணங்களையும் சொற் சோர்வுகளையும் ஏமாற்றுதல்களையும் செவ்வனே அறிந்துவிட்டா னென்றும், இனி அவன் ஏமாறுனென்றும், ஆதலின் அவனிடம் செல்வதில் எந்தலாப மும் காண முடியா தென்றும் இந்த வஸந்தகாலத்து நண்பர்கள் பூரண மாய் உணர்ந்துகொண்டு விடுவதால்தான். ஒரு வஸந்த காலத்து நண்ப னுடன் நெடுநேரம் வெட்டிப்பேச்சுத் தொனப்புகளைப் பேசிக் கொண்டிருந்ததில், மறுநாட் காலையில் மரிக்கப்போகிறவரின் பக்கத் தில் அவர் பிரக்ஞையோ டிருக்கும்பொழுது சற்று உட்கார்ந்து பேசுவதற்குக் கூட இல்லாமற்போய்விட்டதாம்! இதுபோல் எவ்வ ளவோ பாடுகள் இவ்வீண் தொனப்பர்களால் நேர்கின்றன. எனவே, வஸந்து காலத்து நண்பர்களின் வீண் தொனதொனப்புக ளுக்கு இடம் தந்து பொழுதை வீணுக்காமல் இரண்டொரு நிமிஷமே பேசி அவர்களைச் சுமுகமாகவே அனுப்பிவிட்டு, இனி வருவது ஒரு வாரம் பொறுத்திருக்கட்டுமென்றும், ஏனெனில், வெட்டிப் பேச்சுக ளால் வேலை கெடுகிறதென்றும் அப்பொழுதே சூட்டோடு சூட்டாகச் சொல்லியனுப்பி, அவர்களின் தொல்லையினின்றும் தப்பித்துக்கொள் வது நல்லது. மாரிகாலத்துத் தோழனே—அவன் நமது வேலையைக் கெடுக்கான்; வெட்டிப் பேச்சுப் பேசான்; வேலை யொழிந்து நாம் இருக்கும்போது மட்டும் அருகில் ஓடிவந்து அமர்ந்து குதூகலம் விளைப்பான். அந்தச் சமயமும் வேறு ஏதேனும் நமக்கு வேலை வரின் அதற்குத் தான் துணையாக நிற்பான். ஆகவே, வஸந்த காலத்து நண்பர்களை அதிகம் சேர்க்காதே; நம்பாதே; விரோதமும் அவர்க ளிடம் கொள்ளாதே. பட்டும் படாத நிலையில் விலகிநில். இன்னின்னர் வஸந்தகாலத்து நண்பர்கள், இன்னின்னர் மாரிகாலத்துத் தோழர் கள் என்று பேதம் பிரித்து உன் மனதிற்குள்ளாகத் தெரிந்து கொண்டு, மாரிகாலத்துத் தோழரோடு என்றும் பொருந்தி வாழ்க.

வஸந்தகாலத்து நண்பர்களுக்கு வெளித் திண்ணை உப சரிப்புடன் முடிவு கட்டுக. உள்ளுக்கு அவர்கள் வரினும், நீ வெளியில் போய் உட்கார்ந்து அங்கு அவர்களைத் தருவித்துக் கொண்டு பேசி யனுப்புக. மாரிகாலத்துத் தோழனுக்கோ உன் வரவேற்பின் உபசரிப்பில்லாமலே அவன் வீட்டிற்குள் நுழை வானுதலின், இந்த வெளி மரியாதைகளும்—வீண் தொனப்புக ளும்—அன்பற்ற பேச்சுகளும் அவனுக்குத் தேவையில்லை.



பணியாரச் சட்டி.



கல்யாண வீட்டிலே ஒரு சுண்டெலி வெகு அவசரமாகத் திரிந்துகொண்டிருந்தது. கல்யாணத்திற்கு அநேக பணியாரங்கள் செய்திருந்தார்கள். சுண்டெலி ஒவ்வொரு பணியாரமாகத் தன் வாயில் கௌவிக் கொண்டு வந்து ஒரு பீரோவின் சந்தில் வைத்துப் பத்திரப் படுத்திற்று. இப்படியாக முப்பது பணியாரங்கள் வரையிலும் கொண்டுவந்து வைத்து விட்டது.

2. இன்னும் ஒரு பணியாரம் எடுத்துக்கொண்டு வரும்போது எதிரே ஒரு பூனையைக் கண்டு நடுங்கிற்று. பூனைக்குப் பணியாரத்தின்மேல் அதிக ஆசை. பணியாரத்தின் வாசனையைப் பார்த்தே அந்த இடத்திற்குப் பூனை வந்தது. ஆனால் கதவு மூடியிருந்ததால் பூனை உள்ளே போகக் கூடவில்லை. எலியோ கதவின் சந்தில் நுழைந்து உள்ளே போகவும் வெளியே வரவும் முடியும். எலிக்குச் சின்ன உடம்பு; பூனைக்கோ பெரிய தேகம்.

3. பூனை வெகு தந்திர முள்ளது அல்லவா? அது எலியைச் சிநேகம் செய்துகொண்டு பணியாரங்களைப் பெற நினைத்தது. உடனே பூனை எலியைப் பார்த்து நாம் இருவரும் சேர்ந்து குடித்தனம் பண்ணுவோம், வருகிறாயா? என்று கேட்டது.

4. எலியோ யோசனை செய்தது. பூனை நம்மைவிட அதிக பலமுள்ளது. தன்னைவிடப் பலசாலியின் சிநேகம் நல்லதாகவும் முடியலாம்; கெட்டதாகவும் முடியலாம்; நல்லதைவிடக் கெட்டதே அதிகம் சம்பவிக்கும். இன்று நேசமாக இருக்கிற பூனை, நாளைக்குப் பகையானால் நம்மையே கொன்று தின்றுவிடும். இப்போது சிநேகம் வேண்டாமென்றாலோ, இப்போதே நம்மைக் கொன்றுவிடும். ஆன

எந்த நண்பனிடம் பசையில்லையோ அந்த நண்பன் வரைகிற கடிதங்கட்குப் பதிலும் தருவதில்லை. ஒருகாலத்தில் நேசித்துவிட்டு இன்னொரு காலத்தில் நேசமா—மண்ணா—என்று அலக்ஷியித்துத் தாக்கிவிடுகிறார்கள்.

னால், பூனையின் பிரியப்படியே இப்போது நடப்போம். ஆனால், ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். நாம் சேர்த்து வைத்துள்ள பணியாரம் அதற்குத் தெரியக்கூடாது. தன்னிடம் உள்ளதை வெளியில் சொல்லுகிறவன் மூடன் என்று ஒரு முடிவுக்கு வந்தது.

5. பிறகு சுண்டெலி பூனையோடு சிநேகம் செய்ய ஒப்பிற்று. தன் வாயில் கௌவிக்கொண்டு வந்த பணியாரத்தையும் பூனைக்குக் கொடுத்தது. பூனை அதைத் தின்றுவிட்டு, என் பிரியமான எலியே! இது வெகு ருசியுள்ள பணியாரம்; நீ ஒவ்வொரு பணியாரமாகக் கொண்டுவா. நாம் இருவரும் சேர்த்துவைத்துப் பிறகு தின்னலாம் என்றது. அப்படியே ஒவ்வொன்றாக ஐம்பது பணியாரத்தைச் சுண்டெலி கொண்டுவந்தது. பூனை அதை ஒரு கோயிலுக்குள் கொண்டுபோய் அங்கு ஒரு மூலையில் இருந்த சட்டியில் பத்திரம் பண்ணிவைத்தது. சுண்டெலியும் அதைப்போய் பார்த்துச் சந்தோஷப்பட்டு, இதை இப்போது தின்னக் கூடாது; மழைகாலத்தில் புசிக்கலாம் என்று சொல்லிற்று. பூனையும் அதற்குச் சம்மதித்தது.

6. பிறகு எலியும் பூனையும் கல்யாண வீட்டில் ஒரு பக்கத்தில் ஒன்றாக வசித்துவந்தது. ஒரு நாள் பூனைக்குப் பணியாரத்தின் ஞாபகம் உண்டானது. உடனே எலியைப் பார்த்து, என் அத்தைக்குப் பிள்ளை பிறந்திருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போயிற்று. பூனை கோயிலுக்குச் சென்று பணியாரத்தை வயிறு நிறைகிறவரை தின்றுவிட்டு வந்தது.

7. எலி, பூனையைப் பார்த்து, பிறந்த பிள்ளைக்கு என்ன பேர் வைத்தார்கள் என்று கேட்டது. தலையளவு என்று பெயர் வைத்ததாகச் சொல்லிற்று. பிறகு ஒரு நாள் தன் அக்காவுக்குக் குழந்தை பிறந்தது என்று பூனை சொல்லிவிட்டுக் கோயிலுக்குப் போய் பணியாரத்தை வேண்டியவரையில் புசித்துத் திரும்பிற்று. எலி இந்தப் பிள்ளைக்கு என்ன பேர் என்று கேட்க, அதற்குப் பூனை அரையளவு என்று சொல்லிற்று. மறுபடியும் சிலநாள் கழித்து, இன்னொரு அத்தைக்குப் பிள்ளை பிறந்திருப்பதாகச் சொல்லிவிட்டுக் கோயிலுக்குப் போய்ச் சட்டியில் மிச்சமிருந்த பணியாரங்களையெல்லாம் தின்றுவிட்டு வந்தது. இந்தப் பிள்ளைக்கு என்ன பெயர் என்று எலி கேட்க அடியளவு என்று பூனை சொல்லிற்று.

8. இந்தப் பெயரைக் கேட்டதும் சுண்டெலிக்கு சந்தேகம் ஏற்பட்டது. பூனை பணியாரச் சட்டியின் அடியளவுவரை சாப்

பத்துநாள் பட்டினிகிடந்தாவது உன் சொல்லுக்கு வீட்டில் ஒரு மதிப்பு உண்டாகும்படி செய்துகொள். உன்னையே நீ கஷ்டப்படுத்திக்கொள்ளலாம். ஆனால் மற்றவரைக் கஷ்டப்படுத்தாதே.

பிட்டு வந்து இப்படிச் சொல்லுகிறதோ என்று யோசித்தது. பூனைக்குத் தெரியாமல் சுண்டெலி கோயிலுக்குப் போய் பணியாரச் சட்டியைப் பார்த்தது. அதில் ஒரு பணியாரத்தையும் காணோம்! பூனை முதலில் தலையளவு தின்றதும், பிறகு அரையளவு உண்டதும், கடைசியில் அடியளவு வரையில் புசித்ததும் சுண்டெலிக்கு இப்பொழுது நன்றாகத் தெரிந்தது.

9. பூனை செய்த மோசத்தை அதனிடம் கேட்டால், நம்மையே கொன்று தின்றுவிடும். ஆனதால், நமது இருப்பிடத்தை அது அறியாதபடி பிரிந்துபோய் வசிப்பதே நல்லது. பீரோவின் சந்தில் முன்பு வைத்த பலகாரம் பூனைக்குத் தெரியாது. அது அப்படியே பத்திரமா யிருக்கிறது. தனக்கென்று தனியாக வைத்திருந்தால்தான் தனக்கு உதவும். அந்தப் பணியாரமே நமக்குப்போதும். பலவானுடைய பகை கேட்டதானதால், பூனையிடம் எதுவும் கேட்கக்கூடாது என்று எண்ணிக்கொண்டு திரும்பி வந்தது.

10. ஒரு நாள் பூனைக்கு அதிக பசி. சுண்டெலி தந்திரமாகப் பூனையைப் பார்த்து, அதிக பசியானால் பணியாரம் புசிக்கக் கோயிலுக்குப் போவோம் வாஎன்று அழைத்தது. பூனையோ, பணியாரச் சட்டியில் ஒன்றுமில்லாததைப் பார்த்து எலி கோபிக்கும்போது அதைத் தின்றுவிடலாம் என்று எண்ணிக் கோயிலுக்குப் புறப்பட்டது. எலி பின்னே வருவதுபோல் காண்பித்து, திடீரென்று பீரோவின் பக்கத்திலிருந்த ஒரு வளைக்குள் நுழைந்துகொண்டது. பூனை திரும்பிப் பார்த்ததும் எலியைக் காணாமல் அதைத் தேடிற்று.

11. எலி வளைக்குள் இருந்தபடியே, வஞ்சகப் பூனையே! தலையளவு—அரையளவு—அடியளவு தின்ற பிறகும் சட்டியில் பணியாரம் இன்னும் இருக்குமா?—அது போதாமல் இப்போது என்னையும் தின்னப் பார்க்கிறாயா?—எப்போதும் தன் பலத்துக்கு மிஞ்சியவனின் சிநேகம் ஆபத்து. உன் உறவு போதும் என்று சொல்லிற்று.

12. பூனைக்குப் பசி ஒரு பக்கம், கோபம் ஒரு பக்கம். அது சுண்டெலியை எவ்விதமும் பிடித்துத் தின்னப் பார்த்தது. இந்தச் சமயத்தில் அங்கு வந்த ஒருவன் பூனைமீது ஒரு கல்லை விட்டெறிந்தான். அது பூனையின் காலில் பட்டுக் கால் ஒடிந்துபோயிற்று. அதை அவன் அடித்து வெளியில் துரத்திவிட்டான். பூனையும் பயந்து நொண்டிக் காலுடன் ஓடிவிட்டது. பிறகு சுண்டெலி வெகு சந்தோஷமாய் முன்பு பத்திரப்படுத்திய பணியாரத்தைத் தின்றுகொண்டு அந்த வீட்டிலேயே சுகமாக வாழ்ந்திருந்தது.

எவ்வளவு நல்லவராகத் தோன்றினாலும்
சத்துருக்களோடு சகவாசஞ் செய்வது கூடாது.

குஷ்டரோகத்தின் நிலைமை.

ஆதிகாலமுதல் எல்லாவியாதிகளிலும் குஷ்டரோகந்தான் மிகவும் பயங்க்ரமானதாகக் கருதப்பட்டு வருகின்றது. அதைப்போல் அருவருப்பான வியாதி வேறொன்றுமில்லை. அது வரப்போகிறதென்று முன்னாலேயே தெரியுமா? வியாதி முற்றித் தேகத்தில் நன்றாய் வியாபிக்கும்வரை குஷ்டரோகி என்பதே தெரியாது. ஆனால், அது கடைசியில் பாக்கிவியாதிகளைவிடத் தேகத்தை மூளியாயும் விகாரமாயும் செய்துவிடுகிறது; பார்ப்பதற்கே பயங்கரமாகச் செய்துவிடுகிறது. அதற்குத் தக்க வைத்தியமும் சமீபத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

ஃ

அது பரவும் மார்க்கம் இன்னும் நிச்சயமாகக்கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால், ஒன்றுமட்டும் நிச்சயம். குஷ்டரோகியுடன் கலந்து புழங்கிவந்தால் உனக்கும் அவ்வியாதி வருவது திண்ணம்.

ஃ

இக்கொடுநோயை நம் நாட்டினின்று விலக்க முதலில் இவ்வியாதியின் குணங்களை நாம் தெரிந்துகொள்வது அவசியம். பின்வரும் விஷயங்களை ஞாபகத்தில் வைப்பது நலம்.

ஃ

குஷ்டரோகம் ஆரம்பிக்கும் சமயத்தில் அது அவ்வளவு அபாயகரமானதல்ல; அப்பொழுது அது மற்றவர்க்குப்பரவாது. அந்தச்சமயம் தேகத்தில் சில விடங்களில் சொரணையில்லாமலிருப்பதைத்தவிர வேறு சின்னங்கள் காணப்படமாட்டாது. இந்த ஸ்திதியில் வைத்தியம் தொடங்கினால் வியாதி குணமாவது நிச்சயம். அந்நிலைமையிலிருக்கும் ரோகிகள் தங்கள் வேலைகளைச் செய்துகொண்டே தினசரி ஆஸ்பத்திரிக்குப்போய் வைத்தியம் செய்துகொண்டு வரவேண்டும்.

ஃ

வியாதி ஆரம்பித்துக் கொஞ்சகாலத்திற்கெல்லாம் உடம்பெல்லாம் சிவந்து தடித்துப்போகும். மூக்கு, முகம், கால்கை வீங்கும். இப்பொழுதுதான் அவ்வியாதியால் பிறருக்கபாயம். எளிதில் நோயாளியினிடமிருந்து அந்நோய் எல்லோருக்கும் பரவிவிடும். ஆகையால், இந்நிலைமையிலிருக்கும் நோயாளிகளை வீட்டில் வைத்துக்கொள்ளாமல் தனியாக ஆஸ்பத்திரியிலேயே இருக்கச்செய்து வைத்தியம் செய்துவரவேண்டும். அப்படிச் செய்தால் அநேகமாய் வியாதிகுணமாகும்.

ஃ

வியாதியை முற்றும்படிவிட்டால் கொஞ்சநாட்களுக்குப் பிறகு தானே நின்றுவிடும்; ஆனால்,மனிதனை விகாரமாயும், குரூபியாயும் அங்கஹீனனாயும் செய்துவிட்டுத்தான் விலகும். இப்படிப்பட்டவர்களைத்தான் எல்லோரும் அருவருக்கிறார்கள். ஜனசமூகத்தில் கலக்கவொட்டுவதில்லை. குடும்பத்தாரும் அலக்ஷியம்செய்து தள்ளிவிடுகி

கபடம், சுயநலம், தன் காரியத்திற்காகவே ஒருவனிடம் குலாவுதல், எப்பொழுதும் வாக்கு தவறுதல்—பொய்யே துணையாதல், இக்குணங்களுள்ளோர்தான் அதிகமான ஆப்த நண்பர்களாகத் தங்களைக் காண்பிக்கிறார்கள்.

ளுர்கள். வைத்தியம் செய்தும் பிரயோஜனமில்லே. ஃ

கோலாலம்பூர் முதலிய இடங்களில் குஷ்டரோகிகளை அவர்களின் ஜீவியகாலம் வரையும் வெளியில் விடுவதேயில்லே. பத்திரமான இடத்தில் பாதுகாப்புடன் அடைத்து விடுகிறுர்கள். ஃ

குஷ்டமுடையவர்கள் பிறருக்கு அவ்வியாதியைப் பரவச் செய்யாமல் ஜாக்கியிருக்கக் கடவர். குஷ்டமுடையவர் தொட்ட பொருளைத் தீண்டுவதிலும் அபாய மிருக்கிறது. அதனுலும நோய் தொற்றிக்கொள்ளக் கூடும். ஆகவே குஷ்டமுள்ளோர் பிறரிடம் நெருங்கி உட்காராதிருப்பது நலம். அது அவர்கள் மற்றவர்கட்குச் செய்யும் ஒரு பெரிய புண்ணியமாகும்.

[சர்க்கார் பிரசுரத்தைப் பெரும்பான்மையும் தழுவி எழுதியது.]

நீ ஒதுங்கினுல் மற்றவரும் ஒதுங்குதலே!

ரங்கனின் விவாகத்திற்கு சோமு இருபது ரூபாய் மரியாதை செய்கிறுன். பிறகு சோமுவின் மகனுக்கு விவாகம் வருகிறது. அந்த சமயம் ரங்கன் தனக்கு வீண்செலவு நேருமென்றும், நெருங்கி நின்ருல் ஏதாவது மரியாதை செய்யும்படி ஏற்பட்டுப் பெட்டியிலுள்ள பணம் நஷ்டமாகுமென்றும் நினைத்து மெதுவாய் ஜாடையாக விவாகத்துக்கு வராமலே இருந்துவிடுகிறுன். சோமுவுக்கு இதைப்பற்றி மிக்க வருத்தம். விவாககாலத்தில் தான் கூடயிருந்து மரியாதையும் செய்ததற்கு இந்த ரங்கன் இப்படி ஏமாற்றினுனே யென்று நோகிறுன். பிறகு மறுவருஷம் ரங்கனின் அப்பன் மாண்டுவிட, அதற்கு சோமு தன் மனைவியை மட்டும் போய்வரும்படி அனுப்புகிறுன். தான் போகவுமில்லே. மரியாதை செய்யவுமில்லே. இதைக் கண்ட ரங்கன் தான் தன் கைப்பணம் நஷ்டப்படாதபடி முன்பு ஜாக்கிரதையாக இருந்தது போலவே, இப்போது சோமுவும் இருக்க ஆரம்பித்துவிட்டானென்றும் அறிந்து ஆத்திரப்படுகிறுன். தான் செய்த மோச வஞ்சனை தனக்கே திரும்பிவருகிறது.

செத்தாருள் எண்ணிவிடுத்த நேயர்கள் எத்தனைபேர்? மற்றவர் தொகையும் எத்தனை எத்தனையோ? தொலைந்தவர் தொலைக. இனி வருபவர் வருக.

பேரும் பெருமையும் சீரும் சிறப்பும் மலிந்திட மகிழ்வாய் வாழ்ந்த நாளிலே சுற்றியிருந்தவர் எத்தனை பேர்? இப்போது எட்டித் தூரநிற்பவர் எத்தனை பேர்? கண்டாலும் காணுததுபோல் போகிறவர் எத்தனை பேர்?



வசீகர மனோகரி அல்லது நீண்டாதார் யார்?

மூவர் ஒருங்குசேர்ந்து இயற்றிய ஓர் நாடகம். டபிள் கிரவுன் 11x6-ல் 110-பக்கங்கள். இதில் முகவுரை, சிறப்புரை வகையில் 30-பக்கங்கள் போக, பாக்கி 80-பக்கங்களில் நாடகம் முடிகின்றது. விலை அணா 8.

இம்மூவரில் கற்பனைக்கான யோசனையின் புள்ளி எவர் ஹிருதயத்தில் முதன்முதல் தோற்றியதோ அவரே இந்நூலின் உண்மையான ஆசிரியராவர். மற்ற இருவரும் தவறு திருத்திப் புதியன புகுத்தத் துணைக் கருவி யாகலாம். இது பி.ஏ. வாசித்த ஒரு ஆதிதிராவிட வாலிபன், பி.ஏ. படித்து, தான்றோன்றித்தனத்தில் பழுத்து, பெற்ற தாயைக் கண்டபடி தூற்றி, தந்தையையும் மீறி நடக்கும் ஒரு பிராமணப் பெண்ணை மணந்த தான ஸம்பவங்கள் அடங்கியது. இவ் விதக்கலப்பு விவாகத்தால்தான் இந்தியநாடு உயர்நிலை எய்துமென்பது இதன் ஆசிரியர்களின் கொள்கை. உலகம் பலவிதம்.

ஃ

இன்னிலை (விருத்தியுரையுடன்)

45-செய்யுட்க ளடங்கிய பூர்வீக நூல். முதலாழ்வார்களில் ஒருவராகிய பொய்கையாழ்வார் இந்நூலை அருளியதாகத் தக்க ஆதாரங்களுடன் இதில் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. இதனைப் பதிப்பித்தவர் நமது பூர்வ நண்பர் திருநெல்வேலி ஜில்லா கோவில்பட்டி வக்கீல் ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களாவர். விலை ரூ. 1. டபிள் கிரவுன் 1x16-ல் 122-பக்கங்கள்.

ஸ்ரீமான் சிதம்பரம் பிள்ளையவர்கள் எழுதிய, பதிப்பித்த, எந்த நூலையும் தமிழகம் ஆர்வத்துடன் விரும்பும். அவரது பதிப்புக்கே ஒரு தனி அழகு உண்டு. இந்நூலில் அறம், பொருள், இன்பம், வீடு எனும் சதுர்வித புருஷார்த்தங்கள் சார சங்கிரகமாய் விளக்கப்பட்டுள்ளன. இது பொன் போல் போற்றத்தகுந்த நூல். இதனை ஒவ்வொருவரும் மனப்பாடம் செய்து தங்களின் சொந்த சொத்தாக்கிக் கொள்வது நல்லது. கவிச்சுவை அறிய விரும்புவா ரெவரும் இப்புராதன நூலைப் பெற்று மகிழ்வரென்பது திண்ணம். இந்நூல் பதினெண்கீழ்க் கணக்கில் ஒன்றாகும். இது இரண்டாவது பதிப்பு. கிளேஸ் காகிதம்.

ஃ

முத்தண்ணா

ஒரு துப்பறியும் நவீனகம். ஸ்ரீமான் மி. பீர் முஹம்மத் பாவலரவர்களின் அமிர்தவாக்கு. டபிள் கிர

மலையையே வெட்டிச் சாய்த்துவிடுவதுபோல் மகாதடபுடலாக ஒருமுழ நீளப் பெருமைகள் கடிதத்தின் உச்சியில் அச்சிடப்பட்டு அவ்வித விலாஸங்களுடன் உனக்கு வருகிற கடிதங்களில் ஏமாறிவிடாமல் ஜாக்கிரதையாய் இரு. அவர்களின் வயிற்று ஜீவனத்துக்காக அவ்விதம் அச்சிட்டு மயக்கியிருக்கிறார்கள்.

வுன் 1x16-ல் 390-பக்கங்கள். இரேஸ் பதிப்பு. விலை ரூ. 2-4-0.

தமிழ் மொழியில் இந்நவீனகம் ஒரு தனிநூல். இதன் அமைப்பில் இதுவரை வேறெந்நூலும் வெளிவரவில்லை. தமிழ்ச் சுவை பெரிதும் உடையது. ஆங்காங்கு அகவலில் பேசுந்தமிழில் கதாபாகத்தை விவரிக்கும் நயம் இந்நூலில்தான் நவீனமாக உளது. உயரிய தமிழிலும் பழகுமாறு கடின பதங்கட்குப் பக்கங்கள்தோறும் பொருள் விளக்கியுள்ள அருமையும், மோனை முத்தமிழாயுள்ள அமிர்தவசன நடையும்,வாக்குக்கம்பீரமும் அதிசயிக்கற்பாலன. லோகானுபவங்களும், காதல்நயமும், பலதிறப்பட்ட உலக நிகழ்ச்சிகளும், கபடங்கள் — மோசங்கள் முதலியனவும், பெண்மக்களின் துயரபாகங்களும், காமுகரின் செயல்களும் இன்னன பலவும் கதையின் சுவையைப் பெரிதும் வளர்ப்பன.முத்தண்ணாவின் உயரிய குணங்களும், துப்பறியும் திறனும், குமராண்டிக் குறவனின் அற்புதக்களவுகளும், அவனை முத்தண்ணா இறுதிவரையும் தொடர்ந்து பற்றும் நீரமும் வாசகர்கட்கு அத்யந்த மகிழ்வை யுண்டுபண்ணும். ஆனால், கதாநாயகன் காதல்வழியில் விவாகமாகாத இரு பருவ மங்கையரைச் சுவைத்தலான செய்கையொன்று மட்டுமே மிக்க இழுக்குடைத்து. எத்துணைக் காதல் மிகினும் அந்தரங்கக் கலவி, அதிலும் இருநங்கையரிடத்தென்பது கதாநாயகனின் ஒழுக்கத்திற்கு ஒரு குறைவே தரும். கதையின் முடிவும், யாவரும் ஒன்று கூடுதலும், நாயுடு— முத்தண்ணா இவர்களின் நட்பும் படிக்கப் படிக்கப்பரவசமே. நொண்டி எருது கட்டிய வண்டியின் வேகத்தில்தான் இந்நூலின் பிரதியொரு பக்கத்தையும் பார்க்க முடிகிறது. கடகடவென்று போட்மெயில் நடையில் போவதற்கு இதன் இன்பம் இடையிடையே தடையாகிறது. வடையும், பழமும், அப்பளமும், லட்டும், நெய்யும் கலந்து பிசைந்துள்ள சுவையில் இது உளது. இதன் இரண்டாம் பாகமும் விரைவினில் வெளிவருவதாக.

ஃ

சுகந்த புஷ்பம்

“ஜகன்மோகினி” ஆசிரியர் ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் அவர்கள் இயற்றியது. இரண்டு ஆப்டோன் படங்களும் டிம்மி 1x8 அளவில் 222-பக்கங்களும் உள்ளது. விலை ரூபாய் 1.

இது ஒரு கற்பரசியின் கதை. இரந்துண்ணுவோரிடத்தும் கற்பின் ஒளி யுண்டென்றுகாட்டும் அழகிய சரித்திரம். சுகந்தத்தின் கற்பு விசேஷமே அவளுக்கு நேரும் துன்பங்களினின்றும் அவளை மீட்கின்றது. அவள் மீது காமுற்ற இளவரசனின் துடுக்கும், பிறகு அவன் தன் பத்தினியால் திருந்தும் பான்மையும், தன் நாயகனின் தீச்செயலைப் பக்குவமாய் மறைத்து அவன் மானங் காக்கும் பண்பும் வாசிப்பதற்கு மிக்க சுவை தருகின்றது. சுகந்தம் ராணியின் கருணையால் தப்பும் விதமும், மீண்டும் அவள் மற்றவர் கையிற் சிக்கி மீள்வதும், இடையே அவளைப்பிரிந்த கணவனை புஷ்பவனம் ஏங்கித்தவிக்கும் பரிதாபமும், இறுதியில் காதலர் ஒன்றுகூடி ஆநந்தித்தலும், அவர்களின் பிற்காலத்திய உன்னதவாழ்வும் படித்தறிந்து குதூகலப் படத்தக்கவை. ஒவ்வொரு பக்கத்தின் அடியிலுமுள்ள அநுபவ ஞானக் குறிப்புகள் போற்றத் தக்கவை. நமது வழியைப் பின்பற்றிய இதன் ஆசிரியருக்கு நமது மகிழ்ச்சி தெரிவிக்கின்றோம்.

[இவை நமது “அமிர்த குணபோதினி” ஆபீஸில் கிடைக்கும்.]

அநுபவ மணிகள்

1. மனமானது சதா ஸஞ்சலத்தை யடைந்துகொண்டே இருக்கிறது. அதில் எக்கமோ ஒரு விநாடியில் குடி புகுந்துவிடுகிறது.

2. நாம் நமது நண்பர்மீது வைத்திருந்த அன்பும் பாசமும், பெற்றோர் பிறந்தார்போல் இருந்த காலமும் இப்போது திரும்பி வருமா? நாமோ தனித்து ஒண்டியாகி விட்டோம்!

3. தினம் ஒரு கடிதம் தப்பாமல் வந்துகொண்டிருந்த இடத்திலிருந்து இப்போது கையெழுத்தைப் பார்க்கக்கூட முடியாது போய்விட்டது!

4. நாம் ஒரு தின்பண்டத்தைப் புசிக்குங்காலையில், அதை நமது சிநேகிதை எவ்வளவோ நன்ருகச் செய்து நமக்கு இட்ட நாளை நினைக்க நேர்கிறது. இப்போதோ அந்த சிநேகிதை எங்கேயோ?—நாம் எங்கேயோ?

5. நம்மை ஸதா அந்தப் பாடலையே திரும்பத் திரும்பப் பாடச்செய்து நமதுசிநேகிதை எவ்வளவோ கேட்டிருக்கிருள். இன்று அந்தப் பாடலைப் பாடுகையில் அவள் நினைவால்கண்ணீர் பெருகுகிறது?

6. நமது கை சலிக்கப் பணத்தை வைத்துக்கொண்டு செலவு செய்த காலம் இனி திரும்புவது எது? நமது சொந்தச் செலவுக்குக் கூட இன்று தானம் போடும்படி நேர்ந்துவிட்டதே!

7. நினைத்த நேரமெல்லாம் தாராளமாகச் சென்றுவந்த நமது சிநேகிதையின் வீடு விற்கப்பட்டு வேருெருவர் வீடாகி, அவள்போன இடமும் தெரியவில்லையே! என்ன பரிதாபம்! என்ன காலவினை?

8. இன்று சவமாய்விட்ட மனிதர் சென்ற வாரத்தில் நமது சங்கீதத்தைக் கேட்க எவ்வளவோ பிரியப்பட்டார். நமது பல ஜோலியில் அந்தச் சமயம்முடியஇல்லை. அவரைத்திருப்தி செய்யக்கூடாமற் போயிற்றே என்று இப்பொழுது உள்ளம் வாடுகிறது!

9. நம்மிடம் அன்பு வைத்திருந்தவர்களின் விவாகத்திற்கு நாம் போவதற் கில்லாமல் தடைகள் நேரிடும் போது நமது மனம் படும்பாடு கொஞ்சமா?

10. நமக்கு முக்கியமான சிநேகிதர்களும் பந்துக்களும் பிரிந்து ஊர் செல்லுகையில், நமது மனம் எவ்வளவோ வாடிப் பித்தம் பிடித்தவர்கள் போலாகிவிடுகிருேம்!

11. நாம் தொடங்கிய காரியம் முடிவு பெறுகிறவரையிலும், அவை சரிவர நிறைவேற வேண்டுமே யென்று எவ்வளவோ கவலைப்படுகிருேம். இன்னும் கர்ப்பவதி யாகவில்லையே என்று வாடினது எத்தனை நாளோ! கர்ப்பமான பிறகோ யாதொரு துன்பமுமின்றிப் பிரஸவமாக வேண்டுமே யென்ற கவலை பாதிக்கிறது.

12. இன்னும் ஆண் குழந்தை பிறக்கவேண்டு மென்றும், பெண்

கும்பிடுகிருயா?—சரி, அதற்குப் பதில் நானும் உன்னைக் கும்பிடுகிறேன். கண்டும் காணுததுபோல் போகிருயா?—சரி, நானும் அப்படியே என் வழி போகிறேன். பதில் எழுதக் கஷ்டமா? சரி, எனக்கும் அப்படியே.

குழந்தை பிறக்கவேண்டு மென்றும் பிரஸவகாலத்தில் எத்தனையோ எண்ணங்களில் ஸஞ்சாரம்.

13. குழந்தை பிறந்த பிறகு நோய் நொடியின்றி சுகமாக இருக்கவேண்டு மென்று ஆவல். அதன் பிறகு பத்தி சாலியாகிப் பெரியவனாக வேண்டு மென்ற நினைவு.

14. பெண் குழந்தையாயின் நல்ல மாப்பிள்ளை வாய்க்கவேண்டு மென்ற எதிர் பார்ப்பு. ஆண் குழந்தையாயின் வரதக்ஷிணைப்பேயின் அவா. அழகுள்ள மருமகளைக் காணவும் கருத்து.

15. கையில் பண மில்லாது கடனாக எங்கேனும் பெற அலைச்சல். பெற்ற பிறகோ எவ்விதம் இனி திரும்பக் கொடுக்கப் போகிறோம் என்று விசாரம்.

16. ஒரு புஸ்தகத்தை வரையப்புகு முன்னம் இதை எவ்விதம் எழுதி முடிப்பதோ என்ற ஆயாசம். முடிந்த பின் அச்சாகி வெளி வருவது எப்போது என்று அதே கவலை. அச்சான பிறகோ விரைவில் விற்றுத் தீர்ப்பதற்கு வழி யென்னவென்ற ஆலோசிப்பு.

17. ஒரு பட்டத்திற்கும் கீர்த்திக்கும் பாத்திர மாவோமா என்று ஏங்குகை. அது கிடைத்த பின்னால், அதனால் செலவும் வீண் ஆவாரிப்பும் அதிகப்படுதலைக் கண்டு வருந்துகை.

18. மனைவியுடன் இருக்கும் போது செலவுகள் செய்ய ஏக்கம். அவள் தாய் வீட்டிற்குப் போயிருக்கும் போதோ, தான் தனித்து ஒண்டியாய் வீடு காலியாய்க் காணுவதைக் கண்டு மன வாட்டம்.

19. குறித்த நண்பர்கள் வரவில்லையே என்று எண்ணம். அவர்கள் வந்துவிடின் அவசியமான வேலைகள் செய்வதற் கில்லாமல் வீண் பேச்சில் பொழுது போகிறதே யென்று சலிப்பு.

20. வீட்டுக்கு யாரும் குடிக்கூலி வரவில்லையே யென்று ஸஞ்சலம். குடிக்கூலிக்கு வந்த பிறகோ அவர்கள் செய்யும் சண்டித்தனங்களால் என் இவர்களை வைத்தோமென்று கவலை.

21. நண்பனாக இருந்து நமக்கே உள்ளுக்குத் துரோகம் செய்கிறானே என்று ஆத்திரம். அதை அவனிடம் வெளியிட்டால் உள்ள சொற்ப நட்பும் போய்விடுமே என்ற விசாரம்.

22. செலவு அதிகம் ஆகிறதே யென்றும் ஏக்கம். வந்தவர்கள் இவ்வளவு சீக்கிரம் போய்விட்டார்களே என்றும் உள்ளுக்குள் துக்கம்.

23. அவர்கள் அவ்வளவு தந்திரமாய் விலகிவிட்ட தன்மைக்கு, அவர்களை வலியப்போய்க் காண்பதா என்றும் அலக்ஷிய சிந்தை. அவர்களைப் பார்க்காமல் திரும்புவதற்கு மனம் ஒப்பாததால் மற்றொரு பக்கம் தவிப்பு.

24. மருந்து உண்ணவேண்டுமே யென்றும் ஏக்கம். உண்ணுவிடில் வியாதி தீராதே யென்றும் விசாரம். கசப்பு மருந்தை நாளைக்கு உண்போமென்று பல நாட்களைக் கழித்துவிடுவது முண்டு. (தொடரும்.)

வை. மு. கோதைநாயகி அம்மாள்.

அழகு என்கிற பதத்திற்கு அர்த்தம் அபூர்வமே. ஒருவருக்கு அழகாகப் படுவது, மற்றவருக்கு அழகாக இல்லை. கருப்புக்குட்டி பணக்காரியாயிருப்பின் அழகுக்காரிதானும்! சிவப்புக்குட்டி பிச்சைக்காரியா யிருந்தால் அந்த அழகை மதிப்பவரில்லையாம்! அவளை ஒரு எளியவனுக்கே தள்ள வருமாம்.



ஹாஸ்ய சஞ்சீவினி



ராஜம் :—என் அந்தப் பொட்டகிராப் படங்களைப் பார்த்துவிட்டுக் கொடுத்துவிட்டாய்? உனக்கு வேண்டுமென்று கேட்கிறதுதானே?

பங்கஜம் :—நம்மீது பிரியமில்லாதவர்களின் பொட்டகிராப் படங்களை நாம் வைத்துக்கொண்டு என்ன செய்ய? பழைய அன்பை நினைத்து நினைத்துப் புண்ணாகி அழுகிறதா?

ராமு :—நாலு நாளாக சேஷம்மா உன் வீட்டையே சுற்றிக்கொண்டிருந்தாளே ஏன்? பாங்கியில் வேறே 400 ரூபாய் போட்டிருக்கிறாளாமே?

சீதா :—அவள் வந்ததும் ஏதாவது இரவல் கேட்பாளென்று தெரிந்துகொண்டேன். முன்பு கைகொலுசு தந்து ஒரு மாதம் கழித்துத் திரும்பிற்று. இப்போது காசுமாலையைக் கேட்க வந்தாள். வாரத்தில் வந்துவிடுமாம்; பாங்கியிலுள்ள 400-ரூபாயையும் ஈடாகக் கொடுத்துவிட்டு அதைப் பெற்றுப் போகச் சொன்னேன். பிறகு அவள் வரவேயில்லை.

வீராசாமி:—தீபாவளி வருகிறதே. ஜவுளிகள் எடுத்தாய்விட்டதா?

அண்ணாசாமி :—சீக்கிரம் கடைக்குப் போகவேண்டும்தான். கையில் பணத்தைக் காணோம். வீட்டுப் பிடுங்கலும் தாள முடியவில்லை. நகையுடன் பாங்குக்குச் சென்றால், அங்கு என்னைப்போல் 200-பேர் முன்பே வந்து காத்திருக்கிறார்கள். பாங்கியிலும் அதிகப் பணம் கிடைக்கவில்லை.

முத்து :—அவர்கள் போய் வருகிறோம் என்று சொன்னபோது நீயும் போய்வாருங்கள் என்றாயே. இருக்கும்படி ஏன் அவர்களைச் சொல்லவில்லை? சொன்னால் இருப்பார்களே!

சுப்பு:—செலவிடுவதற்குக் கையில் பணம் ஏராளமாகக் கொட்டிக் கிடந்தால் போகிறவர்களையும் தடுத்து இன்னும் பலநாள் இருக்கச் சொல்லலாம்தான். எல்லா உறவும்—பிரிவும் செலவிடும் பணத்திலிருக்கிறது.

பாக்கியம்:—உங்க வீட்டுக்காரரை அவரின் மாற்றாந்தாய் பார்க்க வந்தாரே, என்ன சொன்னார்?

சிலாக்கியம் :—சொல்வதென்ன, வந்து பார்த்ததும் 'இன்னுமா சிக்கு' என்று சொல்லி உதட்டையும் முகத்தையும் கீழிறக்கி ஆட்டினார். அதற்கு அருத்தம் இனி அவன் பிழைக்கிறதேது என்பதுதான். பேதப்பட்ட மனதுக்குத் தகுந்தபடி எண்ணங்கள்.

சீனு :—எனக்கு இரண்டாயிரம் ரூபாய்போல் இருந்துவிட்டால் ராஜாவைப்போல் வாழ்வேன்.

நாணு :—உன்கையில் ஒருகாசும் இப்போது இல்லாததால் இரண்டா

சில குறித்த நூலாசிரியர்களுக்கு, அவர்களின் நூல்களை வெகுமதியாக அனுப்பும்படி சில பொதுவாசகசாலைகள் வெகு தளுக்கு—மயக்கு—வணக்கம் காண்பித்து வரைகின்றன. அத்துடன் நூலாசிரியர்களின் வயிற்றுப் பசியையும் இந்த வாசகசாலைகள் கவனிப்பின் நலமாயிருக்கும். அதுதான் காணோம்!

யிரத்தில் திருப்தி பெறுகிருய். அந்த இரண்டாயிரம் சேர்ந்துவிட்டால், அதற்குப் பிறகு நீ எத்தனை ஆயிரங்கட்குத் தாவுவாயோ? அத்துடன் ஏழு குழந்தைகள் பிறந்துவிட்டால் இந்த இரண்டாயிரம் எந்த மூலைக்கு வருமோ?

சுந்தரம்:—தீபாவளிக்கு உன் வீட்டில் என்னென்ன பக்ஷணங்கள்?

ரஞ்சிதம்:—பேஷான ஆடு, கோழி புரு, கௌதாரி, எக்ஸ்ஷா நெம்பர் ஒன்றுள்ள பிராந்திபுட்டி தோசை, வடை, உருண்வட—இவ்வளவு போதாதா?

சுந்தரம்:—அடபாவமே! அன்று மதுமாமிசமின்றிப் பரிசுத்தமாகக் கொண்டாடக்கூடாதா?

ரஞ்சிதம்:—நீ நாகரீகம் தெரியாத 18-ம் நூற்றுண்டு மனுஷன். உன் புத்திமதி எனக்கு வேண்டாம்.

எங்கள் மதமே எங்களுக்குப் போதும்.

மற்ற மதங்களுடைய குறிப்புகளை நாங்கள் வாசிக்க வேண்டிய அவசிய மில்லை. எத்தனை நீதிகள் மற்ற மதங்களில் கூறினுலும் அம்மதம் எங்களுக்குத் தேவையில்லை. எங்கள் மதநீதிகளும் போதனைகளுமே எங்களுக்கு உயர்வு. அவற்றையே எங்கள் ஜீவிய முற்றும் பாராட்டிக் கொண்டாடுவோம். எங்கள் மதத்தைப்பற்றி நீங்கள் எவ்வளவு கேவலமாகப் பேசினும், அப்பேச்சுகளைக் காலடியில் போட்டு மிதிப்பதல்லால், சிறிதும் லக்ஷ்யம் செய்யோம். உங்களின் மயக்கு மொழிகளில் மயங்கோம். மற்ற மதங்களைப் பற்றியும் ஒவ்வொன்ருய் அலசிப் பார்த்து அவற்றிலுள்ள அரிய தத்வங்களையும் ஞானபோதனைகளையும் கிரகித்துக் கொண்டு, எங்கள் மதத்துடனேயே என்றும் சேர்ந்து வாழ்வோம். இதுவே எங்கள் உறுதி. எங்களைப் பழிப்பதாயின், உங்களை மற்றவர்கள் பழிப்பதையும் நினைத்துக் கொள்க. பழிப்பதனுலேயே ஞானபக்குவம் பெற்றுவிடப் போவதில்லை. நாங்களும் மயங்கிவிடப்போவதில்லை.

வெகு செட்டாக வாழப்பார்த்து மிச்சம்பிடிக்கிறவர்கள்தான் இருந்த வீட்டையும் கடனுக்குத் தொலைத்து வேருெரு தெருவிலே இன்னொருவர் வீட்டில் வாடகைக்குப் புகுகிருர்கள்.

ரூபாய்க்குச் சில்லரை கேட்டால் அதற்கு ஒரு காசு வட்டம். சில்லரை கொடுத்து ரூபாய் கேட்டால் அதற்கும் ஒரு காசு வட்டம். செட்டியாரின் செட்டித்தனத்தை என்னென்று சொல்ல?



அரசர் அஸ்ஸர்ஹாதன்.

(ருஷிய தேச மஹான் லியோ டால்ஸ்டாய் எழுதிய கதையின் மொழிபெயர்ப்பு.)

அன்ஸீரியா தேசத்தரசன் அஸ்ஸர்ஹாதன் என்பான் லேய்லி என்னும் அரசனுடைய நகரத்தைஜயித்து அதிலுள்ள மாந்தர்களைத் தன்னாட்டிற் கோட்டிவிட்டு அத்தேசத்திலுள்ள நாடு நகரங்களையெல்லாம் தீக்கிரையாக்கினான்; யுத்தவீரர்களை யெல்லாம் கொன்றான்; சில சேனாத்தலைவர்களையும் கொன்றான்; சிலரைக் கழுவிலேற்றினான்; சிலரை உயிருடன் தோலை யுரித்தான்; அரசன் லெய்லியையும் ஓர் கூண்டில் அடைத்தான். இரவில் அஸ்ஸர்ஹாதன் தன் படுக்கையில் படுத்துக்கொண்டு 'லேய்லியை எவ்விதம்கோல்வது?' என்று யோசித்துக்கொண்டிருந்தான். அப்போது அவனருகில் ஓர் சத்தம் கேட்கத் திரும்பிப் பார்த்தான். தன் பக்கலில் நீண்ட தாடியும், கருணைவழியும் கண்களையும் கொண்ட ஓர் கிழவர் நிற்பதைக் கண்டான்.

கிழவர் :—"நீ லெய்லியைக் கொல்ல இச்சிக்கிறாய், அல்லவா?"

அரசன் :—"ஆம். ஆனால் எவ்விதம் கொல்வது என்பதைத்தான் இன்னும் தீர்மானம் செய்யவில்லை."

கிழவர்:—"ஆனால், நீதானே அந்த லெய்லி."

அரசன் :—"அது உண்மையல்ல. நான் வேறு, லெய்லி வேறு."

கிழவர் :—"நீயும் லெய்லியும் ஒன்றுதான். ஆனால், வெளிக்குத்தான் நீ லெய்லி அல்லபோலவும், லெய்லி நீயல்லபோலவும் தோற்றுகிறது."

அரசன் :—"ஆம். வேறு எவ்விதம் தோற்றக்கூடும்? நான் இங்கே சுகமாகப் பஞ்சணையில் படுத்திருக்கிறேன். என்னைச் சுற்றிலும் நான் காலாவிடும் பணிகளைத் தலையால் செய்ய ஆண், பெண், அடிமைகள் பலர் இருக்கின்றனர். இன்றேபோல் நாளையும் நான் என் நண்பர்களுடன் ஆனந்தமாக விருந்துண்ணுவேன். ஆனால், லெய்லியோ பக்ஷிபோல் கூண்டி லடைபட்டுக் கிடக்கிறான். அன்றியும், நாளை அவன் கழுவிலேற்றப்பட்டு அவனுடைய தேகம் நாய்களுக் களிக்கப்படும்."

கிழவர்:—"நீ அவனுடைய உயிரை அழிக்க முடியாது."

அந்த விலைமகள் அவ்வளவு தளுக்குடனும் ஒய்யாரத்துடனும் போவதற்கு அந்த ஏமாந்த தரிதலையன் அவளுக்காகச் செலவழிக்கிறானே பரிதாபம்தான்.

அரசன் :—"நான் இன்று பதினாலாயிரம் பேர்களைக் கொன்று அவர்களுடைய உடம்புகளை ஓர் மலைபோல் குவித்திருக்கிறே னல்லவா? அவர்களெல்லாம் இறந்திருக்க நான் உயிருடனில்லையா? ஆதலால், நான் உயிர்களை அழித்தல் கூடும்."

கிழவர் :—"அவர்கள் அழிந்துவிட்டார்களென்று உனக்கு எப்படித்தெரியும் ?"

அரசன்:—"நான் இப்போது அவர்களைக் காணவில்லை. அன்றியும், அவர்கள் துன்பப்பட்டார்கள்; நானோ சௌக்கியமாக இருக்கிறேன்."

கிழவர் :—"இது வெளித்தோற்றமே. நீ அவர்களையல்ல, உன்னையே தான் துன்பப்படுத்திக் கொள்கிறாய்."

அரசன் :—"நீங்கள் புகல்வது எனக்குப் புரியவில்லை."

கிழவர் :—"புரிந்து கொள்ள ஆவலிருக்கிறதா ?"

அரசன் :—"ஆம்."

ஃ

உடனே கிழவர் அரசனை அங்கிருந்த தண்ணீர் நிறைந்த ஓர் குளிக்கும் தொட்டியில் உடைகளைக் களைந்துவிட்டு இறங்கச் சொன்னார். அரசன் அவ்வாறே செய்தான். கிழவர் தன் கையில் ஓர் மண்குடம் நிறையத் தண்ணீர் வைத்திருந்தார். அவர் அரசனை தான் அவன் தலையில் ஜலத்தை கொட்ட ஆரம்பித்தவுடன் தொட்டி ஜலத்திற்குள் பூராவாக முழுகிவிடும்படிச் சொன்னார். அரசனும் அவ்வாறே செய்தான். பிறகு அவ்வரசனான அஸ்ஸர்ஹாதன், அடியில் கண்டவாறெல்லா மனுபவித்தான். ஃ

அரசனுக்குத் தான் யாரோ ஒருவனாய் மாறிவிட்டதாகவும், தான் ஓர் மிக்க சவுந்தரவதியான பெண்ணுடன் உயர்ந்த பஞ்சணையில் படுத்திருப்பது போலவும் தோன்றியது. அவள் அவனை நோக்கி, "என் அருமைக் கணவர் லெய்லியே! தாங்கள் இன்று அதிகமாய்த் தூங்கிவிட்டீர்கள்; தங்களைக் காணச் சிற்றரசர்களும் மற்றும் பலரும் வந்து காத்திருக்கின்றனர்" என்றாள். உடனே லெய்லி (உண்மையில் அஸ்ஸர்ஹாதனே) ஆடையாபரணங்க ளணிந்துகொண்டு தர்பாருக்குச் செல்கிறான். அப்போது அங்கிருந்த சிற்றரசர்களில் ஒருவன் அரசன் அஸ்ஸர்ஹாதனின் துன்பங்கள் பொறுக்கக் கூடாமலிருப்பதாகவும், உடனே அவனுடன் போர்க்கெழுதல் வேண்டுமென்றும் கூறினான். லெய்லி அரசன் அதற்குச் சம்மதியாமல் தன்னுடைய ஆட்களில் உயர்ந்த குணமுடையோரிற் சிலரை அரசன் அஸ்ஸர்ஹாதனிடம் சமாதான ஏற்பாட்டிற்குத் தூதாக அனுப்பினான். பிறகு லெய்லி பலரும் புடைசூழ வேட்டையாடுவதற்காக மலை அடிவாரம் செல்கிறான். அவன் வேட்டையில் தானே இரண்டு கழுதைப் புலிகளைக் கொல்கிறான். பிறகு மிகுந்த சந்தோஷத்துடன் தன்னுடைய அரண்மனைக்கு வந்து தன் நண்பர் பலர் சூழ விருந்துண்கிறான். மறுதினமும் வேட்டைக்குச் சென்று ஓர் கிழச்சிங்கத்தைக் கொன்று அதன் இரண்டு குட்டிகளையும் பிடித்துக் கொண்டு வருகிறான். பிறகு தன்

சாதம் புசிக்காமல் பலகாரங்களையே நான்முழுதக்கும் உண்டால் அது வயிற்றுக்குப் பிடிப்பதில்லை. இவ்விதம் தனித்து உண்ணாமல் வீட்டில் யாவருடனும் சேர்ந்து அந்தப் பலகாரங்களைப் புசித்தால் அப்போது வயிறு ஒன்றும் செய்வதில்லை. இது ஏன்? வீட்டுடன் சேர்ந்துண்ணும் மகத்துவத்தாலா?

நண்பர்களுடன் விருந்துண்டு ஆடல் பாடல்களுடன் பகலையும், தன் பிரிய மனைவியுடன் இரவையும், இன்ப மாகக் கழிக்கிறான். இவ்வாறே தன் காலத்தைக் கழித்து வருகிறான். ஒரு மாதம் சென்றது. அஸ்ஸர்ஹாத னிடம் சென்ற தூதர்கள் காதும் மூக்கும் அறுபட்டு வந்து சேருகிறார் கள். அஸ்ஸர்ஹாதன் லெய்லி அரசன் பலவிதமான கப்பங்கள் கட்ட வேண்டுமென்றும், மற்றும் தானே நேரில் வந்து அவனை வணங்கி மரி யாதை செய்ய வேண்டுமென்றும் சொல்லி யனுப்பியிருந்தான்.

ஃ

உடனே லெய்லியும் மற்ற அர சர்களும் ஒன்றுகூடிச் சண்டை செய் வதே சரியென்று தீர்மானித்து ஓர் பெரிய சேனையைத் தயாரித்தார்கள். எட்டாம் நாள் ஓர் நதிக்கரையில் சண்டை மும்முரமாக ஆரம்பிக் கிறது. சில நாட்களுக்குப் பிறகு கடைசியாய் லெய்லியின் சேனை தோல்வியுற்றது. வீரர்கள் மற்ற யாவ ரும் அஸ்ஸர்ஹாதனால் சிறை படுத்தப் பட்டுக் கொல்லப்படுகிறார்கள். லெய் லியும் ஓர் கூண்டி லடைக்கப்படு கிறான். தான் கூண்டிலேயே இருந்து தன்னுடைய சுற்றத்தாரும், நண்பர் களும் கொல்லப்படக் கொண்டுபோவ தைக் காண்கிறான். எல்லாக் கஷ் டங்களையும் அவமானங்களையும் சிறி தும் மனம் சோர்வுறாமல் பொறுத்துக் கொள்கிறான். தன்னுடைய மனைவி யையும் அடிமை யாக்குவதற்காக இரண்டு கரியர்கள் அழைத்துச் செல் வதைக் காண்கிறான். பிறகு அவ னையே இரண்டு கொலையாளர்கள் வந்து கொலைக்களத்திற்கு அழைத் துச் செல்கின்றனர். அங்கே செங் குருதி வழிந்துகொண்டு தன்னை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் கழு மரத்தைக் கண்டான். அவன் உடை கள் களையப்பட்டன. அச்சமயம் அவன் மிகவும் பயந்து அவர்கள் காலில் வீழ்ந்து தன்னைக் காப்பாற் றும்படி கெஞ்சுகிறான்.

ஃ

அச்சமயம் அவனுக்கு இது உண் மையல்ல, ஓர் பயங்கர கனவே போலுமென்றும், தான் உண்மையில் அஸ்ஸர்ஹாதனே லெய்லி அல்லவே என்னும் எண்ணம் உண்டாகிறது. ஆயினும், உடனேயே மறுபடி அவ னுக்குத்தான் அஸ்ஸர்ஹாதன், லெய்லி இருவரும் அல்ல போலும், தான் ஓர் மிருகம்போலும் தோற்று கிறது. தான் ஓர் பெண் கழுதைப் புலி போலவும், தானும் தன் குட்டி யும் மலைப்பிரதேசங்களில் சந்தோஷத் துடன் குதித்து விளையாடிக்கொண் டிருப்பது போலவுமிருந்தது. அச்சம யம் வேடர்கள் பலர் வந்து பின்புற மாகக் குட்டியின்பேரில் அம்பு எய் கிறார்கள். குட்டியும் தாயும் ஓடுகின் றன. ஆனால், மற்றோர் அம்பு குட்டி யின்பேரில் பாயவே அதுசக்தியற்றுப் பூமியின்பேரில் விழுந்து விடுகிறது. தாய் பிரிய மனமில்லாமல் பக்கவில் நிற்கிறது. அச்சமயம் ஓர் குரூர தோற்றமுடையோன் வந்து ஓர் கூரிய வாளினால் அக்குட்டியின் கழுத்தை அறுத்துவிடுகிறான்.

ஃ

இவைகளை யெல்லாம் கண்டு மிக்க பயந்து "இவைகள் உண்மையா யிருக்க முடியாது. ஓர் பயங்கரமான கனவே" என்று சொல்லிக்கொண்டு மிக்க பிரயாசத்துட னெழுந்திருந்து

மன்னார்குடி போய்வந்தீரே, அங்கே மின்னார்—குடி யிருந்தயிடம் கண் டீரா ? என்று ஒருவர் வினவினராம்.

தன் தலையை தண்ணீருக்கு வெளியே நீட்டினான் அரசன் அஸ்ஸர்ஹாதன். கிழவர் தன் தலையில் பானையிலிருந்து ஜலத்தை ஊற்றிக் கொண்டிருப்பதைக் கண்டான். உடனே அவன், "ஆ! எவ்வளவு நேரம்! எவ்வளவு கஷ்டப்பட்டேன்!" என்றான். கிழவர் உடனே "சில நிமிடங்கள்கூட ஆகவில்லையே! இதோ பார். இச்சிறிய பானையிலுள்ள ஜலம் இன்னும் ஆகவில்லையே! அது இருக்கட்டும்; நீ உணர்ந்து கொண்டாயா?" என்றார். அரசன் ஒன்றும் பதில் கூற முடியாதவனாய் மிக்க பயங்கரமான தோற்றத்துடன் கிழவரைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஃ

பிறகு கிழவர் அவனுக்கு அடியில் கண்டவாறு புகன்றார்.

1

"இப்போது நீ, லெய்லியும் கொலை செய்யப்பட்ட அவனுடைய ஆட்கள் யாவரும் நீதான் என்று உணர்ந்து கொண்டாயா? உன்னால் வேட்டைகளில் கொல்லப்பட்டதும், பிறகு உன்னால் விருந்துகளில் உண்ணப்பட்டதுமான மிருகங்களும் நீயேதான் என்று அறிந்தாயா? உனக்கும், அவர்களுக்கும், அவைகளுக்கும் உயிர் வெவ்வேறென்றிருந்தாய். அந்தமோகமாகிய மாயையை உன்னிடமிருந்து இப்போது நான் விலக்கினேன். ஆதலால், நீ மற்றவர்களுக்குக் கெடுதல் செய்வதானது உனக்கேதான் கெடுதி செய்து கொள்வதாகும் என்பதைக் கண்கூடாகக் கண்டாய்."

2

"சகல ஜீவன்களுக்கும் உயிர் ஒன்றே. உன்னிடம் அவ்வகண்டத்தில் ஓர் பாகமே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. உனக்களிக்கப்பட்டிருக்கும் இந்த ஓர் பாக உயிரிலேயேதான் உனக்கு அதைக் குறைப்பதற்கோ, அதிகப்படுத்துவதற்கோ, அதைக் கெடுத்துக்கொள்வதற்கோ, அல்லது நல்வழிப்படுத்தி முன்னேற்ற மடைவதற்கோ சக்தியிருக்கிறது."

3

"நீ உன்னுடைய உயிரை முன்னேற்றமடையச் செய்வதற்கு ஒரே மார்க்கம் யாதெனில், நீ உனக்கும் மற்ற சர்வ ஜீவன்களுக்கு மிருக்கும் உயிர் வெவ்வேறு என்னும் பேத வரம்பை அடியுடனழித்து அவைகளையும் உன்னைப்போலவே பாவித்து, அவைகளிடம் அன்புடனிருப்பதேயாகும். அப்படியிருப்பதால் நீ உன் ஆயுளைவிருத்தி செய்துகொள்கிறாய்."

4

"நீ எப்போது உன் உயிரையும் உன்னையும் தனியாக வைத்துக் கொண்டு அதன் க்ஷேமலாபங்களை மற்றப் பிராணிகளின் செலவில் அதிகப்படுத்த எண்ணுகிறாயோ அப்போது நீ உனக்கே கெடுதல் செய்து கொள்கிறாய். உன் ஆயுளும் அதனால் குறைகிறது."

5

"மற்றப் பிராணிகளின் உயிரை அழிப்பது உன் சக்தியில் இல்லை. நீ கொல்லும் பிராணிகள் உன் பார்

ஒருவண்டியில் ஏறிக்கொண்டு சென்று ஒரு வீட்டுவாயிற்படியில் இறங்குகிற கௌரவம் ஒரு தனிக் கௌரவம்தான். அதிலும், அது சொந்த வண்டியாயிருந்தால் இன்னும் அதிக சிறப்பு ஏற்பட்டுவிடும். பின்னும் அது மோட்டாராக இருந்தாலோ—சொல்லவே வேண்டாம்.

வையிலிருந்து மறைந்து விடுகின்றன; ஆனால், அவைகள் அழிந்து விடவில்லை. நீ உன்னுடைய உயிரை அதிகப்படுத்திக் கொள்வதற்கும், மற்றவர்களின் உயிரைக் குறைப்பதற்கும் எண்ணுகிறாய். ஆனால், இது நீ செய்யக்கூடியதல்ல. உயிரிற்குக் காலம், இடம் (Time & space) என்னும் வரம்பு கிடையாது. ஒரு கண மிருக்கும் உயிர், ஆயிரவருட மிருக்கும் உயிர், உன்னுடைய உயிர், படைப்பிலுள்ள கண்ணுக்குத் தோற்றும் தோற்றாத எவ்வித கணங்களின் உயிர், எல்லாம் ஒன்றே. எல்லாம் சமமே. ஒருவரும் உயிரை அழிக்கவோ, அல்லது மாற்றவோ இயலாது. ஏனெனில் அது வொன்றே சாஸ்வதமாயிருப்பது; மற்றவையெல்லாம் இருப்பதுபோல் தோற்றுபவையே."

இவைகளைச் சொல்லிவிட்டுக் கிழவர் மறைந்து விட்டார்.

மறுநாட் காலை அரசன் அஸ்ஸர் ஹாதன் லெய்லியையும் மற்ற சிறைப்பட்ட யாவர்களையும் சிறையிலிருந்து விட்டுவிடும்படி உத்திரவளித்துவிட்டான். தான் கைப்பற்றிய அரசையும் விட்டுவிட்டான். மூன்றாம் நாள் தன் மகன் அஸ்ஸர் பாணிபாலா என்பவனுக்குத் தன் ராஜ்யத்தை முடிசூட்டிவிட்டுத் தான் தெரிந்துகொண்டவைகளைப்பற்றிச் சிந்திக்கக் காட்டிற்குச் சென்றான். அவன் தன்னுடைய பிற்காலத்தை சந்நியாசியாகப் பல நாடு நகரங்கட்கெல்லாம் சென்று "உயிர் ஒன்றே; வித்யாசம் வெளித்தோற்றமே; ஒற்றுமையே உண்மை. மற்றவனுக்குக் கேடு செய்பவன் தனக்குத் தானே கேடு செய்து கொள்கிறான்" என்று பிரசாரம்செய்வதிலேயே கழித்தான். மஹான்களின் தரிசனம் எத்தகைய கொலைப்பாதகனுள்ளத்தையும் மாற்றித் தூய்மைப்படுத்தி விடுகின்றது. "நல்லாரைக் காண்பதுவும் நன்றே."

T. V. சிவசுப்பிரமணியம், B. A.

ஃ

பாசாங்குக்காரப் பாவிகளின் கொள்ளை.

ஏமாறியவனைக் கண்டால் ஏமாற்றுகிறவனுக்கு அதிக சந்தோஷம். வஸந்தகால நண்பர்கள் சமயம் நோக்கி ஏமாற்றுவதில் தீரர்கள். அவர்களிடம் ஏமாறாதவர்களும் அபூர்வம். பிணிப் படுக்கையிற் கிடக்கும்போது, மிக்க அருமையாகப் பேசி, உயர்ந்த சாமான்களையோ, அரிய நூல்களையோ மெதுவாகப் பெற்றுக்கொண்டு போய்விடுவர். இந்தப் பாசாங்குக்காரப் பாவிகளாற் கொள்ளையிடப்பட்ட பிறாது அரிய சொத்துக்களையும் நூல்களையும் எண்ணி முடியாது. இந்தப் பாவிகள் எதிர்படாமலிருந்தால் இழந்துபோன அவ்வளவும் நமது வீட்டில்தானே இருந்து இப்போது நமக்கு வேண்டியது பொழுதுக்கு எவ்வளவோ உதவுமே.

துன்ப சமயத்திற்கு யாரே துணையாவார்? இன்பத்திற்கே நெருங்குவர்.



பத்நா தேவி

(முன் பக்கம் 357-லிருந்து)

உமேத்சிங்கு பெரோஜிஷாவின் படையைக் கண்டு பயந்தான் என்பதன்று. தன் போர்வீரர் சற்று இளைப்பாறினால் நன்றாய்ச் சண்டை செய்யலாகுமென்பதை அவன் அறிவான். அவன் சேனை ஐயாயிரவரும் சண்டைக்கு ஆயத்தமானார்கள். சலீம்சிங்கின் ஐந்நூறு குதிரை வீரரும் அடுத்து நின்றார்கள். பன்னீராயிரம் காலடியால் பார் அதிர்ந்தது. படைத்திரளின் சத்தமோ இடி முழக்கத்தைத் தோற்றது. ரஜபுத்திரர் வெகு வீராவேசத்தோடு சத்துருக்களை எதிர்க்க, நொடிப்பொழுதில் எதிரிகளின் முன்னணி முறிந்தது. பலர் உயிர் தப்பி யோடினர். சற்று நேரத்திற்கெல்லாம் ஒருவராவது கண்ணுக்குக் காணப்படவில்லை. எதிரிகள் ஒழியவே, ரஜபுத்திருடைய சந்தோஷத்தைச் சாற்றவும் வேண்டுமோ? அவர்களுடைய சங்கநாதம் எங்கும் முழங்கிற்று. ஜெயபேரிகை செவிடுபட ஆர்த்தது.

VII

பெரோஜிஷா இனி சண்டை செய்வது வீண் என நிச்சயித்துத் தன் ஊர் திரும்பினான். இவன் போனதறிந்து கொட்வாரில் ஒவ்வொருவரும் களிகூர்ந்தார்கள். உமேத்சிங்கை வாழ்த்தினார்கள்; வாயாரத் துதித்தார்கள். "எங்களுக்கு உயிர்பிச்சை தந்த உத்தமனே!" என்றார்கள். மன்சிங்கின் மனத்தில் எழுந்த எண்ணங்களை எடுத்தோத எவராலாகும்? அவர் ஆடினார் பாடினார், ஆநந்தக் கண்ணீர் வடித்தார். "என்னையும் என் மனைவி மக்களையும் காத்ததன்றி, எங்கள் மானத்தையும் காத்த வள்ளால்! நீர் செய்த பேருதவிக்கு நான் செய்யும் நன்றி யாதோ அறியேன். உதவியற்ற இரண்டொரு நிலத்திற்காக இந்நாள்வரை உம்மைப் பகைத்ததையெண்ணி என் உள்ளம் நொந்தேன். நான் செய்த குற்றமும் கொடுமையும் குன்றுபோலும் என் எதிரில் குவிந்தது. என் அருமை உமேத்சிங்கு! என்னை நீர் அறிவீர். உம்மை நான்

சிறுமிகள் பாடசாலைக்குச் செல்வது சரிதான். ஆனால் வீட்டில் அவர்களின் படிப்பைக் கவனிப்போர் எங்கேயோ சில பேர்கள் தான். என் செய்ய?

அறிவேன். நான் செய்த பிழையை இன்று மன்னிக்கவேண்டும். உமது இஷ்டம் எதென்று உரைப்பீர். அது எதாயினும் முடிப்பேன். இந்த கொட்வார் கோட்டையை விரும்பினும், என் முடியில் விளங்கும் மாணிக்கத்தை வேண்டினும் சரியே" என்று உரை தடுமாற, கண்ணீர் சொரிய இரக்கக் குரலுடன் கூறினன். உமேத் சிங்கின் உள்ளம் கரைந்தது. அவன் கண்களிலும் நீர்த்துளி கிளம்பி விழாது நெடுநேரம் ததும்பிக்கொண்டிருந்தது. அப்பால் அவன் மன் சிங்கை நோக்கி, "ஐயாவே! நில விஷயத்தில் தங்களின் இஷ்டத்திற்கு எதிர்கூறியது என்றன் பிழையாகும். ஆகவே மன்னிக்கவேண்டியது தாங்கள் ஆவீர்" என்று எடுத்துரைத்துத் திரும்பவும், "என் அன்புள்ள சிரேஷ்டரே! நான் வேண்டியதைக் கொடுப்பதாய்ச் சொன்னீர். தங்கள் சம்மதப்படியே ஆகட்டும்; தங்கள் அரண்மனைக்கழகையும், ஊருக்கொளியையும் அளிக்கும் ஒப்பிலா மாணிக்கத்தைத் தந்தருள்வீர்களா?" என்முன். மன்சிங்கு, "நீர் இம்மாணிக்கத்தை ஒப்பற்றதென்றது உண்மைதான். இஃது என் குடும்பத்தில் நெடுங்காலமிருந்து இப்போது என் முடியில் ஒளிர்கிறது. என் நாட்டில் இதனினும் உயர்ந்தது வேறில்லை. இது என் உயிரை ஒத்ததென்று என் உள்ளம் அறியும். ஆயினும், இவ்வுயிரும் இம்மணியும் இவ்வுலகும் உமது இஷ்டப்படியே ஆகட்டும். நீர் சண்டையில் காட்டிய வீரத்திற்கும், செய்த உதவிக்கும் ஓர் அறிகுறியாய் இஃது நெடுங்காலம் உம்மிடத்தில் இருக்கட்டும்" என்று சொல்லி முடியில் அணிந்த மாணிக்கத்தை எடுக்க முயன்றார். ஃ

உமேத்சிங்கு புன்னகைகொண்டு அவர் கையமைத்து, "அன்புள்ள ஐயாவே! நான் வேண்டுவது தங்கள் தலையில் சூடிய மாணிக்கமன்று. அந்த மாணிக்கத்தினும் சிறந்ததாகிய தங்களின் அருமைச்செல்வி பந்நா தேவியேயாகும். இக்கட்டழகியை எனக்குக் கடிமணம் செய்து தாருங்கள். நிழல்போலப் பிரியாமல் மனம்போல நடப்பேன்" என்று வேண்ட, மன்சிங்கு சம்மதித்தார். தன் மகளுக்கு இவரையன்றி ஏற்ற மணாளன் யாரே யுள்ளார்? அவளும் இவர்மீது ஆசைகொண்டதைத் தாமும் அறிவாரே? ஃ

உடனே கல்யாணத்திற்குச் சித்தமாயிற்று. சண்டைக்கு வந்த வீரனைவரும் கல்யாண விருந்தினராயினர். ஊர் முழுமையும் அலங்கரிக்கப்பட்டது. எங்கும் தோரணங்கள், எங்கும் பந்தர்கள், எங்கெங்கும் வாத்தியங்கள், எங்கெங்கும் விநோதங்கள். அன்று ஊாரனைவரும் ஒன்றுகூடிச் செய்யும் விழா நாளாயிற்று. மாப்பிள்ளை மணவரையில் வந்து உட்கார்ந்தார். அவர் முகத்தினழகும், தேகத்தி னுறுதியும் எல்லோர் மனத்தையும் கொள்ளைகொண்டது. கல்யா

எவன் மோசக்காரனே அவனையே கனவான் என்பவர் பலர். அவனுடைய மோசகுணங்களை யறிந்தாலும் அதை வெளியில் சொல்லுவதில்லை.

பார்வைக்குப் பெரியமனிதர்கள்தான். அவர்களின் உள்சங்கதி எவ்வளவு நாறுகிறதோ! பெரியமனிதர்களுக்குத்தான், தாசி, விபசாரம், மோசம், கடன் மேகவெட்டை, நீர்ரோகம், வாரண்டு, இன்சால்மெண்டு—இந்தப் பதவிகளெல்லாம் உண்டு. மோட்டாரைக் கண்டு மயங்கிவிட வேண்டாம்.

ணப்பெண்ணோ பச்சைநிறப் பட்டாடை தரித்துச் செம்பட்டுக் கச்சணிந்து, ஸவாபரணங்கள் தேகமெல்லாம் திகழ அன்னமென நடந்து வந்தாள். இவ்விருவர் முகங்களைப் பார்த்தோர் பலரும் பாலசூரியனையும் இளநிலவையும் பழித்ததென்று பகர்ந்தார்கள். மணப்பெண் கையிலேந்திய மலர்மாலையை மணமகன் கழுத்திற் சூட்டினள்.

ஃ

உடனே வாத்தியங்கள் முழங்கின. முரசங்கள் ஆர்த்தன. மறையவர் மந்திரம் சொல்ல, வனிதையர் மங்களம் பாட, மற்றையோர் ஆசிகூறினர். மாங்கல்ய தாரணம் ஆகித் திருமணமும் இனிதாக நிறைவேறிற்று. குறித்த நல்ல நாளில் காதலர் இருவரையும் பள்ளியறைக்கு அனுப்பிப் பல்லாண்டு பாடினர்கள். பத்மாதேவியின் பரவசம் பகரவும் வேண்டுமோ?

முற்றிற்று.

ப. சி. கோவிந்தசாமி ராஜா.


நாடகமேடையில் நிர்வாண நங்கை.

அமெரிக்காவில் நியூயார்க் நகரில் நியூ ஆம்ஸ்டர்டாம் நாடகமேடையில் ஒரு யுவதி வஸ்திரமின்றி முற்றிலும் நிர்வாணமாக ஒரு விசிறியுடன் தோன்றி பாடல்கள்பாடி நர்த்தனம் செய்து ஆடினள். இக்காட்சி முடிந்ததும் போலீஸார் இம்மாதைக் கைதுசெய்து விசாரணைக்குக் கொண்டுவர, ஜூரிகள் தண்டிக்காது விடுதலைசெய்தனர்.

பட்டப்பகலில் பலருக்குமுன்பு ஒரு யுவதியை ஒருவன் வெகு தொந்தரை செய்து மார்பைப்பற்றியிழுக்க, அவளும் முகம்கோணாது அவனைத்திருப்திபடுத்த, மற்றவரும் இதை ஒரு அழகாகப் பார்த்துவிட்டுச் சிரித்துக்கொண்டே சென்றுவிட்டனர்.

ஒன்றை விரும்பிக் கேட்டால் ஆகட்டும் என்று உடனே பதில் சொல்வது. பிறகு தருவதேயில்லை. கேட்டுக் கேட்டு அலுத்து அவர்களே பிறகு மௌனமாய் விடச் செய்வது. இது ஒரு சமர்த்து.

சில வைத்தியர்கள் தொட்டால் அந்த இடம் உருப்படுவதுமில்லை, பிழைத்து எழுந்திருப்பதுமில்லை. அது அவர்களின் கைராசி. அவர்கள் எவர்களுக்கு மருந்து தந்தனரோ அவர்கள் கடவுளிடம் போய்விடுகிறார்கள். ஆயினும், வைத்தியரின் பெரிய தலைப்பாகைக்கும், தலையசைப்புக்கும் குறைவு இல்லை.



நினைக்கும் கேடு தனக்கு.



சேலம் ஜில்லா நாமக்கல் தாலூக்காவில்காவேரி யாற்றின் கரையில் மோகனூர் என்னும் ஊர் இருக்கிறது. இது ஒரு புராணப்பிரசித்தமான ஊர். இவ்வூருக்குக் கிழக்கில் நாவலடிக் கடவுள் ஆலயம் ஒன்று இருக்கிறது. சுமார் 15-தினங்களுக்கு முன் ஓர் மாட்டு வியாபாரி சில மாடுகளை வாங்க இவ்வூருக்கு வந்திருந்தான். இவ்வூர் தரகாளி ஒருவன் இவனை அநேக கிராமங்களுக்குச் அழைத்துச் சென்று மாடுகளைக் காண்பித்து வந்தான். அந்தத் தரகாளி இவ்வியாபாரியினிடமிருந்த முன்னூறு ரூபாயையும், இவனைக் கொன்று அபகரித்துக்கொள்ள நினைத்து இதற்காக வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்துவைத்தான். அவ்வேற்பாட்டின்படி வியாபாரி அவ்வூர் நாவலடியன் கோயில் பூசாரியால் பரிமாரப்பட்டுச் சாப்பிட்டு அக்கோயிலுக்கு அருகிலிருந்த தகரக் கொட்டகையில் தரகாளி குறித்த இடத்தில் படுத்துக்கொண்டான். சுமார் 10-மணிக்கு வியாபாரியின் முதுகில் யாரோ படாரென்று அடித்ததாக வியாபாரி மிரண்டு எழுந்து நான்குபுறமும் சுற்றி நோக்கினான். ஒன்றம் காணப்படவில்லை. இது தன் மனதின் கலவரம் என்று நினைத்து மறுபடியும் படுக்கப்போகும் சமயத்தில் பல்லி சொல்லுவதைக் கேட்டு மனதில் பயத்தை யடைந்து, உடனே அவ்விடத்தை விட்டுத் தான் படுத்துக்கொண்டிருந்த வேஷ்டியை அங்கே போட்டுவிட்டுக் கோயிலுக்கு முன் நிறுத்தப்பட்டிருந்த குதிரை வாகனத்தின்கீழ்ப் பதுங்கி பார்த்துக் கொண்டிருந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் தரகாளி வந்து வியாபாரியைக் காணாமல் அவன் படுக்கை மாத்திரம் கிடப்பதைக் கண்டு, 'வியாபாரி ஜலஸ்பரிசத்திற்குச்சென்றிருக்கிறான்' என்று நினைத்து அங்கேயே அப்படுக்கையிலே படுத்துக்கொண்டான். தெய்வச்செயலாக அவனுக்குத்தூக்கம் வந்துவிட்டது. சுமார் 12-மணிக்குத் தரகாளியால் நியமிக்கப்பட்டிருந்த 4 ஆட்கள் அங்குவந்து குடிவெறியால் அறியாமல் வியாபாரி என நினைத்துக் கொன்று பணத்திற்காகச் சோதனை செய்கையில் தரகாளி என உணர்ந்து உடனே அப்பிணத்தை ஆற்றிற்குக் கொண்டுபோகப் புறப்பட்டனர். இச்சமயத்தில் இதையெல்லாம் கவனித்திருந்த வியாபாரி போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சங்கதிகளைத் தெரிவிக்கப் போலீஸார் வியாபாரியுடன் ஆற்றிற்குச் சென்று கொலையாளிகளைக் கைது செய்தனர். வியாபாரியைக் கொல்ல நினைத்த தரகாளியே உயிர் துறந்தான். வியாபாரி கடவுளருளால் பிழைத்தான். என்னே கடவுளின் கருணை! கலிகாலப்பலன் கைமேலே என்பதுவும் இதனால் நன்கு விளங்குகிறது. K. V. இராமச்சந்திர ராவ்.

தலையாட்டி விருந்தாளிகள்

நமது வீட்டுக்கு வருகிற விருந்தாளி வகையினர் ஒரு காலத்தில் எவ்வளவோ நம்மை உபசரித்துத் தாங்கி நடந்தவர்களாயிருக்கலாம். அது எல்லாம் அந்தக் காலத்துப் பழய செய்தி. நடுவே இருந்தவர்கள் அந்த அன்பைக் குலைத்து வென்னீர் ஊற்றி வெட்டிச் சாய்த்துவிட்டார்கள். இப்போது அவர்கள் அன்னியர்களைப் போல் நடக்கின்றனர். வஞ்சக தந்திரங்களுக்குகளோ அதிகம்! அன்பின் பசையோ அவர்களிடம் கொஞ்சம் கூட இல்லை. இப்படி மாறிப் பேதமனதாய்விட்டவர்களுக்கு வெண்ணெய் உருக்கிய நெய்யில் ஆடைத் தயிரோடு பால் பழம் பலகாரத்துடன் உபசரித்தாலும் நமக்கு நல்ல பெயர் வரப்போவதுமில்லை. பழய அன்பை அவர்கள் காட்டப்போவதுமில்லை.

ஃ

மாறியது மட்டுமா? அவர்கள் செய்த கேவலமும் அலக்ஷியமும் எவ்வளவு? மனம் போனபடி ஏசிப்பேசித் தூற்றியது எவ்வளவு? என்னவோ சோற்றுக்குக் காத்துக் கிடப்பதாய் நினைத்துச் செய்த வீம்புகள் எத்தனை? அன்னோரின்மீது வைத்த நமது ஆசையின் ஏமாற்றங்கள் எத்தனை? அவர்கள் வஞ்சகமாகவே நடக்க நாம் அதை அன்பு என்றே எண்ணினோம்! இன்னும் அவர்களது சயால தந்திரங்களையும், நல்ல இடங்கள் தெரிந்திருந்தும் அவற்றைக் காட்டாததையும் நினைத்தால் நாளைக்கும் வயிறு கொதிக்கவே செய்கிறது.

ஃ

இவற்றையெல்லாம் எண்ணி ஒதுங்கியிருந்துவிட நினைக்கிறோம். இனி என்னதான் வணங்கி நடந்தாலும் அத்தனையும் வீணாகுமென்றே நமது உள்ளத்திற்குத் தோன்றுகிறது. நாமும் தூர விலகி விடுகிறோம். க்ஷேமசமாசாரக் கடிதப் போக்குகளுங் கூட இல்லாதபடி போய்விடுகின்றன.

ஃ

இவ்வித நிலையில் நமது அன்பை ஏமாற்றிச் சேவலம் செய்தவர் நமது வீட்டிற்குத் தமது காரியார்த்தமாய்த் தங்கிப் போக வருகிறார். அவருடைய தலையாட்டிச் சுபாவம் தெரிந்த நாம் அந்தச் சமயம் ஒரு அவசர காரியமாய் ஊருக்குப் போகவேண்டியிருந்து அவ்விதமே போய்விடுகிறோம். போனாலென்ன, வீட்டில் விருந்தாளியை உபசரிக்க நமது தாய் தந்தையர் இருக்கின்றனர். அவர்கள் விருந்தாளியை உபசரித்து நல்லது செய்கின்றனர். என்ன உபசரிப்பினும் தான் வந்திருக்கும்போது நாம் வெளியூருக்குப் போய்விட்டதானது விருந்தாளியின் மனதில் குத்தித் தொளைக்கின்றது. அதன்மேல் விருந்தாளி, "அவன் செய்தது நன்றாயில்லை; மறுபடியும் நான் இந்த வீட்டிற்கு வராதபடி செய்துவிட்டான்" என்று ஆத்திரத்துடன் சொல்லத் தொடங்குகிறார். ஏன் இப்படி ஆத்திரமோ? வீட்டுக்காரன் வெளியூர் போயினும் அவனது பெற்றோர்கள் வீட்டில் இருந்து விருந்தாளியை நன்கு உபசரிக்கிறார்களல்லவா? அந்த உபசாரத்தை வீட்டுக்காரன் செய்த உபசாரமாக எண்ணித் திருப்தி படுகிறதுதானே?

வீட்டுக்காரன் வேறே—அவன் பெற்றோர்கள் வேறே என்கிற பேத புத்தி—பிரிக்கிற சிந்தை—எதற்காகவோ? அந்த வீட்டுக்காரன் இருந்த விருந்தாளியின் வீட்டிற்கு வந்தபோது நடத்திய அவமான அலங்கோலங்களைப்போல் இவருக்கு இங்கு ஏதாவது நடந்ததா? இந்த விருந்தாளியின் வீட்டிற்கு இவ் வீட்டுக்காரன் மறுபடி வாராதபடி செய்து வசிப் பேசித் திட்டியதைப் போல் இங்கு எவராவது செய்தனரா? எவ்வளவோ பிரியமும் உபசாரமுமாகவன்றோ இவ் வீட்டுக்காரனின் பெற்றோர் இவ் விருந்தாளியைக் கவனித்திருக்கின்றனர். இவ்வித மிருக்க வீட்டுக்காரன் தன்னைக் கவனிக்கவில்லையென்று அவனையும், அவன் பெற்றோர்களையும் பிரித்துவைத்துப் பேசுவதேன்? பெற்றோர் கவனித்தால் அவர்களின் வயிற்றில் பிறந்தவன் கவனித்தது போலாகாதோ? இந்த விருந்தாளியின் வீட்டிற்கு, இவ் விருந்தாளியின் குமாரனுக்கு வேண்டியவர்கள் வந்திருந்து, அந்தச் சமயம் அந்தக் குமாரன் வெளியிற் சென்றுவிட, இவர்கள் வந்தவர்களைக் கவனித்து உபசரித்தால், அது அந்தக் குமாரனே உபசரித்ததுபோ லாகாதோ?

ஃ

இப்படிப் பிரிக்கிற புத்தியுள்ள விருந்தாளிகள் மகா ஆபத்தானவர்கள்; இரண்டு பக்கமும் தலையாட்டுகிற மகானுபாவர்கள். இவர்கள் பிளவு பட்ட வீட்டிலே இரு பக்கமும் மேளம் கொட்டுவார்கள். "தகப்பனர் செய்கிற உபசாரணை வேறே—குமாரன் செய்கிற உபசாரணை வேறே" என்று பிரித்துப் பேதம் காட்டுவார்கள். தகப்பனரிடத்தில் இனிக்கப் பேசி அவர் பேச்சுக்குத் தகுந்தபடி, "ஆம்! ஆம்! உங்களின் குமாரன் செய்வது சரியா யில்லை" என்று சொல்லிவிட்டு, பிறகு குமாரன் பக்கமாகத் திரும்பி அவன் இட்ட விருந்தைப் புசித்துவிட்டு அவன் மெச்சும்படியாக, "அப்படியா, உங்கள் தகப்பனரின் சங்கதி? எனக்கு இதுவரை தெரியாது; அவ்வாறனல் நீ செய்வது சரிதான்" என்று இந்தப் பக்கமும் தித்திக்கப் பேசிவிட்டு, இவ்விதமாக இரு பக்கத்திலும் தலையாட்டிவிட்டுத் தான் வந்த காரியத்தையும் சௌகரியமாய்ப் பார்த்துக்கொண்டு, அந்த மட்டில் எதிலும் பட்டுக்கொள்ளாமல் ஊருக்குப் புறப்பட்டு விடுவார்கள். ஐயோ! இத்தகைய மண் குதிரைகளை நம்பித் தகப்பன் தன் குமாரன்மீது புகார்கள் கூறியும், குமாரன் தன் தந்தைமீது தன் எரிச்சல்களைக் கொட்டியும் கதறுகிறார்கள். இவ்விருந்தாளி இருவருக்கும் தலையாட்டிவிட்டு வீட்டின் சேவலத்தை யறிந்து கொண்டு கம்பி நீட்டுகிறார். இந்த மண் குதிரையிடம் சொல்வதிலும் ஒரு தெய்வத்தின் முன்பு சொல்லிக் கொள்வது பயன்படும். எந்தக் காலத்திலும் தலையாட்டி விருந்தாளிகளையும் மித்திர பேதக்காரர்களையும், பொறுமைக் கண்ணர்களையும், அன்பு மாறிப் பின் பாசாங்கு பேசுவோர்களையும் நம்பவேண்டாம். உங்கள் வீட்டுச் சங்கதிகளை அவர்களிடம் சொல்லவும் வேண்டாம். குடும்ப கௌரவத்தைக் கெடுக்கவும் வேண்டாம்.

கணவனும் மனைவியும் குடித்தனமானல் அங்கு தடித்தனமில்லை. எந்தக் கலகமுமில்லை. இடையில் ஒருவர் நுழையினே வருகிறது தொல்லை.

இந்தப் பக்கம் ராமபாணம்போலத் துளைத்துக் குத்தித் திட்டுகிறது. பிறகு அந்தப்பக்கம் வந்து ஏவாலட்டு கொடுக்கிறது. என்ன பிரயோஜனமோ?

யாவும் விதியின் பிழை.

ஏன் கவலைப்பட? கவலைப்பட்டுக்கொண்டு கையிலுள்ள சொற்ப சந்தோஷத்தையும் இழக்கக் கொடுப்பதில் என்ன பயன்? ஒரு வர்த்தக ஸ்தலத்திலிருந்து ஒரு நூறு ரூபாய் தொகையை நாம் எதிர்பார்க்கிறோம். அது அங்குக் கொடுக்கப்பட்டுள்ள நமது பண்டங்கள் விற்பனையானதில் சேர்ந்த தொகை. அதை எதிர்பார்த்துப் பல செலவுகளுக்கும் கணக்குப்போட்டு, 'இன்னின்னதை அத்தொகையைக்கொண்டு செய்ய வேண்டும்' என்று தீர்மானிக்கிறோம். பிறகு அத்தொகையை நாம் கேட்கும் சமயம் அந்த வர்த்தக ஸ்தலத்தார் நெடுநாளாகத் தராதுள்ள நமது பழய கடன் பாக்கிக்கு எடுத்துக்கொண்டதாக அதற்கு விவரக் கணக்கும் அனுப்புகிறார்கள். பிறகு செய்வதென்ன? கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமற்போன பரிதவிப்பு கொஞ்சமா? இருதயம் உடைந்து போகிறது. வாராததற்கு இனி கவலை கொண்டு என்செய்ய? அத்துடன் அந்த விசாரத்தைத் தலைமுழுகித் தீர்த்துவிட்டுச் சந்தோஷமாயிருக்கப் பார்ப்பதே நமக்கும் நமது சரீரத்திற்கும் சுகம் தரும். அவ்விதமின்றி, கவலைப்பட்டு அதன்வழியே தேக சுகத்தையும் கெடுத்துக்கொள்வதில் என்ன பயன்? ஏற்பட்ட ஏமாற்றம் பெரிய அதிர்ச்சியே; திடுக்கிட்டு வாடக்கூடியதே. வருந்தி யாவதென்ன? ஃ

எதுவும் நமது எண்ணம்போல் முடிகிறதா? 'இறைவனார் திருவுளச் செயல்' என்று விட்டுவிடுவதே— விட்டுவிட்டு ஓய்வதே, சமாதான மார்க்கம். ஆபீஸ் மோட்டார் வண்டியில் ஏறிப் புறப்படுகையில் வெகு அதிகார தோரணையில் உட்கார்ந்தோம். ஆபீஸ் பணியாட்கள் யாவரும் வணங்க, நாம் ஒரு தலையசைப்பு அதற்குக் காட்டிவிட்டுக் கம்பீரமாய் மாலைக்காலத்தின் சுகத்தை யனுபவிக்கக் கடற்கரைக்குச் செல்லுகிறோம். அங்கும் நமக்குப் பலநண்பர்கள் சூழ்கின்றனர். பொழுது வெகு உத்ஸாகமாக, நமது வாக்கே தலைமையாக ஒளிவீச ஆநந்தத்துடன் இருக்கையில், ஒரு சேவகன் நம்மைத் தேடிவந்து ஒரு கடிதத்தை நீட்டுகிறான். அதில் நாமிருக்கும் உத்தியோகப் பதவிக்கு வேறொருவரை நியமித்துவிட்டதாகவும், நாளையதினம் முதல் வேலைக்கு வரவேண்டியதில்லையென்றும், ராஜிநாமா கொடுத்துவிடும்படியும் கண்டிருக்கிறது. ஆ! என்ன பேரிடி இது!! நமது விருத்தாப்பிய காலம் வரையில் நமக்கு இந்தப் பதவி சொந்தமாயிருக்குமென்று நம்பியிருந்த நமது உள்ளம் ஒரு தள்ளு தள்ளிப் போகிறது. இன்று மூடிப் பூட்டிவிட்டு வந்த மேஜையை நாளை நமது சொந்த மேஜையாக எண்ணித் திறப்பதற்கில்லாமற் போய்விடுகிறது.

பழகியகாலம் சிறிதேயெனினும் அது நெடுங்காலம்போல ஆகிச் சொந்தம் வேரூன்றிவிடுகிறது. அதிக காலம் பழகிய இடம் பிரிகிறதுமுண்டு.

இதைத் தொடர்ந்து பல துன்பங்களும் நேர்கின்றன. கவலைப்பட்டு ஆவதென்ன? மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டு வேறொரு தொழிலுக்கு முயன்று நாட்களைக் கழிக்க வேண்டியதே. அந்த வழியில் ஒரு புது ஸந்தோஷ திருப்தியை வலியத் தானே நம் ஹிருதயத்துக்குள் நுழைத்துக்கொண்டு மனோ அமைதியைத் தேடவேண்டியதே.

ஃ

நம்பிநின்ற இல்லாள் 'இல்லாள்' ஆக, அவளை ஒரு மூலையிற் சாய்த்துப் பார்க்கவும் தலை-விதி-வசம் சிலருக்கு வாய்க்கின்றதன்றோ? தலைவி-திவசம் செய்யக் காலவினைசூழ்கின்றதன்றோ? அதற்குக் கவலைப்பட்டு ஆவதென்ன? வருவது வழியில் நிற்குமா?

ஃ

எத்துணை நண்பர்கள், எத்துணை உறவினர் எவ்வெவ்வாறாக மனம் மாறினர்? முன் அவர்கள் இருந்த அன்பும் அரவணைப்பும் இந்நாள் காண்கின்றோமா? அது ஒருநாள்—இது ஒரு நாள் என்றே மனோசாந்தியுடன் சொல்லவேண்டியதாகிறது.நம்முடன் ஒட்டிநின்ற—நமது தேகத்திற்கே அங்கஸம்ரக்ஷகர்கள்போல் ஒருபோது காப்பாகச் சூழ்ந்துநின்ற—அன்பின் களஞ்சியங்கள் இன்று இவ்வுலகிலேயே இல்லை. இல்லாவிடினும் நாம் காலம் கடத்தவேண்டியது கட்டாயமாகிவிடுகிறது. அந்தக் கவலையைச் சற்று மறந்தால்தான் நாம் கொஞ்சம் சிரிக்கவும் தருணம் கிடைக்கலாம்.

ஃ

உற்ற துணைகள் பிரிவதும் மாள்வதும் உலக வாழ்வில் மிகமிக. அந்தச் சோதனைகளையும் சகிக்கத்தான் வேண்டும். சில இடங்களில் சோதனைக்குள்ளாயினோனுக்குக் கவலை குறைந்திருப்பது போலும், அதற்கு ஆறுதல் கூற அருகில் அமர்வாருக்கு அக்கவலை மிகப் பெரியதாய்ப் படுவது போலும் உள்ளது. இதன் காரணமென்ன? சோதனைக்குள்ளாயினோன் அதில் முழுகி எழுந்துவிட்டதனால் அவனைக் குளிர்விட்டு விலகிவிடுகிறது. அதனால் அவன் அதைச் சமாளிக்க, அதிக சகிப்புடையவனாகக் காட்டிக்கொண்டு போக நேருகிறது. ஆறுதல் கூறவந்தார்க்கோ அந்தச்சோதனையின் அநுபவம் அணுவளவும் கிடையாது. ஆதலின், அச்சோதனையைப் பெரிதாக நினைத்துத் தாங்களும் நடுங்கி வாடுவதன்றிப் பிறருக்கும் தேறுதல் கூறத் திறனின்றி அவர்களுடன் துக்கிக்கின்றனர். இது உண்மையான உள்ளமுடையாரிடத்துக் காணும் காட்சி. ஃ

இனி ஒப்புக்குத் துயரம் விசாரிக்க வருவாரும் உண்டு. அன்னோர் அச்சோதனையைச் சாமான்யமாகவே கருதுவர். தமக்கு நோவே நோதென்றுங்கூட எண்ணுவர். பிறாது துயரக்கவலைகளை அற்பமென நினைக்கும் அலக்ஷியத்தன்மையும் வாய்ந்தவர்கள். அத்தகையோர்—"இதற்கா கவலைப்படுவது, சீ! கவலையை விடு! தைரியங்கொள்!" என்று தேற்ற வருவர்; அதே நிமிஷத்தில் வேறு கதைகளையும் பேசத் தொடங்கிக் கொள்வர். ஏனெனில், தாங்கள் கூறுவதற்கிருந்த ஆறுதல் மொழிகளைச் சொல்லித் தொலைத்தாய்விட்டதென்பது பற்றுதலில்லாத அவர்களின் அல்பமான எண்ணம். இத்தகையோர்தான் உலகில் அதிகம்.

ஃ

'அடியேனும்' 'அடியேனும்' என்பார்க்கு அடியேனும் உதையேனும் கொடுத்தால் உடனே அவர்களது சாந்தகுணம் மாறி வேங்கையாகி விடுவாராம்.

இனி, மனோவலிமை படைத்து 'யாவும் அய்யன் செயல்'எனத் தேறிக் கவலையை அந்த நிமிஷமே மறந்து சர்வசாமான்யமாய் எந்த ஸம்பவமும் நேராதவர்போல் இருந்துகொள்ளும் நிடச்சித்தர்களான பெரியோர்களும் உண்டு. இரண்டொருதுளிக் கண்ணீர் விட்டுவிட்டு அவ்வளவில் மறந்து தெய்வத்தியானமாய் இருந்துவிடுவர். இவ்வித மனோவுறுதி அபூர்வ நிகழ்ச்சி. ஒருபெண் தான் இறக்கநேர்ந்தபோது "நீ எனக்காகக் கண்ணீர்விடவே கூடாது; இறைவனின் திருவடிநீழலை யடைந்தேனென்று திருப்தியாக இருந்துவிடு" என்று தன் தாயாரிடம் வேண்டிக்கொண்டு கண் மூடினாள். அத் தாயும் தன் குமாரத்தியின் சொற்படியே ஒரு துளி கண்ணீரும் சிந்தாது மௌனமாக நின்றுவிட்டனள். தாங்கள் மகா வருந்துவதுபோல் காண்பித்துக்கொள்ள நாடிவந்தோர் மட்டும் ஓயாது புலம்பிக் கண்ணீர் பெருக்கிக் கனத்ததொனியைக் காட்டினர். ஈன்ற அம்மை கண்ணீர் விடாமையால், அவளுக்குத் துக்கமில்லை யென்பதோ?—கண்ணீர் காட்டாமைக்குப் பழிக்கவும் கூடுமோ? மனோ உறுதிக்கு இது ஒரு உதாரணமாகும்.

ஃ

"தங்களின் ஆறுதல் கடிதம் பெற்றேன். ஈசுவர சங்கல்பத்தின் படியே சகல காரியாதிகளும் நடக்கின்றனவென்றும், நம்மால் கூட்டவோ—குறைக்கவோ — இயலாதென்னும் கொள்கையுடையவர்களுக்கு அநேகமாய்ச் சுகதுக்கங்கள் சமமாகவே தோன்றும். மேலும், 'கடவுள் நன்மையே செய்கிறார்' என்னும்கொள்கையுடையவர்களுக்கும் வருத்தம்வரக் காரண மில்லை. இம்மாதிரி எண்ணமுள்ளவர்களில் நான் ஒருவனாதலின்.............. உயிருடனிருக்கும்வரை பக்கத்திலேயே இருந்து நான்கு தினங்கள் இரவும் பகலும் வேண்டிய ஔஷதங்கள் கொடுத்தும், சௌகரியங்கள் செய்தும் வந்தேன். இறப்பதற்குமுன்னும் அமைதியாய்ப் பக்கத்தில் உட்கார்ந்து 'திருப்பாவை' முப்பதும் சேவித்து நாராயண மந்திரமும் ஜெபித்து அவனது ஆத்மா சாந்தியடையுமாறு பிரார்த்தித்தேன். பிராணன் பிரியுமுன்பு பால் ஊற்றி, பிராணன் திட்டமாய்ப் பிரிந்ததை அறிந்தவுடனே நிம்மதியாய் எழுந்துவந்து, தந்தி கொடுக்க வேண்டியவர்களுக்குத் தந்தியும், கடிதம் எழுதுவோருக்குக் கடிதங்களும் எழுதிக்கொண்டும் மற்றும் செய்யவேண்டிய காரியாதிகள் செய்துகொண்டும் இருந்தேன். மணலில் சிந்திவிட்ட பாலைத் திரும்பப் பெறுவது சாத்தியமா? சாத்தியமல்ல. அதைப் பற்றி வருந்துவதும் கவலைப்படுவதும் புத்திசாலிகளான மாந்தர் செய்கையாகுமா? ஆகாது. ஆகையால், அவ்வாறு செய்வது அறிவீனம் என்பதே எனது கொள்கை. அப்பேர்ப்பட்ட கொள்கையுடையவர்களில் நானும் ஒருவனாதலால் நான் இப்பேர்ப்பட்ட சம்பவங்கள் நடக்கும்போது கண்ணீர்விடவாவது அலறவாவது தலையை முட்டிக்கொள்வதாவது செய்வதில்லை."

ஃ

இத்தகைய நிடச்சித்தர்களும் இருக்கின்றனர். ஆயினும், மரணமுற்றோரை இனிக் காண்பதற்கில்லாத நிலையில், திடீரென எமாறிவிட்ட

பட்டிக்காட்டானென்று சட்டிக்காட்டுவோர் அவன் கெட்டிக்காரத்தனத்தை எட்டிக்கொள்ளினும் கிட்டிக்கொள்ளாதவராவர்.

நிலையில் மனிதன் ஒரு துள்ளித்துள்ளிப்போதலும், அலறிவிடுதலும், கண்ணீர் பெருகுதலும், 'இனி அந்த முகத்தை இவ்வுலகிலேயே வாழ் நாளில் காண இயலாதே' என்று தவித்தலும் இயற்கையில் நேரக்கூடியதே. அதை மனோவலிமைக் குறைவாகவேனும், பேதமையாகவேனும், அறிவீனமாகவேனும் சொல்வதற்கில்லை. நாம் வற்புறுத்த வந்த விஷயம் உலகக் கவலைகளைப்பற்றியேயாயினும், மரணசம்பவங்களில்கூட இத்தகைய திடசித்தமுள்ளவர்கள் இருக்கிறார்கள் என்பதை விளக்கிக் காட்டுவதே இங்கு நமது நோக்கம். மரண காரியத்திற்கே அத்தனைத் திடசித்தமிருப்பின், அற்பமாகிய கவலைகளினிடத்து அதைப் பொருட்படுத்தாது செல்லும் மனோவுறுதியை ஏன் ஏற்கக்கூடாதென்பதே இங்கு நமது வினா? ஃ

ஏற்கலாம். அதற்கு வழியுமுண்டு. அந்தவழி ஒவ்வொரு பாடுகளின் மூலமாகவேதான் நமக்குக் கிடைக்க வேண்டியிருக்கிறது. முதலாவதாக நமக்கு நேரும் சோதனையில் நாம் எவ்வளவோ கலங்கிப் போகிறோம். அதற்கு அடுத்துவருகிற சோதனையில் நாம் சிறிது பக்குவப்பட்டு அதை சமாளிக்கப் பார்க்கிறோம். இவ்விதமே நெடுக நாம் சோதனைக் குழிகளின் மூலமாகவே பக்குவத் தேர்ச்சியைப் பெறும்படி நேர்கிறது. இது மிகக் கஷ்டமான சமாளிப்புத்தான். ஆயினும் அதற்கான ஆற்றலையும்மனோதிடத்தையும் தந்தருளுமாறு பகவானைப் பிரார்த்திக்கக்கடவோம். "விதியின் பிழை"க்கு நாம் நொந்து அலறுவதில் ஆவது என்ன?

ஹா! இதென்ன எலியும் பூனையும் போன்ற வாழ்வு?
மனைவி தன் பட்டித்தனத்தையும் வாய் நீளத்தையும் காட்டுகிறாள். புருஷனோ தன் கை நீளத்தையும் தன் ஆத்திரத்தையும் காண்பித்து அவளைப் புடைக்கிறான். வீட்டுக்குள் சமாதானம் வேண்டாமா? கணவனை அவள் அலக்ஷியமாக நினைக்க, அவளை ஒரு எமகாதகியாக கணவன் எண்ணுகிறான். உன்னாலானது பார் என்கிறாள் அவள்! என்னாலானது உதைப்பதே என்கிறான் இவன்!

தங்களின் பொய்மூட்டையை அவன் உண்மையென நினைக்கும்படி செய்துவிட்டதாய்த் தங்களின் சாமர்த்தியத்தைத் தாங்களே மெச்சிக்கொள்ள, அவனோ இவர்களின் பொய் மூட்டையைக் கண்டு, தான் ஏமாறாதவனென்பதை இன்னும் அவர்கள் அறியவில்லையேயென்று வாய்விட்டுச் சிரிக்கிறான்.

ஒரு குடும்பம் இன்னொரு குடும்பத்துடன் வந்து சில நாளோ பல நாளோ தங்கினாலும், கடைசியில் அந்தந்தக் குடும்பமும் அதனதன் கணக்கும் காசும் வெவ்வேறுதான். ஆனால் இலை போடுகையில்மட்டும் ஒன்றாயிருந்து உண்ணும் சொந்தமாம்.

மோகமின்னார் தேகமெல்லாம் மேகமே. அவர் போகமோ ரோக யோகமே.



பெரியாரின் மொழிகள்



(முன்பக்கம் 367-லிருந்து)

566. Now, God be praised! that to believing Souls, Gives light in darkness, Comfort in despair. SHAKESPEARE.

நம்பிக்கை உள்ளவனுக்கு ஆபத்துக் காலத்தில் தக்க யோசனையும் ஆறுதலும் உதவும் கடவுளின் அருள் தான் என்னே! ஷேக்ஸ்பியர்.

567. In journeys as in life, it is a great deal easier to go down-hill than up. DICKENS.

வாழ்க்கையைப் போலவேதான் பிரயாணங்களிலும் தாழ்வான இடங்களில் இறங்கிச் செல்லுவது உன்னதமான இடங்களில் ஏறிச் செல்வதைக் காட்டிலும் எவ்வளவோ சுலபமாய் இருக்கிறது. டிக்கன்ஸ்.

568. Throughout this beautiful and wonderful creation there is a neverceasing motion, without rest by day or night, everweaving to and fro.

LONGFELLOW.

ஆச்சரியமும் அழகும் வாய்ந்த இந்த சிருஷ்டி எப்போதும் ஓயாமல் இயங்கின வண்ணம் இருக்கிறது.

லாங்பெலோ.

569. There are times when ignorance is bless indeed.

DICKENS.

அறியாமை போற்றப்படும் காலங்களும் உண்டு. டிக்கன்ஸ்.

570. What cannot be eschew'd must be embraced.

SHAKESPEARE.

பின்பற்ற முடியாதவை அவசியம் ஆதரிக்கப்படவாவது வேண்டும்.

ஷேக்ஸ்பியர்.

571. I am persuaded that God's Armour of Light, As it is loved and lived in, Will preserve you. LONGFELLOW.

தெய்வ அருளானது உனது வாழ்க்கை நலத்திற்கும், அன்புக்கும் ஏற்ப உன்னைக் காத்தளிப்பதாய் இருக்கிறது. லாங்பெலோ.

T. R. ஸ்ரீநிவாஸன், B. A.

II

572. God did not create boys and girls to marry each other, but to play with each other; marriage is for men and women, not for boys and girls.

சிறுவரும் சிறுமிகளும் பரஸ்பரம் மணந்துகொள்ள வேண்டுமென்று கடவுள் அவர்களைப் படைத்தாரில்லை; ஒருவருடனொருவர் சேர்ந்து விளையாட வேண்டுமென்பதே கடவுளது எண்ணம். விவாகமென்பது (வளர்ச்சியடைந்த) புருஷருக்கும் பெண்டிர்க்குமேயன்றி, சிறுவர் சிறுமியர்க்கல்ல.

573. Hate the sin and love the sinner.

பாப கர்மத்தை நிந்தனை செய்; பாபியினிடம் அன்பு கொள்.

574. Many can argue, but not converse.

பலர் வீண்வாதம் செய்வார்கள்; ஆனால், சிலர் இரமணீயமாகச் சம்பாஷணை புரிவார்கள்.

575. A good name is sooner lost than won.

நல்ல பெயரெடுப்பது மிககடினம்; அதை இழப்பது வெகு சுலபம்.

576. What is done in a hurry is never well done.

அவசரப்பட்டுச் செய்வதெல்லாம் அறைகுறையாகச் செய்வதாகும்.

R. இராம கிருஷ்ணன், M. A.

பொறாமைப் பேய்களை ஒதுக்கு.

எவன் உன் காரியங்களில் பொறாமைகொண்டு பழிக்கத் தொடங்குகின்றானோ அவனைப்பற்றி ஜாக்கிரதையாகக் கவனித்துவந்து சிறுகச் சிறுக விலகிக் கடைசியில் முழுதுமே ஒதுங்கிக்கொள். அவனது எந்தச் சதிதத்திற்கும் விடை தராதே. அவனை உன் வீட்டிற்கு வரும்படியும் வைத்துக்கொள்ளாதே. பொறாமைப் பேய்கள் நமக்கு எது முக்கிய இடமென்று தெரிந்துகொண்டு அங்கு போய் நம்மைத் தூற்றிக் கொள்ளி வைப்பார்கள். ஆதலின், நமக்கு வேண்டிய முக்கியஸ்தர்களை அவர்களுக்கு ஒருபோதும் பழக்கம் செய்துவிடக்கூடாது; அது மிக்க ஆபத்து. எந்த இடத்தில் வைத்தால் தீப்பற்றிக்கொள்ளுமோ அந்த இடம் பொறாமைப்பேய்களுக்குத்தான் நன்கு தெரியும். இந்தப் பொறாமைக்கு அல்ப சுபாவமும் கேவலபுத்தியுமே காரணம். இவர்களைவிட்டு ஒதுங்குதலே க்ஷேமமாகும்.

எங்கெங்குபோய் எவரெவர் காலில் விழவேண்டுமோ அங்கெல்லாம் விழுந்து கும்பிட்டுக் காரியத்தை முடித்துக்கொண்டு, தான் அங்கு கெஞ்சியதையும் காலில் விழுந்ததையும் மறைத்துவிட்டுப் பணமூட்டையுடன் தன் ஊர் வந்து வீரபுருஷன்போல் தன்னவர்களிடம் மீசை முறுக்குகிறான்.

நகைகள் விற்றுப் பழக்கமுள்ளவர்கள் நாம் இருக்கும் வண்டியில் ஏறினால் குழந்தைகளின் கையிலுள்ள நகைகளில் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும். வண்டியில் ஏறிய இவ்வகையினர் ஒருவர் குழந்தையின் கையிலிருந்த பொன் வளையலை வெகு தந்திரமாய் கத்தரித்துவிட்டார். ஆயினும் அதை எடுத்துக்கொள்ள அவருக்கு முடியவில்லை. அதற்குள் வண்டி நிற்கவும், யாவரும் இறங்கவும், வண்டியிற்கிடந்த வளையலை ஒடிந்து விழுந்துவிட்டதாக எண்ணி அதற்குரியவர்கள் எடுத்துக்கொள்ளவுமாக நேர்ந்துவிட்டது.



நமது கடையில் ஒரு வாசகசாலை யுண்டு. அதற்கு ஒரு ஆசிரியர் எழுதிய நூல் ஒன்று வேண்டியிருந்து அதை வியாபாரிகளுக்குத் தருகிற விலையில் கமிஷன் தள்ளி யனுப்பும் படி நமது குமாஸ்தா அந்த ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதற்கு அந்த ஆசிரியர் பின்வருமாறு வரைந்தார். "விலையைக் குறைத்துத் தரும்படி கேட்பதற்கு இது மீன் கடையல்ல. புஸ்தகத்தில் கண்டிருக்கிற விலைதான் அதன் உண்மை விலை. வியாபாரிகட்குத் தருகிற விலையில் தர உமது கடை வியாபாரக் கடையல்ல. மேலும் ஒரு புஸ்தகத்திற்கு எவ்விதக் கமிஷனும் கிடையாது. உமது கடையைப் போன்ற பொது வாசக சாலைகளும், லைப்ரேரிகளும் நூலாசிரியர்களையும் பத்திராசிரியர்களையும் அடி வயிற்றில் அடித்து அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நாலு காசையும் கிடைக்காதபடி செய்து விடுகின்றன. ஒரு பொது வாசக சாலைக்கு ஒரு புஸ்தகம் வருமானால் ஒரு முப்பது பேர் போல் வாசித்து விடுகின்றனர். நூலாசிரியருக்கு 29-புஸ்தகங்கள் விலையாகாதபடி இந்த வாசகசாலை செய்து அவரது அடி வயிற்றில் அடித்துவிடுகிறது. இவ்விதமே ஒரு பத்திரிகையை இந்த வாசக சாலை தருவித்து அதை நாற்பது பேர் வாசிக்கச் செய்வதில், 39—சந்தாதார்களைப் பத்திராசிரியர் இழந்து விடுகிறார். பொது வாசக சாலைகள் நூலாசிரியர்கட்கும், பத்திராசிரியர்கட்கும் செய்யும் உதவி இதுவே. உண்மை இவ்வாறிருக்க, சில சங்கங்களும், சில வாசகசாலைகளும் தங்களுக்குக் குறைந்த விலைக்குப் புஸ்தகங்கள் அனுப்பவேண்டு மென்றும், இன்னும் அவர்—இவர்—இனமாக அனுப்பியதுபோல் பரிசாகவே அனுப்பவேண்டுமென்றும், இவ்விதமே பத்திரிகைகளையும் குறைந்தசந்தாவுக்கும் இலவசத்திற்கும் தரும்படியும் எழுதுகின்றன. சிலர் "வாசகசாலைக்காரர்" என்று கௌரவப் பெயரையும் வைத்துக்கொண்டு பெருமையளக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையில் உங்கட்கு விலை குறைத்து அனுப்பி நாங்கள் அடையும் லாபம் என்ன? எமது பசிக்கு ஒரு கவளம் சாதம் நீங்கள் கொடுப்பீர்களா? நாங்கள் வியாதிப் படுக்கையில் விழுந்தால் நீங்கள் பக்கத்தில் வந்து பார்ப்பீர்களா? செலவிடுவீர்களா? அல்லது எங்கள் மீது உங்களுக்கு அன்பு ஏதாவது பொங்கி வழிகிறதா? ஒன்றுமில்லையே. நாம் விலை குறைத்தோ—இனமாகவோ புஸ்தகம் அனுப்பி நீர் பெற்றவுடன் "சரி; ஏமாறி அனுப்பிவிட்டார்; நமது கடிதம் அவரை நன்றாக மயக்கிற்று" என்று சொல்லிக் கொண்டு அத்துடன் மறந்துவிடப்

திடீரென்று நடுவில் முறித்துக்கொண்டு பிரிந்துவிடுகிற குணம் சிலருக்கு இயற்கையாய் ஏற்பட்டுவிட்டபோது, அவர்களிடம் மற்றவர்கள் ஜாக்கிரதையாகவே பழகவேண்டி வருகிறது.

போகிறவர்கள். இதுதான் நாளைக்கும் நடக்கும் விஷயம். இதில் சில உத்தமர்கள் இருக்கலா மாயினும் அது அத்தனை அதிகமில்லை. ஆதலின், நீங்கள் சரியான விலை கொடுத்தே பெற வேண்டும். தபால் செலவைக் கீக்கி யனுப்பும்படி எழுதினால் தபால் ஸ்டாம்பு இலவசத்திற் கிடைப்பதல்ல வென்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.''—இக்கடிதத்தை நமது கடையிலிருந்தவர்கள் அன்புடன் வற்று, சரியான விலைக்கே புஸ்தகம் அனுப்புமாறு ஆசிரியருக்கு எழுதவதென்று தீர்மானித்தனர். ஆசிரியர் எழுதியிருப்பவைகள் யாவும் உண்மையானவையே யென்றும் முடிவு செய்தனர்.

ஃ

''வீட்டில் மாமிக்கு மிக்க வியாதி. குழந்தை விளக்கைத் தள்ளி அதுபக்கத்திலிருந்த பஞ்சில் விழுந்து தீப்பற்றி மேல் கூரைக்கும் தாவிக் கால் பாகம் எரிந்தும் போனது. வேலைக்காரி குடத்துடன் ஆற்றுக்குச் சென்றவள் அதை 2-ரூபாய்க்கு அடகு வைத்து ஓடிவிட்டாள். இரு பையன்களில் ஒருவன் பரீக்ஷை தேற, மற்றவன் தவறிவிட்டான். பெண் குழந்தை ருதுவாகி 4-நாள் ஆகிறது. வீட்டு வரிக்காகப் பில் கலெக்டர் அதிக தொந்தரை செய்கிறார். மனைவியைச் சேர்ந்தவர்களில் 6-பெயர்கள் 12-நாட்களாய் ஒரே கூட்டமாய் உட்கார்ந்திருந்து நன்றாகத் தின்று கொழுத்து வருகிறார்கள். இவற்றைப் பற்றி வெளியூரில் வியாபாரத்திற் காகச் சென்றிருக்கும் வீட்டுக்காரருக்குப் பின்வருமாறு கடிதம் எழுதப் படுகிறது:—

> நமஸ்காரங்கள். தங்கள் கடிதம் கிடைத்தது. மாமியாரின் நிலை எப்போதும் போலவே. வீட்டிற்கு வேறு கூரை போடவேண்டும். 2-ரூபாயில் ஒரு குடம் வாங்கியிருக்கிறேன். குழந்தைகள் பரீக்ஷையில் மிக்க கஷ்டப்பட்டனர். ராதா தங்களை உடனே வரும்படி எழுதச் சொன்னாள். வீட்டு வரி கவனிக்கவும். எனது பந்துக்களின் உதவி இந்தச் சமயம் கிடைத்தது எனக்கு அதிக சகாயம். செலவுக்குக் கையில் இல்லை. உடனே அனுப்புமாறு பிரார்த்தனை.

இவ்விதமாக யாவும் மறைத்துக் கடிதம் எழுதப்பட, வெளியூரிலுள்ள ஏமாந்த கட்டை தன் மனைவியின் கடிதத்தைக் கண்களில் ஒற்றிக்கொண்டு உடனே மணியாடர் அனுப்புகிறான். அவன் எவ்வளவோ பாடுபட்டுத் தேடிய பணம் இங்கே தாம்—தூம் என்று கண்டபடி செலவாகிறது.''—என்று தாண்டவக்கோன் சிலாது வீட்டுக் குடித்தனங்களில் நடக்கிற சீர்கேட்டைப்பற்றி விளக்கினர்.

ஃ

இது தீபாவளி மாதமாதலின், நமது கடைக்குப் புது சாக்குகள் தருவிப்பதைப் பற்றிப் பல நிர்வாக விஷயங்களைப் பேசி முடித்த பின்பு நமது கடையும் முடிவானது.

'பஹதூர்' பொன்வண்டு செட்டியார்.

பொறுமை காட்டலாம். ஆனால் என் மானம் கெட்டுப்போகிறவரையில் நான் பொறுமை காட்டுகிறதா? அதற்குத் தருமபுத்திரரல்ல நான்.

மனைவியின் நித்தியப்போர் தாளாமல் மனது முறிந்து வீட்டைவிட்டு வந்து ஹோட்டலில் புசித்து, வேறிடத்தில் தங்குபவனின் மனோவாதனையைப் புதிய கலியாண மாப்பிள்ளை அறிய முடியுமா?

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்பிரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

குருட்டுப் பரதேசிகளின் திருட்டுத்தனம்!



உண்மையாக உழைத்துப் பிழைக்க நினைப்பவனுக்குச் சோற்றையும் காணோம்; வேலைகள் எதுவும் கிடைக்கவும் காணோம்! ஆனால், ஊரையும் உலகத்தையும் மயக்கி, இன்னும் குடும்பங்களிலே உட்கார்ந்துகொண்டு நாலு பேருக்கு நடுவிலே இலை போட்டுக் கொள்ளுகிறவர்களுக்கும், சித்து-எத்து கற்றவர்களுக்கும் நன்றாகப் புசிப்பும், மேல்வகைச் செலவுக்குப் பணமும் வேண்டியவரை கிடைத்துக் கொண்டு வருவதைக் கண்ட விகடனாகிய நான் இதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் ஒருவன் என்னை வந்து வணங்கினான். அவனோடுகூட இன்னொருவன் லங்கோடு கௌபீனம் பூண்டு மொட்டையடித்த தலையோடும் நின்றுகொண்டிருந்தான். உடனே நான் அவனைப் பார்த்து "உனக்கு முப்பதுவயதுபோல் காண்கிறதே, அதற்குள் சன்னியாசமென்ன, நீ புசிப்பது மண்ணா, சாதமா, உனது வயதென்ன?" என்றேன்.

ஃ

அதற்குச் சாமியார் பதில் பேசவில்லை. அவருடைய சீடனும் என்னை வணங்கியவனுமாகிய பரமானந்தன் பேச முற்பட்டு, சாமியாரை அந்தப்படி கேட்க வொண்ணாது; சாமிகள் விடாத மோனநிஷ்டையி லிருக்கிறவர்; கேட்ட கேள்விக்கு நான் பதில் சொல்லுகிறேன்; சாமியாருக்கு வயது இப்பொழுது எண்பதுக்கு மேலாகிறது. என் தகப்பனைப் பெற்ற பாட்டன் அறுபது வருஷத்திற்கு முன் இறந்து போனார். அவர் இறந்து போகும்போது அவருக்கு எழுபது வயது. அவருடைய தகப்பனார் இருபது வயதாயிருக்கும்போது இந்த மலையாள சாமிகளைத் திரிச்சினாப்பள்ளியில் கண்டதாகவும், அப்போது ஸ்வாமிகள் இந்தப்படியே முப்பது வயதுடையவர்போல் காணப்பட்டாரென்றும் தகப்பனார் சொல்லக் கேட்டிருப்பதாய் எங்கள் பாட்டன் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். அதிலே சாமியாருக்கு வயது எவ்வளவாகிறதென்று நீங்களே கணக்குப் பார்த்துக் கொள்ள வேண்டியது. ஸ்வாமிகளுக்கு அன்னமேது? ஆகாரமேது? பால் பழம் ஒரே வேளை; அதுவும் பிறர் வலிய வேண்டிக்கொண்டால் மட்டுமே சாப்பிடுகிறார்!

ஃ

இதைக் கேட்ட விகடனாகிய நான் சிரித்துக்கொண்டு, "சாமியாரிடத்தி லிருக்கிற மகத்துவங்களென்ன, சொல்ல வேண்டும்" என்றேன். அவாது பரமானந்த சீடன் சொன்னதாவது :-"ஸ்வாமிகள் நித்தியம் ஆகாயகமனமாய்க் காசிக்குச் சென்று, கங்கையில் ஸ்நானம் செய்து இராமேச்வரத்துக்குப் போய் இராமலிங்கத்துக்குப் பூசை செய்து வருகிறார். அது ஒருவர் கண்ணுக்கும் தோற்றாது. இப்பொழுது இங்கேயிருப்பார். இன்னும் சற்று நேரத்தில் சிதம்பரத்திலிருப்பார். இன்னும் சற்று நேரத்தில் பொதியமா மலையிலிருப்பார். இங்கே யிருக்கிறப்போது மிருப்பார்' அவருடைய தெய்வீக மாயா லீலைகளைக் கண்டறிகிறது அசாத்தியம். இவர் பரகாயப் பிரவேசம் செய்வதுமுண்டு. இதெல்லாம் பரமரகசியம். அநேகம் பிறவிக்குருடருக்குக் கண் தெரியும்படி செய்தார். செத்தவர்களை எழுப்பியு மிருக்கிறார். அநேக குஷ்டரோகிகளைக் குணப்படுத்தி, அவர்களுக்கு விவாகமும்ஆகிப் பத்துப் பிள்ளைகள் பிறக்கும்படியும் செய்திருக்கிறார். சலத்தின் மீதும் நடப்பார். காசியில் ஒரு அன்னக் கொடி சட்டியிருக்கிறார். அங்கு எத்தனை ஆயிரம் ஜனங்கள் வந்தாலும் அன்னம் அளிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார். காதவழி தூர சதுரத்தில் ஒரு பட்டணம் கட்ட கடைகால் போட்டிருக்கிறார். அதில் ஒரு மைல் சதுர தூரத்தில் ஒரு கோவில் கட்டி அதில் தில்லை நடேசர் சிதம்பரம் விட்டு நடந்துவந்து அதில் நடனமாடிக் கொண்டிருக்கும்படி செய்யப் போகிறார். சாம்பசிவமூர்த்தி இரவில் இவரைத் தட்டி யெழுப்பிப் பேசிவிட்டுப் போகிறது. முன்னிருந்த குட்டைப் பல்சாமி இவரிடத்தில் உபதேசம் பெற்றுக் கொண்டவர் தான்."

ஃ

இதைக்கேட்ட விகடன் வயிறு குலுங்கச் சிரித்துவிட்டு, "குட்டைப் பல் சாமியையும் தெரியும். சகல ரோகங்களையும் விபூதி தெளித்துத் தீர்க்கிறதாக வெளிச்சம் போட்டுக் கொண்டிருந்துவிட்டுக் கடைசியில் போலீஸார் பிடிக்கவந்தபோது ஒருவருடைய மனைவியையும் அடித்துக் கொண்டு ஓடிவிட்டாரே அவர்தானே" என்றேன். சீடனும் தலைகுனிந்து வெட்கி நின்றான்.

ஃ

அப்பா பரமானந்த சீடா! உன் சாமியாரின் பெருமையை அளந்தது போதும். இருபது வருஷங்கட்கு முன்பு இந்தச்சாமி சித்தூருக்கு வந்து பிள்ளை வரம் கேட்க நெருங்கிய பெண்ணை தமது ஏகாந்த ஸ்தானத்தில் சில ராத்திரி படுத்திருந்தால் கர்ப்பமாகு மென்று சொல்லி, நடு இரவில் சாமிக்குப் பதிலாக இந்தத் திருட்டுச் சாமியே அவளோடு சேர்ந்தார். நோயாளிகள் அநேகர் இவரிடம் வர, அதற்கு இந்த சாமியார் "ஓ! பிள்ளாய்! உனக்குக் கண்டிருக்கிறது வியாதி யல்ல; பேயும் முனியும் பிடித்திருக்கிறது; குளிச்சங்கட்டவேண்டும். மூன்று வராகனெடை தங்கத் தகடு கொண்டு வா; அதில் சக்கா மெழுதி உருவேற்றிப் பூசை செய்து கொடுக்கிறேன்" என்று தங்கத் தகட்டை வாங்கி, அதற்குப் பதில் செப்புத் தகட்டைக் குளிச்சத்தில் நுழைத்துக் கட்டிக் கொள்ளச் செய்துவிட்டு, இந்தப்படி சேர்ந்த தகட்டை யெல்லாம் உருக்

தாங்கள் எழுதும் கடிதத்தில் தங்களின் குற்றச் செய்கைகளை மறைத்து மற்ற விஷயங்களைமட்டும் தெரிவிப்பது எங்கும் உள்ள சங்கதி.

கிக் கட்டியாக்கி, ஊரில் சிலருக்கு இது சாமியார் செய்த பொன்னென்று குறைந்த விலைக்கு விற்கிறதைக் கண்ட அநேகர் அதற்காக முன் பணம் கொடுக்கவும் தலைப்பட்டார்கள். அதிலும் ஏராளமாகச் சேர்ந்தது. அன்னதானம் செய்கிறதாகவும் வெளிச்சம் போட்டார். ஒரு பிராமண ஸ்திரீக்குப் பேயோட்டுகிறதாகச் சொல்லி விபூதி மந்திரித்து மார்பின்மீது தடவப் போனார். அந்தப் பெண் உடனே துடைப்பத்தால் இவரைச் சிங்காரித்தாள். ஒரு பெண் வயதாகியும் பிரவிடை யாகாதிருந்த விஷயத்தில் சாமியாரிடம் காட்ட, அவள் கற்பையே கெடுத்துவிடச் சாமியார் முயல, அந்தப் பெண் சாமியாரின் தொந்தியில் ஏறிப் பத்து இருபது உதை கொடுக்கவும் கூட்டம் கூடிவிட்டது. மறுதினம் போலீஸார் கைது செய்ய வர, நடு இரவிலேயே கம்பி நீட்டிவிட்டார். அந்தச் சாமி தானே இந்தச் சாமி?" என்று விகடன் சொல்லவும், பரமானந்த சீடனும், மலையாளச் சாமியும் மெதுவாகச் சொல்லிக்கொள்ளாமலே சென்றுவிட்டனர்.

ஃ

என் நஞ்சான் குஞ்சான்களே! சாமியாரின் சங்கதிகளைக் கேட்டீர்களா? புரட்டாசி மாதச் சனி வாரங்களில் வயிறு புடைக்க உண்ட மொட்டைச் சாமிகளின் கணக்குச் சொல்ல முடியுமா? இந்தச் சோம்பேறி ஆண்டிகளின் காலம் எப்படிக் கழிகிறதென்று கவனித்தீர்களா? மனைவி மக்களை யலையவிட்டு, காவி யுடைகளை யுடுத்தி, மொட்டை யடித்துக்கொண்டு, யோக முறைகளில் சிலவற்றைச் சிரமப்பட்டுஅப்பியாசப்படுத்திக்கொண்டு, அவைகளைப் பிறருக்குக் காட்டுவதுடன், இதெல்லாம் அற்பமானவை; இதுவரைக்கும் எனக்குப் பத்து சமாதிகள் ஆகியிருக்கின்றன; அவற்றில் முதல் சமாதியில் ஒரு பெரிய மனிதன் இரண்டாயிரம் ரூபாய்களைச் செலவு செய்தான். நாலாவது சமாதியில் ஒரு பிரபு ஐயாயிர ரூபாய்களைச் செலவு பண்ணினான்; மற்றொருவன் மூவாயிரம் ரூபாய்களைச் சூறையிட்டானென்று தற்புகழ்ச்சி செய்தும், சிஷ்யனைக் கொண்டு "அடா! அந்த ஏழாவது சமாதியில் நடந்ததைச் சொல்லடா!" என்று அவனால் சொல்லுவித்தும், இன்னும் பலவிதமான நம்பத்தகாத பொய்களைச் சொல்லி, எல்லாம் பிறர் மெய்யென்று நம்பும்படி செய்து, அதே சமயத்தில் சீச்சி! இதென்ன, எல்லாம் ஒருவிதத் தொழில் முறைதானே, என்று தானே சொன்ன புகழ்ச்சியை இழித்துத் தாழ்த்திக் கூறியும் நடிப்பார்கள். ஜனங்களோ இவற்றைக் கேட்டு மயங்கி, இத்தகைய மோசக்கார ஆண்டிகட்கு இருக்க இடமும், செலவுக்குப் பணமும், பாலுக்குப் பசுக்களும் கொடுத்துப் பாத பூஜை செய்யத் தொடங்கிவிடுகிறார்கள்!

ஃ

அல்ப அறிவுள்ளவர்கள் இவர்களின் கால்களைப் பிடித்துக் கும்பிடுகிறார்கள்; சர்க்கரை பழம் கற்கண்டு முதலியவைகளுடன் வந்து வணங்குகிறார்கள். இன்னும் பலர், இவர் மகா யோகியாக்கும். இவர் அடைந்த சமாதிகளில் யார் யார் எத்தனை யாயிரம் ரூபாய்களைச் செலவிட்டாலும், தான் அதில் ஆசையின்றிப் பரதேசிகளுக்கே செலவிடச் சொல்லுகிறாரே! தன்னுடைய இவ்வளவு பெருமைகளையும்

திருவரங்கத்திலே வருவோரங்கத்திலே பட்டைநாமங்கள் பளபளவென்றாலும், கெட்டகுணங்களும் துஷ்டத்தனமான பார்வைகளும் கிட்டிவராமலில்லை.

சித்தித்துக்கொண்டு, இவை யெல்லாம் பிறரைப் பிரமிக்கச் செய்யும் செய்கைகளே தவிர, மோக்ஷார்த்தமானவைக ளல்லவென்றும் சொல்லுகிறாரே! இந்த உலகத்தையே முற்றிலும் மறந்து, உண்டி யுடைகளைக் குறித்து ஒருவரிடத்தும் போகாமல், "உடைகோவண முண்டு" என்ற பாட்டின்படி காய் கிழங்குகளைப் பொறுக்கிச் சாப்பிட வேண்டியதென்றும் சொல்லுகிறாரே!" என்று மயங்கி மகா ஞானி யென்று பாவித்து அவர்களுக்கு அடிமையாய்விடுகின்றனர்.

ஃ


இவ்விதம் அடிமையாவதன்றியும், பொருள்களையும் விசேஷமாகக் கொடுப்பதால், அப்பொருள்களைக் கொண்டு செய்தேன் மது மாம்சங்களையும் வாங்கி யுண்டுக் களித்து, ஒருவரும் அறியாதபடி வேச்யா கிருகங்களுக்கும் செல்லுகின்றனர். இவர்கள் மனைவி மக்களோடு கூடியிருப்பார்களாயின், இவர்களுக்கு இவ்வளவு பூஜைகளும், ஏராளமான பொருள்களும், உணவுகளும், தாசிகளின் சாசங்களும் கிடைக்குமா? ஆனால், இந்த சரீரம் இருக்கிற பரியந்தம் சுகந்தான்; பிற்பாடு மனைவி—மக்கள்—மாதா—பிதா— முதலியவர்களை யலையவிட்ட பாவங்களுக்கும், உலகத்தை மயங்கப் பண்ணின பாவங்கட்கும் இறைவனிடத்தில் என்ன பதில் சொல்வார்களோ?

ஃ

இல்லறத்தைத் துறந்துவிட்ட சந்நியாசிகளுக்குத் தற்புகழ்ச்சிக் கூடுமா? பொய் வசனங்களைக் கூறலாமா? ஒருவரு மில்லாத சமயத்தில் மிக வணக்கமாய்ப் பேசுவதென்ன? கூட்டம் அதிகமாய்விடில் கர்வத்தைக் காட்டிக்கொண்டு பேசாம லிருப்பதென்ன? இதில் இன்னொரு விநோதம்; இந்த லக்ஷணத்தில் இவர்கள் பாட்டுகள் பாடத் தொடங்கிக்கொள்வதும் வேறு! இவர்களின் பாடல்கள் அவர்களின் புல்லறிவைக் காட்டிவிடுகின்றன. அதைப் பரிசோதிக்கிறவர்கள், 'அவைகள் பாட்டுகளா யிருந்தாலல்லவோ சோதிக்கலாம்; மணற்சோற்றில் கல் வேறு, சோறு வேறு உண்டோ?' என்று தங்களுக்குள் நகைத்துவிட்டு வெளிக்கு மிகு வணக்கமாய், ஸ்வாமிகளே! இப்பாடல்களுக்கு இலக்கண மேதுக்கு?—ஸ்வாநுபவமே தங்கள் திருவாக்கில் பாடல்களாக வந்தபடியாய் இவைகளைத் திருத்தக் கூடாதென்று புகழ்ந்து சொல்லிவிடுகிறார்கள்! இந்தச் சாமிகளும் மிக மகிழ்ந்து சன்மானங்களும் செய்கிறார்கள். இன்னும் தனக்கு யந்திர வேலைகள் தெரியு மென்றும், மேலே பறக்கும் சக்தி யுண்டென்றும் பிரமாதப் படுத்தி உலகினரை வஞ்சிப்பர்!

ஃ

இவ்விதமான திருட்டுப் பரதேசிகள் ஒரு மதத்திலல்ல, ஒரு இடத்திலல்ல, உலகமெங்குமே பரவிப்போயிருக்கிறார்கள். 'ஏமாற்றிப் பிழைக்கும் ஜீவனம் வெகு சுககரமானது' என்று இவர்கள் ஒரு முடிவும் செய்துகொண்டிருக்கிறார்கள். என் விகடக் குட்டிக் குழந்தைகளே! இவர்களை நம்பாதீர்கள்! மயங்காதீர்கள்! உண்மையான ஞானிகள் இந்த அல்பகாரியங்களுக்கு நெருங்கவே மாட்டார்கள்! ஏது மில்லாத ஓட்டைச் சட்டைகளிடம்தான் ஏமாற்று மோசச் சலசலப்புச் சத்தம் அதிகம் கேட்கும். விகடன் இந்தத் தீபாவளியில் இந்தத் திருட்டுப் பரதேசிகள் எல்லோருக்கும் அவர்களின் ஆசை நாயகிகளுக்குங்கூட நல்ல விருந்து செய்தனுப்ப நினைத்திருக்கிறேன். நீங்களும் அந்தச் சமயம் வந்திருந்து எல்லாச் சாமிகளின் ரகசியங்களையும் கண்டு கொள்ளுங்கள். ராம்! ராம்!! சுபம்! ரு! சுவாஹா!!



கைத்தொழில் என்பது காதலில் காட்டுகிற கை சரசம்தானும்!

ஃ

வீட்டுத்தொழில் என்பது சும்மா சும்மா பிள்ளை குட்டிகளைப் போட்டுக்கொண்டே யிருப்பதுதானும்!

ஃ

சிரிப்பதெல்லாம் முதல்முதல் சந்திக்கையில்தானும். மறுபடி அந்தச் சிரிப்புக் காட்டுவது வந்தவர் ஊருக்குப் போக வண்டியி லேறும்போது தானும்! ஃ

துள்ளிக் குதிப்பது தன்னைத்தாங் குகிறவர்கள் இருக்குமட்டுந்தானும்!

ஃ

கண்ணால் காணுத இனி வரப் போகிற புது மனைவியிடமும், புது நேசனிடமும்தான் அதிக ஆவலாம்!

ஃ

வண்டிக்கு ஓட்டமும், காலுக்கு நடமாட்டமும், கடைக்கு ஜனக்கூட்டமும், வீட்டினிடத்து நாட்டமும் இல்லாவிட்டால் அதது பாழ்தானும்!

ஃ

கபடனுன தந்தைக்கு அவரைவிடக் கபடனுன பையன் பிறப்பானும்! ஆனல், வெளிக்கு யாவருக்கும் வெகு நல்லவனுக நடப்பானும்!

ஃ

தான் காட்டிக் கொடுத்த வகையில்தான் அவன் அத்தனை உயரிய வாழ்வுக்கு உயர்ந்துவிட்டானென்று ஒரு பொச்செரிப்புக்காரன் விகடனிடம் கூற, அதற்கு விகடன் நீ காட்டிக் கொடுத்தது ஒரு பங்கானல், அதைக் கொண்டு அவன் உழைத்த உழைப்பு 99—பங்கு அதிகமா யிருக்கிறதென்றும், இனி நீ எதையும் எவருக்கும் காட்டித் தராமல் நீயே அதை உபயோகித்து உழைத்து உயர்ந்து கொள்ளென்றும், ஆனல், மற்றவரை ஏற்றுவித்துத் தான் ஏருத ஏணியைப் போல் உழைக்கும் பக்குவம் தெரியாத நீ எந்த நாளைக்கும் அவனைப்போல் உழைத்து உயரப் போவதில்லையென்றும், ஆனல் பொருமை பொச்செரிப்பு மட்டும் படத் தெரிந்துகொள்ளலாமென்றும் பதில் சொன்னனும்.

ஃ

குடிக்கு முதல் விக்கினேச்வர பூஜை சோடா லெமினெட்தானும்!

ஃ

வெளியில் உட்காராமல் வீட்டுக்குள் மடமடவென்று நுழைகிற நண்பர்கள் என்கிற போலிகளின் முகத்தில் கரியைப் பூச வேண்டுமாம்!

ஃ

மறு விவாகம் செய்துகொண்ட பெண்ணை யார் பெண்ஜாதி என்று அழைப்பதென விகடசித்தர் வினவுகிறார். ஃ

தீபாவளியின் சிறப்பு கறி தின்டியிலும், கள்ளுசாராய வெறியிலும் தான் இருக்கிறதாம்!

ஃ

தடி பிடித்தவரெலாம்
தடியர், நாசியின்
பொடி பிடித்தவரெலாம்
பொடியர், பொங்கு கள்
குடி பிடித்தவரெலாம்
குடியர், வேசைமா
ரடி பிடித்தவரெலா
மடிய ராவரே.

ஃ

என்ன என்ன நாலணு வேண்டுமா? ரொம்ப அவசரமாய்க் கேட்கிறீங்களே! நீங்கள் போனவருஷம் வாங்கின இரண்டணு இன்னும் தரவில்லிங்களே! ஞாபக மில்லிங்களா? இஇஇஇ! ஃ



அடங்காப் பெண்டீர்

கணவன் கூற்று

பெண்ணெனப் பிறந்தனை, பேதைநீ ஒருத்தி!
உன்னருங் கணவனை உயிருடன் பிடுங்கியே
தின்னும் பேயாய், தினம் பல கலகம்
பண்ணுந் தொழிலே பண்பாய்க் கொண்டனை!
[1]வன்பசி யால்மிக வாடுங் கணவனுக்
கன்னம் இட்டுமுன் அன்பின் பசையிலை:
அன்னான், அழைப்பினும் அசட்டைசெய் தகல்வாய்—
அன்பிலை: மதிப்பது மின்றெனின், நீதியோ?

ஃ

வீட்டிற் குழைக்கும் வாட்டமில் தடியனோ?
காட்டுவ தழகோ வீட்டு வேலையை
[2]ஊட்டம் அவனும் [3]வேட்டற் போதே
“நாட்டிலே நானொரு [4]நாரி வந்தேன்
ஆட்டிப் படைக்கிறான், அடுப்பிலே கிடப்பதை
[5]ஆட்டிநான் தொலைக்க ஆகலை: அவசரம்!”

ஃ

எனஅ முணுமுணு ஏதோ பலப்பல
[6]பினஅத் துவதேன்? பேதைப் பெண்ணே!
புருடனோ? அலது புரியும் வேலையோ?
பெரிது [7]புகல்நீ: பாலைக் காய்ச்சி
சட்டியில் இட்டுச் சடக்கெனச் சென்றனை:
நட்டமோ உனக்கு, இட்டமா நின்றதை
ஆற்றித் தருவது? வேற்றுமை ஏனோ?
“ஆற்றித் தருதல் ஆகாதோ எனில்
அதிலே இருப்பதை ஆற்றுவ.தேனெனப்

---

1. வன்பசி—*அதிகப்பசி*. 2. ஊட்டம்=உணவு. 3. வேட்டற்போதே—*விரும்பும்போதே*. 4. நாரி—பெண். 5. ஆட்டி—பெண். 6. பினஅத்து—*பிதற்று*. 7. புகல்—சொல்.

பதில்தா முந்துறுய்: இதற்குமோர் சோல்லா?"
என்றே மேலும், ஏதோ இரைகிறுய்—

ஃ

மனையாளாய்! இங்கே வாழ்வதைச் சற்றே
நினைப்பை ஆயின்: நினது கடனெலாம்
பண்பெனப் படும்பல பணிசெய் திருப்பதே—
உன்னைத் தொட்டே [8]மன்றல் புரிந்தது
அந்தவோர் உதவியை உன்பால் வேண்டியே:
சந்தோ டத்தோ டந்தப் பாலை
தந்தே கணவனை அருந்தநீ செய்திலை:
பாபி! ஆமோ? பழிச்சோல் அதற்குள்!
[9]நாபியை ஒத்த வாயேன்? கையேன்?
ஆடலுங் குதிப்பும் பாடலும் ஏனோ?
"விரதம் இன்று, இவ் வேளைப் பட்சணம்
தருவையோ?" என்றுல் "தருவதற் கேது?
விற்கு மிடத்தில் பெற்றுநீர் உண்க,
சோற்பம் எனக்குங் கோணர்க"என்கிறுய்;
விற்கும் இடத்தே வாங்குவ தானுல்,
வீடேன்? வாசலேன்? மனைவியேன்? மற்றுநாம்
தேடும் சாமான் சமையலு மேனோ?
கோண்டான் மீது கோடுமைக் காட்டும்
பெண்ணேன வந்த பேதைக் குணத்தாய்!
பிறர்சோல் லுனக்குப் பெரிதும் இனிக்க,
அருமையாம் என்மோழி ஆகா வேம்பே!
பரிந்தே பிறர்க்குப் பேசும் நீயோ,
மறந்தும் எனக்கா [10]மாற்றமோன் றுரைக்கலை:
காணுமேவ் வேளையும், கலகமும் எதிர்ப்பும்.
வேணுமேன் றேன்னுடன் விரோதமுஞ் சண்டையும்
கள்ளத் தனமும், உள்ளத்தில் போய்யும்
கோள்ளையாய் உள்ளதோ கோள்ளுமிவ் வில்லறம்!
எனக்கேன எமனுய் எங்கிருந் தாகினை?
உனக்கியான் செய்யும் [11]ஊறுதான் என்னே?

ஃ

[இதோ பார் கல்யாணப் பத்திரிகையை! இந்த ஆனந்தக் கல்யாணம் ஆணும் பெண்ணும் சுகித்துவாழ நடத்துவதேயன்றி, இவ்வாறு கலகப்பட்டு நிற்கவா? அதோ ஜன்னல் வழியாய்ப் பார்த்தாயா ஊர்வலத்தை? பெண்ணும் ஆணும் மங்களமான விவாகத்தை முடித்துக்கொண்டு அழகாய்ச் செல்லும்

---

8. மன்றல்—திருமணம். 9. நாபி—பாஷாணம். 10. மாற்றம்—வார்த்தை. 11. ஊறு—இடையூறு.

காட்சி எவ்வளவு ரமணீயமாய் இருக்கிறது? இந்த ஊர்வலம் சந்தோஷமாய் மனம் ஒத்து வாழ்வதற்காகவா?—அல்லது மனது புண்ணாகிக் கண்ணீர் விடுவதற்காகவா? உலகத்தில் விவாகத்தைச் சுகப்படுவதற்காகத்தான் செய்கிறார்கள். என் தலைவிதி அடங்காப்பிடாரியான உன்னை மனைவியாக்கிக்கொண்டு துக்கித்து அலறுவதற்கே ஆனது. எத்தனையோ உத்தமப் பெண்கள் இருக்க, நான் என் தாயை நம்பி மோசம்போய் இந்தப் பேயைக்கொண்டு கதறுகிறேனே! இதுவும் என் தலைவிதியா?]

ஃ

பாரிதோ! திருமணப் [12]பட்டிகை ஈதேன்?
"காரிகை கணவன் கலந்தொரு மித்தே
இன்பம் நுகர்ந்திவ் வில்லறம் நடத்தவோ?
அன்றி, அனுதினம் அவதிபட் டலையவோ?
என்பதை எண்ணுக: ஆ! ஆ! அவ்விடம்
நன்கிரு ஆண் பெண் [13]நாண்மலர் சூடி
ஊர்வலஞ் செல்லும் உயரிய காட்சியை
பார்! பார்! ஈதேன்? பவனியாம்: வதுவை
முடித்தபின், இல்லற வண்டியை ஒன்றாய்
இடிபடா திழுக்க ஏதும் நிலைஇது!
மணவாழ் வென்பது, மகிழ்ச்சிக் கலாது
மனம்புண் ணாகி மாள்வதற் காமோ?
மணவினை நோர்ப்பது மகிழ்வினைக் குறித்தே!
குணமிலி! உனையான் மனையாளாய்ப் பெற்றே
பக்கத் தவரெலாம் பார்த்தே நகைக்க
துக்கக் கடலில் சிக்குத லானேன்:
என்தலை விதியிது! என்தலை விதியிது!!
கன்னியர், பலர் பலர் கணக்கில் இருப்ப
இப்பேய் கொண்டேன் இருதயந் துடிப்பதை
எப்படிச் சகிப்பேன்? ஈசா? உனதருள்
எதுவோ? அறியேன்: இதுவும் விதியோ?
என்று விடியுமோ என்னுடை நாளே!

மு. துரைப்பிள்ளை.

12. பட்டிகை—பத்திரிகை.

சிலர் பிறர் எழுதிய விஷயத்தை வாசிக்கையில் போட் மெயில் வேகத்தில் அநேக வரிகளை விட்டுவிட்டு, எதிர்படும் முக்கிய வரிகளைமட்டும் சற்று பார்த்தபடி ஒரு நிமிஷத்திற்குள் மகா மேதாவித்தனமாய்கடைசிவரிக்கு வந்து முடிவுசெய்துவிட்டு, "பரவாயில்லை" என்று வெகு அலக்ஷியமாய்ப் பல்லை யிளிக்கிற பக்கா நரிகுட்டிகளாயுள்ளார். இவர்களின் நரித்தனத்தை மற்றவர்கள் அறியவில்லையென்று இவர்களின் எண்ணம். பாவம்!

அவளும் இவளும்.

அவளா? அவள் ஒரு ராணி. இவள் அவளை விடப் பெரிய ராணி. என்றாலும் பேதைப் பிராணி. அவள் பெயர் சாவித்திரி. அவள் கணவன் இராமச்சந்திர ஐயருக்கு ஸ்டேஷன் மாஸ்டர் வேலை. அவர் ஒரு ஸாது. இவள் பெயரோ இராஜம். புருஷன் ஜெகதீசஐயருக்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகம். அவளும் இவளும் ஒரு தாயின் வயிற்றில் பங்கு போட்டுக்கொண்டு பிறந்தவர்கள். பிறந்த வீட்டிலும் உலக கஷ்டம் தெரியவில்லை. புகுந்த இடத்திலும் ராணி வாழ்வி லிருந்தனர். பர்த்தாவுக்கேற்ற பதிவிரதைகள்.

ஃ

சாவித்திரிக்குச் சொத்து சேர்க்க அதிக ஆசை. அதற்குத் தகுந்தபடி இராமச்சந்திர ஐயரும் தாளம் போடுவார். அவருடைய ஸ்டேஷன் மாஸ்டர் வேலையில் பலவிதத்திலும் நல்ல வரும்படி; சம்பளமும் வேறே. தனக்கு நல்ல தேக திடம் இருக்கும்பொழுதே லைப் இன்ஷுரன்ஸ் கம்பெனியில் 5000 - ரூபாய்க்குச் சேர்ந்துகொண்டார். இதற்குத் தூபம் போட்டவள் —தூண்டி விட்டவள் சாவித்திரிதான். அவளுடைய தந்தை லைப் இன்ஷுரன்ஸ் கம்பெனியில் சேர்ந்துகொண்ட இரண்டாம் வருஷத்திலேயே கண் மூடிவிட, அவர் எழுதி வைத்த ஏழாயிரம் ரூபாயும் மொத்தத் தொகையாய் அவர் மனைவிக்குக் கிடைத்தது. இந்த ருசி கண்டிருந்த சாவித்திரி சும்மா இருப்பாளோ? தன் தந்தையின் சங்கதியைக் கூறித் தன் கணவனையும் லைப் இன்ஷுரன்ஸ் கம்பெனியில் சேர்த்துவிட்டாள். எதிலும் அவள் சமர்த்துக்காரிதான். பெண்கள் வைத்ததுதானே சட்டம்! அவர்கள் அதிகாரம்தானே வீட்டிலே!

ஃ

இராமச்சந்திர ஐயர் இன்ஷுரன்ஸ் கம்பெனியில் சேர்ந்ததை யறிந்த ஜெகதீச ஐயர் தானும் அப்படியே தன் பெயரைப் பதிவு செய்துகொள்ள எண்ணினார். அவர் மனைவி ராஜத்துக்கு அது இஷ்ட மில்லை. தன் தந்தை அந்தக் கம்பெனியில் சேர்ந்த இரண்டாம் வருஷத்திலேயே போய் விட்டதுபோல், தனது பர்த்தாவும் அப்படியே ஆய்விட்டால் என்ன செய்வதென்று நடுங்கினாள். செத்த பிறகு மொத்தத் தொகை வருகிறதென்கிற சங்கதியில், 'எப்போது சாவாரோ' என்று எதிர்பார்க்கும்படியும் சில இடங்களில் நேர்ந்துவிடுகிறது. ஆனதால், அந்த அமங்களமே வேண்டாம். எனக்கு நீங்களே ஆஸ்தி. வேறு சொத்து தேவையில்லை, நீங்கள் உயிரோடிருந்து எனக்கு மஞ்சளும் குங்குமமும் கிடைத்துக்கொண்டிருந்தால் அதுவே எனக்கு லக்ஷம் ரூபாய் என்று சொல்லித் தடுத்துவிட்டாள். பதிவிரதையின் வார்த்தையைப் பர்த்தாவும் ஒப்புக்கொண்டார்.

ஃ

வருஷங்கள் போய்க்கொண்டே இருந்தன. இருபத்தைந்து வருஷங்

நீ கபடமற்ற நெஞ்சாக ஆகாதபோது மற்றவர்கள் உன்னிடம் யதார்த்த அன்பாக எப்படி ஒன்றுபடுவார்கள்?

கள் சென்றுவிட்டன. இராமச்சந்திரருக்கு வயது ஐம்பதுக்கு மேலானதால் ரயில்வே விதிப்படி ஸ்டேஷன் மாஸ்டர் வேலையிலிருந்து விலகினர். வீட்டு வாழ்வில் சுகமாக இருந்து நாலு வருஷங்கட்குப் பிறகு காலஞ் சென்ருர். அவர் எவ்வளவோ சம்பாதித்தாராலுைம், அவருடைய ஆறு பெண் குழந்தைகளுக்கும் வரதக்ஷிணைகள் பலமாய்த் தந்து விவாகங்களை நடத்தியதில் ஸர்வ பாபராகிவிட்டார். மிச்சமிருந்த சொத்துக்களும் கடன்காரர் வசமாகி ஒரு வீடு மட்டும் மிஞ்சிற்று. ஒரு நிலம் மூவாயிரம் ரூபாய் கடனில் இருந்தது. சாவித்திரிக்குச் சாப்பாட்டிற்கும் வேறு வழி யில்லை. அவளுடைய பத்து வயது பையன் முதல் பாரத்தில் வாசித்துக்கொண் டிருந்தான். அவனுக்குப் பள்ளிக்கூட சம்பளம் தருவதற்கும் திண்டாட்டமானது. இந்த சமயத்தில் லைப் இன்குரன்ஸ் கம்பெனியி லிருந்து ஐயாயிரம் ரூபாய் மொத்தமாகக் கிடைக்கவே, நிலத்தைக் கடனிலிருந்து மீட்டுக் கொண்டு, பாக்கியைப் பாங்கியில் போட்டுவிட்டான். அவள் கஷ்டமும் தீர்ந்து அவள் பாடு சுகமாக முடிந்தது. இதுவும் ஒரு புது அதிர்ஷ்டந்தான். அது அவள் புத்திசாலியாய்முன் யோசனையுடன் தன் கணவனை இன்குரன்ஸில் சேர்த்ததின் பலன்.

ஃ

இராஜத்தின் சங்கதி என்ன? அவளுடைய ஒரே குமாரன் எப். ஏ. வகுப்பில் படித்துக்கொண் டிருந்தான். வயது அதிகமாய் விட்டதால் ஜகதிச ஐயர் வேலை போய் வீட்டில் உட்கார்ந்தார். போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தில் நல்ல சொத்து சேர்த்தார். காவிரி நதி யோரமாய் நன்செய் நிலங்களும் வாங்கிப் பெரிய பங்களாவும் கட்டினர். தமது உத்தியோக காலத்தில் வெகு கண்டிப்பாக நடந்து எவ்வளவு கதறினுலும் தன் டிப்பதிலேயே கண்ணு யிருந்தார். ஜெகதீச ஐயர் என்ருல் எல்லோருக்கும் நடுக்கம். அவருக்கு இரண்டு கண்களே யானுலும் ஆயிரம் கண்கள் செய்கிற வேலையை அந்த இரண்டு கண்கள் செய்துவிடும். திடீரென்று ஒரு கோயில் உத்ஸவத்தில் ஒரு பெரிய மனிதனைக் கைது செய்து விடுவார். சோதிக்கும்போதோ அந்த மனிதன் பக்காத் திருடனுக இருப்பான், பல நகைகளும் அவனிடம் அகப்படும். எப்படித்தான் அந்த ரகசியம் தெரிந்து கண்டுபிடிப்பாரோ ஆச்சரியம்தான். இவ்வளவு சமர்த்து இருந்தாலும் அவர் கொடுமையில் வெகு பேர் இரத்தக் கண்ணீர் விடும்படியானது. அந்தப் பாவத்தின் பயனே என்னவோ, ஆடி பதினெட்டில் காவிரியில் வந்த கனத்த வெள்ளத்தில், அவரது இருபதினுயிரம் ரூபாய் பெறுமான முள்ள நிலங்கள் மண் மூடிப்போய்ப் பங்களாவும் இடிந்து விழுந்து தரை மட்டமாயிற்று. "குன்றத்தனை இருநிதி படைத்தோர் அன்றைப் பகலே அழியினும் அழிவர்" என்ற சொல் ஜெகதீசரிடம் உண்மை யானது.

ஃ

பரம தரித்திரம்! யாவும் வெள்ளத்தில் போய்விட்டன. இராஜம் எல்லா நகைகளையும் கழற்றி அலமாரியில் வைத்துவிட்டு எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்துகொண் டிருந்த

போதுதான் திடீரென்று பங்களா இடிந்து விழுந்ததால், அந்த நகைகள் எங்குப் புதையுண்டிருக்கின்றனவோ தெரியவில்லை. காபி பலகாரம் போய்ப் பழைய சோறு வந்தது. ஜெகதீச ஐயர் துக்கத்தோடும் படுக்கைப் பிணியாளி யானார். தன் குமாரனைப் பி. எ. வுக்கு வாசிக்கவிட வழி யில்லை. அவனும் படிப்பை விட்டு வீட்டில் குந்த நேர்ந் தது. இவற்றை யெல்லாம் கண்ட இராஜம், "ஐயோ! அப்போதே லைப் இன்சூரன்ஸ் கம்பெனியில் சேர்ந்தி ருந்தால் பின்னுக்கு ஒரு தைரியமா வது இருக்குமே; மோசம் போனே னே; ஏமாறிவிட்டேனே; என் பேத மைப் புத்தியால் இன்சூரன்ஸ் கம்பெ னியில் சேரவேண்டாமென்று தடுத் தேனே; என் குடும்பம் இப்படியாய் விட்டதே" என்று தன் கணவரிடம் சொல்லிக் கண்ணீர் விட்டாள். ஜெக தீச ஐயர் இராஜத்தின் கண்ணைத் துடைத்து, "கற்புக்கரசியே! கண் ணே! கலங்காதே; நான் நீண்ட ஆயு ளோடு இருக்கவேண்டு மென்ற நல்ல எண்ணத்துடனேயே நீ இன்சூரன்ஸ் கம்பெனியில் சேரவேண்டாமென்று தடுத்தாய். அந்த உத்தம சிந்தைக்குப் பகவான் எவ்விதமும் காப்பாற்றுவார். நான் உத்தியோகத்தில் செய்த கொடு மையை இப்பொழுது அனுபவிக்கி றேன். இன்னும் ஒரு வருஷம் போகு. உன் மனம் குளிரும்படி க்ஷேம முண்டாகும்; பையனையும் பி. எ. வுக்கு வாசிக்க அனுப்பலாம்" என் றார். "ஒரு வருஷம் போனதும் க்ஷேமம் பிறந்துவிடுமா? — என்ன வோ உங்கள் துக்கத்தில் உளறுகிறீ கள்" என்றாள் இராஜம்.

ஃ

ஒரு வருஷமும் போய் இரண்டு மாதங்களு மாயின. ஒரு நாள் இரா ஜம் ஒரு கந்தைத் துணியை யுடுத்திச் சமையல் செய்துகொண் டிருந்தாள். ஜெகதீச ஐயர் உள்ளே வந்து இரா ஜத்தின் காலடியில் ஒரு குவியல் நோட்டுகளை வைத்து, "பதிவிரதா ரத்நமே! உன் தரித்திரம் இன்றோடு தீர்ந்தது; உன் குமாரனுடன் சுகமா யிரு; இந்தா எண்ணாயிரம் ரூபாய் நோட்டுகள்" என்றார். இராஜம் நோட்டுகளைக் கண்டதும் பிரமித்துப் போய், "யார் கொடுத்தார்?—எங்கே யிருந்து கொண்டுவந்தீர்கள்?" என் றாள். ஜெகதீச ஐயர் சொன்னதா வது:—"கற்பு லக்ஷண உத்தமியே! நான் தீர்க்காயுஸுடனும் இருக்கப் பிரார்த்தித்து லைப் இன்சூரன்ஸ் கம் பெனியில் சேரக்கூடாதென்று தடுத் தாய். வருங் காலத்தில் எந்த வாழ்வு எப்படி யிருக்குமோ? "குடை நிழலி லிருந்து குஞ்சர மூர்ந்தோர் நடை மெலிந்தோரூர் நண்ணினும் நண்ணு வர்." ஆனதால், மனிதனாகப் பிறந்த வன் தன் பிற்கால குடும்ப க்ஷேமத் துக்காக லைப் இன்சூரன்ஸ் கம் பெனியில் எவ்விதமும் சேரத்தான் வேண்டும் என்று எண்ணி, உனக்குச் சொல்லாமல் எண்ணாயிரம் ரூபாய்க்கு என்னைப் பதிவுசெய்துகொண்டேன். நான் ஜீவனோடிருந்தால் எனது 58-வது வயதில் கிடைக்கும் விதமாய்

பழைய அன்புடன் நடந்துகொள்வதென்பது——அன்புகாட்டப்பட்டு பின் ஏமாற்றமடைந்தவனால் எப்பொழுதும் சாத்தியமில்லை. வெளிக்கு அன்பு போல் நடிக்கலாம். அவ்வளவே. அன்பின் கொலை மகா பாவம்.

ஒருவனுக்கு அநுகூல சத்துருக்களா யிருக்கிறவர்களிடம் அவன் மனைவி மூடத்தனமாய்ப் பிரீதி பாராட்டுகையானது மிக்க வேதனையான சகிப்பாகும்.

ஏற்பாடு செய்திருந்தேன். போன வருஷம் எனக்கு 57-வயது. ஆனதால்தான் இனி ஒரு வருஷம் போனால் க்ஷேம முண்டாகு மென்றேன். நான் சொன்னபடி இப்பொழுது நமது கஷ்டங்கள் யாவும் தீர்ந்துவிட்டன. எனது 58-வது வயதில் இந்தத் தொகையும் கிடைத்தது" என்றார்.

ஃ

அதைக் கேட்ட ராஜம், "ஆ! அப்படியா சங்கதி! லைப் இன்சூரன்ஸ் கம்பெனியா இப்பொழுது நம்மை காப்பாற்றிற்று; நல்ல வேலை செய்தீர்கள். பகவான்தான் அந்த மாதிரி நல்ல புத்தியைக் கொடுத்து லைப் இன்சூரன்ஸில் சேரவைத்தார்" என்று ஆநந்தத்துடனும் கூறி தன் பிராணபதியை நமஸ்கரித்தாள்.

ஃ

ஜகதீச ஐயர் இடிந்த வீட்டைக் கட்ட ஆரம்பித்தார். புதையுண்டிருந்த நகைகளும் அதிர்ஷ்ட வசமாய் அகப்பட்டன. அவர் குமாரனும் இப்பொழுது பி. ஏ. வுக்கு வாசித்துக் கொண்டிருக்கிறான். நன்றாய் முடியின் எல்லாம் நன்றே.

கவித்வம்— பாண்டித்யம் என்பவை இரண்டும் வெவ்வேறு. பாண்டித்யம் பல இலக்கண இலக்கியங்களைக் கூர்ந்து ஆராய்ந்து அடைய வல்லது. கவித்வமோ அத்தகையதன்று; உள்ளத்தால் உணரப்பட்டு உத்ஸாகத்துடனெழும் ஓர் தனி சக்தியால் அருவியின் ஓட்டம் போலக் கருத்துக்கள் ஒன்றன் பின்னொன்றாகத் தாமே வந்து பொழிய அமைவதாகும். இயற்கையாக மனத்திலெழுந்த ஓர் சக்தியால் இயற்றப்படும் செய்யுள்களே என்றும் உலகில் ஓங்கி நிற்பனவாகும்.

கல்யாண சுகம்!

(யாழ்ப்பாணத்திலிருந்தும் கிடைத்த ஒரு டைரியிலிருந்து.)

1

பொங்கலுக்கென்று நீலாவை அவன் தாய்வீட்டிலிருந்தும் அழைத்து வந்ததற்காக எவ்வளவோ கூத்துகள் செய்து சமைக்காமலே வெறும் நாளாக்கினுள். ஊரெங்கும் பொங்கல். இங்கோ என் மனம் கலங்கல்.

2

"பாழுஞ் சாதம் சமைக்கவேண்டாமா?" என்றுன் நீலா. அதனுல் மனது நொந்து இராப்பட்டினி.

3

"எவர் வந்தாலும் உள்ளே வர விடாதே" என்றுசொல்லி நான் ஆபீசுக்குப் போக, என் வார்த்தைக்குச் சமயோசிதமாய் அர்த்தம் செய்யாமல், பசியுடன் என் பிரிய நண்பன் என்னைத் தேடிவந்தபோதும் கதவை மூடிக்கொண்டு"அவர் இல்லை"என்று சொல்லிவிட்டாளாம் மூட மனைவி, படுபாவி.

4

"சேலையுண்டா? ரவிக்கையுண்டா? யார் வாங்கித்தந்தது" என்றுன் நீலா.

5

"நீ நாசமாய்ப் போக; உன் கண்ணவிந்துபோக; இனி உன்னுடன் வாழ இஷ்டமில்லை; என் தாய் வீட்டுக்குப் போகிறேன்" என்று தெருவுக்கு வந்து மடமடவென்று நடந்தாள். பிறகு அழைக்கப்போக என் விரலைப் பற்களால் கடித்துத் தள்ளினுள்.

6

நீலாவுக்கு ஒரு அங்குலம் விட்டுக்கொடுத்தாலும் வந்தது மோசம்! அந்தச் சந்தின் வழியாக எல்லா துர்க்குணங்களும் வந்து நுழைந்துகொள்ளும்.

7

என்னை நீலா "கையா லாகாதவன்" என்று சொல்லிப் பல்லைக் கடித்துக் கோபம் பொங்கினுள்.

8

இன்றிரவு நீலா 'சாப்பிடுகிருயா' என்றுகூடக் கேளாமல் சாதத்தில் தண்ணீர் ஊற்றப்போனுள். அவள் வார்த்தைகள் சகிக்கத் தாளவில்லை.

9

இரவு ஹோட்டலில் புசிப்பு; என் தலைவிதி இது. ஆ! கல்யாண சுகமே!

10

காலையில் தன் தகப்பனுருக்குப் பலகாரம் வாங்கவில்லை என்றுள். "எனக்கு வயிறு சரியில்லை; எனக்கு உள்ளதை அவர் புசிக்கட்டும்" என்றேன். சிறிதுநேரம் பொறுத்துப் பலகாரம் இன்னும் தான் சாப்பிடவில்லையென்றுள்."என்?"என, "என் தகப்ப

படித்தவர்களுக்கு அவர்களுடைய அறிவின் சக்தியால் தமது எந்த அன்பின் பொய் நடிப்பையும் பிறர் உண்மைபோல் கருதும்படி காட்ட அதற்குத் தகுந்த சக்தியுண்டு. ஐயோ பாவம்! இந்த நடிப்புத்தேனில் மயங்கி விழுந்து மடியும் ஈக்கள் எத்தனை எத்தனையோ!

ளுருக்காக வைத்திருக்கிறேன்'' என்ளுன். "நான்தான் அப்போதே சொன்னேனே, எனக்கு வாங்கியதை அவ்ருக்குக் கொடு என்று; ஆனதால், நீ உன்னுடையதைப் புசித்துவிடு" என்றேன். அதன்மேல் அவள் "என் தகப்பனுர் வரமாட்டார்; மரியாதை இருந்தால்தானே ?—பலகாரம் நீங்களே உண்ணுங்கள்'' என்று என் முன்பு வைத்தாள். நானும் உண்ணவில்லை. வாங்கினுலும் தப்பிதம்; வாங்காவிடினும் தப்பிதம். பலே ஜோர் பேர் வழி—பெரிய சனியன்!

11

இன்று பகல் போஜனத்தில் தயிர் சாதத்திற்கு உப்பு கொண்டு வரும்படி கேட்க, நீலா "உப்பு இல்லை, ஆய்விட்டது'' என்ளுள். என் தாயார் "உப்புஇருக்கிறது''என்று உப்புச்சட்டியைக் கொண்டுவந்து காட்டினுர். அதற்குக் நீலா என் தாயாரைப் பார்த்து, "நீ எப்படி எடுத்து வந்து காட்டலாம்? நீ இருவருக்கும் பேதம் கற்பித்துச் சண்டை மூழக்க வல்லவா பார்க்கிறுய்?'' எனப் பெரிய சண்டையை ஆரம்பித்துக் கொண்டாள். தயிர் சாதத்தைச் சாப்பிடாமலே கோபித்து எழுந்துவிட்டேன்.

12

இன்று காலையில் காய்கறிகள் வாங்கிவந்து நீலாவிடம் தர, அவள் அதைத் தொப்பென்று கீழே போட்டுவிட்டுப் போய்விட்டாள். என் தாயார் பிறகு அவற்றைச் சமைத்தார்.

13

இன்று காலையில் வீதியில் சாணி தெளிக்காமலும் கோலம் போடாமலும் முக்காட்டைப் போட்டுக் கொண்டு படுத்துவிட்டாள். என்ன எழுப்பியும் ஒன்பது மணிவரை எழுந்திருக்கவில்லை. "பேய் கொண்டாலும் கொள்ளலாம்; பெண் கொள்ளலாகாதே.'' தெரியாது கொண்டேனே



1. இரவல் கேட்போருக்குப் பதில் :—“கொடுத்தால் இனாமாகவே கொடுத்து விடுவதுதான் வழக்கம். இரவல் தந்து, அதற்கு ஒரு ஞாபகம் வைத்திருந்து, அது திரும்பி வந்த நாளில் பெறுவதென்ற வழக்கம் என்னிட மில்லை. அது பெருந்தொல்லை. என்னிடத்தில் எதிலாவது இரண்டு புஸ்தகங்கள் இருந்தால் அதில் ஒரு பிரதி கொடுக்கத் தேடிப் பார்த்துப் பிறகு சொல்லுகிறேன். அப்படிக் கிடைத்த புஸ்தகம் இரண்டு ரூபா பெறக்கூடியதா யிருந்து, அதை உங்கட்கு இனாமாகக் கொடுத்துவிடுவதில் எனக்கு வரும் லாப மென்னவோ? இளிச்சவாயன் என்கிறபெயர்தானே?”

2. கடவுள் செயல் :— அவன் ஒருவனே சம்பாதித்துக் குடும்ப ஜீவனம் நடத்த வேண்டுமென்றிருந்தால், அவனுக்கு வந்து வாய்க்கும் மனைவியும் சிறு வயதிலேயே குடும்ப காரியங்களில் நன்கு தேர்ச்சி பெற்றவளா யிருக்கிறாள். தகப்பனாரும் அண்ணன் தம்பிகளும் இருந்து தான் வேலை செய்யாவிட்டாலும் பரவாயில்லை யென்பவனுக்கோ—வீட்டு வேலை எதும் தெரியாதவளும் அடிக்கடி தாய் வீட்டிற்குப் போகிறவளுமாகிய மங்கையே வந்து சேருகிறாள். இதுவும் கடவுள் செயல்.

3. தபாலாபீஸ் விடுமுறை நாட்கள் :—இது தெரிந்து வைக்காதவர்கள் அன்றைய தினம் கார்டு, ஸ்டாம்புக்குத் தபாலாபீஸ் சென்று ஏமாறுவர். அவசரத்தபால் தவறும்.

4. கடைக்காரனிடம் தலையசைப்பு :— கடைக்குச் சென்று குறித்த சாமான்களை வாங்கிக் கொண்டு பணம் கொடுத்துவிட்டு வருகையில் “போய் வருகிறேன்” என்ற பொருளுடன் ஒரு தலையசைப்புக் காட்டி வந்தனம் புரிவதில் ஒரு கண்ணிய மிருக்கிறது. கடைக்காரனும் அதற்கு ஒரு தலையசைப்பு வந்தனம் போடுவான். வந்தனம் போட்ட கடையில் பிறகு மெதுவாகக் கடனும் வாங்கலாம்.

5. மாப்பிள்ளையின் மனத்தவிப்பு :—மாமனார் வீட்டின் ருசிகர விருந்தை யுண்டுவரப் புதுமாப்பிள்ளைக்கு எவ்வளவோ ஆவல்தான். ஆனால், அவர்கள் அந்த சிர்வரிசை, இந்த சிர்வரிசை கொண்டுவந்து சேர்க்கவில்லையென்று பெண் வீட்டார்மீது கோபித்துக்கொள்ளும் தன் பெற்றோர்களால் தனது அந்த விருந்து ஆவல் நிறைவேறுவதில்லை. தான் வாய் திறக்கவும் கூடாது.

6. அது கூடாது :—அம்பட்டனிடத்திலும் வண்ணானிடத்திலும் சிலர் கடன் வைத்துக்கொண்டிருப்பது சரியல்ல. இரண்டு பேர்களோடு பேசிக்கொண்டிருக்கும் பொழுதும்,

---

படித்தவர்கள் காட்டும் அன்பில் கபடப் பூச்சிகள் இருப்பினும் இருக்கலாம். படிப்பறியாப் பேதை நெஞ்சினர் காட்டும் அன்பு களங்கமற்று உண்மையானதாகவும் ஆகலாம். படிப்பானது கபடத்தையும் வளர்க்கின்றது.

வெளியில் புறப்படும்பொழுதும் அவர்கள் நடுவில் வந்து சமயாசமயம் தெரியாமல் பணம்கேட்பதில் நமக்கு எவ்வளவோ தலைக்குனிவு ஏற்படுகிறது.

7. வீண் அவதி:—வீட்டில் ஒரு சாமானைக் காணோமென்று தன் முழுக் கவனத்தையும் செலுத்தித் தேடிக்கொண் டிருக்கும் போது, அதைக் கேள்வியுற்றவர்கள் வந்து "எங்கேயிருந்தது?—எப்படிக் காணாமற் போயது?" என்று பல கேள்விகளைக் கேட்கத் தொடங்குகிறார்கள். பொருளைத் தேடுவதா? இவர்களுக்குப் பதில் சொல்லித் தொலைப்பதா?

பிணியாளி ஏங்குகிறான், வைத்தியர் கொழுத்த ஆடு அகப்பட்டது என்று மகிழ்கிறார். ஒருவனைப் பிடித்த போலீஸ் வீரன் இனி தன் உத்தியோகம் உயருமென நினைக்கிறான். பிடிபட்டவனோ தவிக்கிறான். வழக்கில் சிக்கியவன் வாடுகிறான். வக்கீலோ நல்ல வரும்படி வந்ததென்கிறார். ஒருவன் சாக, அவன் வேலையில் மற்றவன் குந்த—ஒன்றை யிழக்க, மற்றவன் கண்டெடுக்க-ஒருவர் கஷ்டப்படுவது மற்றவருக்கு மிகு லாபமாகிறது.

8. வீட்டுக் காரியாதிகளைத் தகப்பனார் கவனிக்கையில் நாம் ஏன் அதில் தலையிட்டு வீண்வேலையை மேற்கொள்ள வேண்டுமென் றெண்ணிவிடுகிறான் குமாரன். திடீரென்று பிதா காலமாய்விடில் அப்பொழுது, அவன் பெரிதும் திண்டாடி எந்த வியவகாரமும் தெரிந்து கொள்ள முடியாதவனாய்த் தவிக்கும்படியாகிறது.

9. நண்பர்கள் பிறகுவருவதில்லை:—வெட்டிப் பேச்சுகளில் பொழுதுபோக்கும் நண்பர்களுக்கு இடுப்பு முறியும்படி சரியான வேலைகள் கொடுத்து இலவசமாகவே நமது காரியங்களையும் முடித்துக்கொள்ள முயன்றால் அவர்களும் தாமே நின்றுவிடுவர். அவர்களை நம்மிடம் வராதிருக்கும்படி செய்ய இதுவே சரியான வழி.

S. S. ராமாச்சாரி.

ஸ்ரீ தீபாவளி நன்கொடையாக ஒரு புதிய சந்தாதாரரை "அமிர்த குணபோதினி"க்குச் சேர்த்தனுப்புங்கள்.

என் மனதில் கோபம் இருக்கலாம். ஆனால் வஞ்சகம் கிடையாது.

தான் எழுதிய நூலாயினும் அது விலைக்குத் தரக்கூடிய—விற்றுப் பணம் வரக்கூடிய—ரொக்க சொத்து என்று நினைத்துச் சில ஆசிரியர்கள் வெகு கருமிகளாய்த் தமக்கு வேண்டியவர்களுக்குக்கூடத் தராமல் செட்டாக நிற்கிறார்கள்.

கனத்த தலைப்பாகையுடன்கூடத் தலையும் ஒரு ஆட்டம் போடுகிறதே! அது ஏன்? நடுக்க வாதமா? அப்படியுங் காணோமே. ஒரு சமயம் மூளையுருக யோசிக்கும் யோசிப்பில் அப்படி ஒரு தலையாட்டம் உண்டாகிறதோ?

பழமொழிக் குறிப்புகள்

2—அற்ப குணம்.

(365-ம் பக்கத் தொடர்ச்சி)

199. "அள்ளுவ தெல்லாம் நாய் தனக்கென்று எண்ணுமாம்."

இது அற்பர்களின் தன்மை. எதிர்படுவோரை யெல்லாம் இச்சிக்கும் புத்தி சிலருக்கு உண்டு. தனது அழகில் மயங்கிவிட மாட்டார்களா வென்று எவரையும் கொஞ்சம் நெஞ்சில் நினைத்துப் பார்த்து வாயூறுபவர்களும் உண்டு. இவ்விதமே எது எடுத்தாலும் தனக்குக் கொடுக்கமாட்டார்களா வென்று அற்பர்கள் எப்பொழுதும் எண்ணி வயிறு எரிவார்கள். ஜவுளிக்கடைக்குப் புதிய மருமகனை அழைத்துச் சென்றால், அங்கு எடுக்கும் உயர்ந்த தினுசுகளை யெல்லாம் தனக்கு மாமனார் வாங்கிக்கொடுத்து விட மாட்டாரா வென்று எண்ணுவதும் உண்டு. இவ்விதமே ஒரு அருமையான வஸ்துவை நண்பனுக்குக் காண்பித்தால், அவன் அதைத் தனக்குக் கொடுத்துவிட மாட்டானா என்று எண்ணமிடுகிறான். கிடைக்காமற் போனாலோ எரிச்சலுடன் ஆத்திரப்படுகிறான். இது அல்ப புத்திகளில் ஒன்று. இதனால் நமக்கு ஒரு அருமையான நூல் கிடைத்தபோதிலும் நமது நண்பர்களிடம் அதைக் காண்பித்துச் சந்தோஷப்படுவதற்கில்லை. அவ்விதம் காண்பிப்பினோ உடனே இரவல் கேட்கத் தொடங்கிவிடுவர். கொடுக்காவிடினோ பெரிய மனஸ்தாபம். கொடுத்தாலோ பிறகு அந்தப் புஸ்தகத்தை இந்த ஜென்மத்தில் நாம் பார்க்கப் போவதில்லை. "எங்கோ கைதவறிப் போயிருக்கிறது; சீக்கிரம் கண்டு பிடித்துக் கொடுத்துவிடுகிறேன்" என்று நெடுகச் சொல்லி ஏமாற்றிவிடுவர்.

> சோம்பல், தூக்கம், பசி, தாகம், விசனம், வெயில், காற்று, மழை, பனி முதலானதுகளை லக்ஷியம் செய்யாமல் ஒரே உறுதியுடனிருந்து உழைத்தால் தான் வெற்றி பெறலாம்.

200. "எச்சிலிரக் கடிக்கும், பற்று பறக்கடிக்கும்."

எச்சில் சங்கதி எவரும் அருவருக்கத்தக்கது. சிறு குழந்தைகள் சதா விரலைச் சப்பிக்கொண்டும் எச்சில் செய்துகொண்டும் இருப்பது வழக்கம். இது ஒரு அற்ப குணத்தைச்சேர்ந்த அசங்கிய வழக்கமே. இவ்விதம் எச்சில் செய்து கொண்டு கிடந்தால் அது தரித்திரத்திலும், இரக்க வைக்கிற பிச்சை யெடுக்கும் தன்மையிலும் கொண்டுபோய்ச் சேர்க்குமென்பது பெரியோர்களின் கருத்து. ஆகவே, சிறு குழந்தைகள் எச்சில் செய்தால் "எச்சிலிரக்கடிக்கும்"

அவ்விதம் செய்யாதே என்று புத்தி சொல்வது வழக்கம். இவ்விதமே பற்று பறக்கடிக்கும் என்பதிலும் விசேஷ அர்த்தமுண்டு. ஒரு பாத்திரத்தைச் சரிவரக் கழுவாமல் அதில் முந்தியிருந்த பதார்த்தத்தின் பற்றை அப்படியே வைத்துவிட்டு உபயோகிப்பதும் அற்பமான இழிந்த சோம்பல் வழக்கம். பற்று விடாத பாத்திரத்தில் பாலையோ எதையோ வைத்தால் அது கெட்டு விடுவதுமன்றி வியாதிக்கும் இடமாகும். அதற்காகத்தான் எந்த நல்ல சுகத்தையும் பற்று—பறக்கடிக்கும் என்பது. எப்பொழுதும் சுசிகரமாயிருக்க வேண்டியதே ஒழுங்கு. அதற்கு விரோதமாக நடந்தால் மத சாஸ்திரத்தின்படி நோக்கினாலும் அதனால் கெடுதியே நேருமென்பது திண்ணம். அன்றியும், எச்சிலாலும், பற்றுப் போகக் கழுவாமையாலும் மனதின் பரிசுத்தமும், அதிலிருந்து நடக்கையின் பரிசுத்தமும்கூடக் கெட்டுப்போக ஏதுவாகிவிடும். இது அற்ப குணத்தால் விளையும் தீங்கு.

201. "எங்கே யடித்தாலும் நாய்க்குக் காலிலே முடம்."

நாயை அடிப்பது ஒரு பெரிதல்ல. அடிக்காமல் துரத்திவிடுவதே நல்லது. நாம் சாதாரணமாகத் தெருவில் போய்க்கொண்டிருக்க, நம்மைப் பார்த்து நாய் ஒன்று குலைத்துக்கொண்டு ஓடிவந்தால், சீ சீ என்று சொல்லி அதட்டிவிட்டுச் செல்லவேண்டுமே யன்றி அதன்மீது கல்லெறிவது கூடாது. ஏனெனில், அந்தக் கல் அநேகமாய் அதன் காலிலேயே பட்டு நொண்டி நடக்கவைத்து மிக்க வேதனையைச் செய்யும். அது பாவம். அவ்விதம் அதை சிக்ஷித்து விடுவது சுலபமானாலும், அதை லக்ஷியம் செய்யாமல் ஒதுங்கிவிடுவதே நல்லது. அதுபோலவே, அற்பர்களை சிக்ஷிக்க வெகு நேரம் செல்லாது. ஒரு சொல்லில் அவர்களின் கொட்டத்தை யடக்கிவிட முடியும். ஆயினும், பெருந்தன்மையுடன் அவர்களை ஒரு பொருட்டாய் மதிக்காமல் இருந்துவிடுவதே உத்தமம்.

> துரிதத்தில் ஒருவரைப் பற்றி அவரது குணப்போக்கின் குறிப்பு தெரிந்துகொண்டு விடுபவர் சிலர் உளர். அக்குறிப்புக் குரியவர் தமது குணம் அவ்வாறல்லவென்று மறுப்பினும், அதுவே அவரது இயற்கைக் குணமாய் இருப்பதுபற்றி, அதைத் தெரிந்து கூறியவரிடத்து ஆத்திரமும் சினமும் கொள்கின்றனர். அவ்வளவே யன்றித் தங்கள் குணத்தை மாற்றுவதில்லை. ஜென்ம குணம் என்றைக்கும் போவதுமில்லை.

ஒருவன் தன் எஜமானன் ஏராளமாய்ச் சம்பாதிப்பதைப் பார்த்துத் தானும் அவ்விதமே ஒரு கடை வைப்பதற்கு அந்த எஜமானனிடமே யுள்ள பிரதான காரியஸ்தனோடு யோசித்து, அவனுக்கும் வேண்டிய சம்பளம் தான் தருவதாகவும் தன்னிடம் வேலைக்கு வந்துவிடும்படியும் சொன்னான். அந்தச் சமயம் உள்ளிருந்து கேட்டுக்கொண்டிருந்த எஜமானர் தனக்குள்ளே சிரித்துக்கொண்டார். அவனிடம் ஒரு காசுக்கு வழியில்லாதிருக்க, வியாபாரத்தின் னத்த பொறுப்பை யுணராமல் அதை ஒரு லேசாக நினைத்த அவனது அற்ப

புத்திக்கு இரக்கப்பட்டார். அவ்வளவே தவிர அவனை வேலையிலிருந்து நீக்க வில்லை. நீக்குவதற்கு அவரால் முடியுமானாலும், அது அவன் வயிற்றில் அடிக்கிற சங்கதியாதலின் அதைச் செய்ய விரும்பவில்லை. அற்பர்களை ஒரு அற்பமாக வினைத்துப் பொறுத்துக்கொண்டு போய்விடவேண்டுமென்பது கருத்து.

202. "ஈ நக்கினதும் நாய் தின்றதும்."

இரண்டும் அசங்கதம். இரண்டும் அற்ப குணம் படைத்தவை. ஈக்கும் நாய்க்கும் நல்லது கெட்டது விளங்காது. இவ்விதமே இரண்டு அற்பர்கள் தங்களைப்பற்றிச் சிலாகித்துக்கொள்வதானால் ஒருவனுடைய அற்ப குணத்தை மற்றொருவன் புகழ்ந்ததாகவே முடியும். அது ஈ நக்கினதற்கும், அதை நாய் தின்றதற்கும் சமானம்தான். ஒரு விலைமகளை மற்றொரு விலைமகளும், ஒரு குடியனை இன்னொரு குடியனும், ஒரு மோசக்காரனை இன்னொரு மோசகாரனும் புகழ்ந்துகொள்வது போல என்றும் சொல்லலாம்.

203. "எலி வேட்டைக்குத் தவிலடிப்பா?"

புலி, சிங்கம், மான் இவற்றை வேட்டையாடுவதற்குத் தவிலடித்துக் காட்டைக் கலைத்து, அவைகள் பயந்து ஓடுகையில் வேட்டையாடுவ துண்டு. ஆனால், எலியைப் பிடிப்பதற்குத் தவிலடிப்பதேது? அப்படித் தவிலடிப்பது பரிகசிக்கக்கூடியதாகும். அதாவது, ஒரு அற்பமான சங்கதியைச் செய்கையில் அதற்கு வீண் ஆரவாரங்கள் எதற்காக என்பது பொருள். அப்படி ஆரவாரம் செய்வது அற்பர்களின் குணம். அற்பர்கள் தாங்கள் செய்வது சிறு காரியமாயிருந்தாலும் அதைப் பெருமையாய்த் தமுக்கு அடியாதிரார்கள். (தொடரும்.)

சந்தா நேயர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்.

அடிக்கடி நமது சந்தா நேயர்கள் பத்திரிகைகள் வருவதில்லை என்று கடிதங்கள் எழுதுகிறார்கள். இவ்விடம் எல்லா சந்தாதார்களுக்கும் குறிப்பிட்ட தேதியிலேயே பிரதிமாதமும் பத்திரிகையைத் தடைசெய்யாமல் அனுப்பி விடுகிறோம். 20-ம்தேதிக்குள் சஞ்சிகை சேராவிடில் தபாலாபீசுக்கு எழுதிக் கேட்டுக்கொண்டு அவ்விதத்திலும் சஞ்சிகை கிடைக்காவிட்டால் அந்த மாதக் கடைசிக்குள்ளாக நமக்கு எழுதி ஒரு சஞ்சிகை பெற்றுக்கொள்ளவும். மறுமாதம் ஆரம்பித்துவிட்டால் எந்தக் காரணத்தைக் கொண்டும் பதில்சஞ்சிகை அனுப்ப முடியாது. பிரதி ஒன்றுக்கு 1-அணுஸ்டாம்பு அனுப்பவேண்டியது. அநேகமாய் தபாலாபீஸில் ஏதாவது தவறுநேரிடினும் நேரிடலாம். அதற்கு நாங்கள் ஜவாப்தாரியல்ல. விலாஸங்கள் மாற்றும் சந்தாதார்கள் ஒவ்வொருவரும் அந்தமாதத்தின் பத்திரிகை வெளியாவதற்கு 10-நாள் முன்னதாகவே தெரியப்படுத்தக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மானேஜர்.

மாமிகளும் நாத்திகளும்.

“கைபட்டாலும் குற்றம். கால் பட்டாலும் குற்றம்” என்னும் சில மாமி நாத்திமார்களிடம் பெண்கள் படுந்துன்பத்தைப்போல் பரிதபிக்கத்தக்கது வேறெதுவுமில்லை. மருமகளுக்குக் காரியம் தெரியாதிருந்தால் சொல்லியும் தரார்கள்; சரியாய்ச் செய்யாவிட்டாலும் வைவர். காரியம் செய்தாலும் வெடுக்கென்று கையிலிருந்தும் பிடுங்கித் தாம் செய்வர்; செய்யாவிட்டாலும் கோபிப்பர்.

புருடனும் மனைவியும் ஒற்றுமையாயும் மிகுந்த உண்மைக் காதலோடுமிருப்பதைக் கண்டு மனம் சகியாது பொறாமைப்படும் மாமிகளும் நாத்திகளும் அநந்தம். அப்பெண் சற்று அழகில்லாமலிருந்தால் அவளைப்பற்றி வேண்டுமென்றே அவள் எதிரில் பழித்து அவள் மனதையும் அவள் புருடன் மனதையும் புண்படுத்துவர். நாத்தி:—“அவள் அழகிற்குப் பூ வேறு வேண்டுமோ; அவள் பூ வைத்துக் கொண்டால் கொள்ளிக்கட்டையைப் பற்றவைத்ததுபோலிருக்கு, பக்கத்து வீட்டு பாலு அய்யர் நேற்று என்னைப் பார்த்து, ‘நீங்கள் பூ வைத்துக்கொண்டால்தான் ரவிவர்மா படம்போலிருக்கிறது. உங்கள் மன்னி வைத்துக் கொண்டால் கோரம் பார்க்கச் சகிக்கவில்லை’ என்றார்” என்பாள். மாமியோ, “நேற்று இரவு அவள் இருட்டில் விளக்கில்லாமலிருந்தாள். அவளைக் கண்டு நான் பயந்துபோனேன்.” என்பாள். இன்னும் பலவாறு வேண்டுமென்றே பேசிப் பழித்து அப்பெண்ணைக் கண்கலங்க வைப்பார்கள். குலமகட்குக் குணமேயன்றி அழகு முக்கியமில்லை. தன் உடலை விற்றுப் பிழைக்கும் தாசியையல்லால் வேறு எவரும் தம் அழகைப் புகழ்ந்தும் மற்றோர் அழகைப் பழித்தும் விகல்பமாய்க் கூறார்.

மாமிமார்களே! உங்கள் மருமகளை,—உங்கள் பெண் புக்ககம் சென்றபிறகு வீட்டில் பெண் இல்லை என்று ஏங்கும் கவலையைத் தீர்க்க வரும் மறு—மகளை, அனுவசியமாய்ப் பழித்தும், வைதும், அடித்தும் அவர்கள் மனதை வீணே புண்படுத்தாதீர்கள். உங்கள் மகளேபோல் அவளையும் நடத்துங்கள். ஒருகண்வெண்ணெயும் மற்றொரு கண் சுண்ணாம்பும் வேண்டாம். பெண்பாபம் பொல்லாது. நாத்திமார்களே! உங்களைத் தன் சகோதரியாகக்கருதிவரும் பெண்ணை உங்கள் நாத்தி (நாவின் தீ)யினால் சுட்டுக் கொளுத்தாதீர்கள்! நீங்கள் அவளை நடத்தப்புகுவதுபோல்தான் நீங்களும் உங்கள் புக்ககத்தில் நடத்தப்படுவீர்கள். இறுதியில் உங்கள் நாத்தி உங்களையே சுட்டுவிடும். நீங்களே கதியென்றுவரும் உங்கள் சகோதரியை அன்புடன் ஆதரியுங்கள்! சமமாக (அடிமைபோலல்லாது) நன்கு நடத்துங்கள். “ஓர் அன்பன்.”

படித்த ஆண்களும் பெண்களும் போட்ட வஞ்சகமான தந்திர அன்பின் முடிப்பை அவிழ்ப்பது எத்தகையோருக்கும் வெகு கஷ்டமாகவே யிருக்கும்

"அமிர்த குணபோதினி"

பிரமோதூத வருஷத்திய ஐப்பசி மாத பஞ்சாங்கம்

யோகம்	இங்.	தமிழ்	வாரம்	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள் முதலியவை.
ம	17	1	வெ	தச 27-18, ஆயி 24-32, சூன்யதிதி, துலாஸ்நான மாரம்
அ-சி	18	2	ச	ஏகா 20-25, மக 19-34, திதிதுவயம்.[பம் அகஸ் 29-18
சி-அ	19	3	ஞா	துவா 13-15, பூர 14-20, பிரதோஷம், திரயோதசிதிதி.
சி	20	4	தி	திர 6-11, உப 53-11, உத் 9-6, சதுர்தசி திதி.
சி	21	5	செ	● 53-14, ஹஸ் 4-13, உப 55-45, தீபாவளி, கேதாரி
				[விரதம், அகஸ் 29-11.
சி	22	6	பு	பிர 48-0, ஸ்வா 56-42, விக்ரமசக மாரம்பம், கார்த்திகை
	[illegible] (5—16)			[சுத்தம், மெய்கண்ட தேவர்,
சி	23	7	வி	துவி 44-1, விசா 54-46. [லார், ஜமாதிசானிமீ 1௳
சி-ம	24	8	வெ	திரி 41-34, அநு 54-23, விருச்சிகாயனம் 7-12, பூச
சி	25	9	ச	சது 40-54, கேட் 55-37. [ஐயடிகள் காடவர்கோன்.
அ-சி	26	10	ஞா	பஞ் 42-2, மூல 58-40, அகஸ் 29-2, மணவாளமாமுனி,
உ	27	11	தி	ஷஷ் 44-56, பூரா 60-0, சூரஸம்ஹாரம், ஷஷ்டீவிரதம்.
சி-பி	28	12	செ	ஸப் 49-21, பூரா 3-28.
அ-சி	29	13	பு	அஷ் 54-57, உரா 9-24. [கா. சாரியர்.
சி	30	14	வி	நவ 60-0, ஶ்ரவ 16-25, பொய்கையாழ்வார், பிள்ளை லோ
சி	31	15	வெ	நவ 1-6, அவி 23-50, அகஸ் 28-54; பூதத்தாழ்வார்.
அ-சி	1	16	ச	தச 7-20, சத 31-8, பேயாழ்வார்.
சி-அ	2	17	ஞா	ஏகா 13-4, பூட் 37-45, வேத திதி. [உரூஸ்.
சி	3	18	தி	துவா 17-58, உட் 43-23, திரயோதசி திதி, காதர்வாலி
சி	நவம்பர் 4	19	செ	திர 21-32, ரே 47-45, அதிதி. [திருமூலர்.
ம-சி	5	20	பு	சசி 23-45, அசு 50-45, சதுர்தசி திதி, அகஸ் 28-46.
சி-ம	6	21	வி	○ 24-32, பர 52-27, நெடுமாறர். [விரகம், இடங்கழியர்.
சி-ம	7	22	வெ	பிர 24-4, கிரு 52-55, கார்த்திகை பகுளம், கிருத்திகா
அ-சி	8	23	ச	துவி 22-15, ரோ 52-19.
சி	9	24	ஞா	திரி 19-32, மிரு 50-49,
				[திதிதுவயம்.
சி-அ	10	25	தி	சது 15-59, ஆரு 48-35,
				[பஞ்சமி திதி, அகஸ் 28-40, வித்தியா திதி.
சி	11	26	செ	பஞ் 11-46, புந 45-48.
சி	12	27	பு	ஷஷ் 7-4, பூச 42-38, மூலமந்திர யதிராஜஜீயர், சத்தி.
சி-அ	13	28	வி	ஸப் 2-3, உப 54-44, ஆயி 39-12.
ம-சி	14	29	வெ	நவ 51-25, மக 35-36. [ஸ்நான முடிவு, அகஸ் 28-32.
சி-உ	15	30	ச	தச 46-2, பூர 31-58, விருச்சிகேரவி 46-40, துலா

	ராகு		செ,கு
	15உக்கு ராசி,		
சனி	சுக	ரவி,பு,கே	

"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை,—1930